புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம் எம்.எல்.சி.,

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி B.A.,

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 1	மே 1958	ஓசை 10

			பக்கம்
அரசியல் :			
சமாதானச் சண்டை!		...	4
திருவாடானை தந்த தீர்ப்பு		...	5
தொடர் கதைகள் :			
காமனை வென்ற கண்	சுகி	...	69
வள்ளியின் உள்ளம்	கு. ப. சேது அம்மாள்	...	29
கதைகள் :			
மோகனின் மோதிரம்	எம். எஸ். கமலா	...	19
மங்கம்மா, என் அன்பே!	சிகம்பட்டி ராஜகோபாலன்	...	43
பொய்யும் மெய்யும்	த. சண்முக சுந்தர பாண்டியன்	...	53
எழுத்தாளரே! எழுதாதீர்!	ஆரெஸ்ஸெஸ்	...	59
கட்டுரைகள் :			
தெருப்பாடகன்	கன்னிக் கண்ணன்	...	9
இயற்கை வைத்தியம்	என்.எஸ். சுப்பையர்	...	16
பேட்டி :			
இசைக் குயில் ராணி	ஆரெஸ்ஸெஸ்	...	13
கலைப் பகுதி :			
சம்பூர்ண ராமாயணம்	ரசிகன்	...	81
வஞ்சிக்கோட்டை வாலிபன்	,,	...	83
... படங்கள்		...	85
...யிலே!		...	90
	ரஞ்சன் பி. ஏ. எம்.லிட்	...	93

... வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும்,
...னையே.

197693

சமாதானச் சண்டை!



புதுமை

திருவாடானை தந்த தீர்ப்பு!

திருவாடானை உபதேர்தல் முதுகுளத்தூர் பயங்கரத்திற்கு ஒரு விளக்கம்! பொதுத் தேர்தலில் காங்கிரஸ் மண்ணைக் கவ்வி விட்டது, 'காங்கிரஸ் கண்ணீர்த் துளி'களான கா. சீ. க. வெற்றி முரசம் கொட்டியது என்று கொட்டமடித்தவர்களுக்கு இத்தேர்தல் ஒரு சவுக்கடி! திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவிளையாடல்களுக்கு ஒரு திருப்பு மையம்! தனி நபர் ஒருவரின் எதேச்சாதிகார தடியடி தர்பாருக்கு பயந்து, தணிந்து வாழ்ந்த முக்குல மக்களுக்கு இத்தேர்தல் ஒரு விடிவெள்ளி! அது எப்படி? ஆயிரம் ஆயிரம் உண்மை ஜனநாயக வாதிகளின் உள்ளத்தில் எழுந்து நிற்கும் இவ்வினவுக்கு விளக்கம் தருவதே இத்தலையங்கத்தின் சீரிய நோக்கம்.

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் காங்கிரஸ் கரைந்து விட்டது, காங்கிரஸ் மதிப்பும் மரியாதையும் இழந்து விட்டது என்று கொக்கரித்தவர்களுக்கு, ஸ்தல ஸ்தாபன தொகுதியான மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி தொகுதியில் நடைபெற்ற மேல்சபைத் தேர்தலும், திருவாடானை சட்டசபைத் தேர்தலும், நல்லதோர் பாடம், படிப்பினை.

ராமநாதபுரம் மாவட்டத்தில் காங்கிரஸோ, காமராஜோ கால் வைக்கமுடியுமா என்று கேட்டவர்களுக்கு இத்தேர்தல் ஒரு விளக்கம்! மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைப் பற்றி அதிகமாக எதுவும் தெரியாத ஏனைய மாவட்டத்தினர்களை, முத்துராமலிங்கத் தேவரவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட கா. சீ. கா. என்ற ஜனநாயக காங்கிரஸ்காரர்கள் ஆடிய பேயாட்டமும் போட்ட கூச்சலும் அந்த மாவட்டங்களைப் பற்றித் தவருக எண்ணும்படிச் செய்தது. அந்த காட்டுக் கூச்சலை உண்மை என நம்பும்படியும் செய்தனர்.

இந்த பொய்யையும், புனை சுருட்டுகளையும் ஆணிவேறு அக்குவேருகப் பிய்த்தெறிந்து சுக்கு நூருக்க இந்த திருவாடானைத்தேர்தலும், மேல்சபைத் தேர்தலும் பெரிதும் பயன் பட்டதென்ருல் அது மிகையாகாது.

ஏற்கனவேஇரண்டு பொதுத் தேர்தல்களில் காங்கிரசைத் தோற்கடித்த தொகுதி இந்த திருவாடானைத் தொகுதி என்பதை நேயர்கள் நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டும். முதலில் ஆறுமுகம் சேர்வையும், அதற்கு அடுத்த பொதுத் தேர்தலில் திரு. ராமகிருஷ்ணத் தேவரும் காங்கிரஸ் அபேட்சகர்களாக போட்டியிட்டு படுதோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. முக்குலமக்கள் அதிகமாக இருக்கும் தொகுதி என்பதற்காக, இத்தொகுதியில் காங்கிரசும், ஜனநாயக காங்கிரசும் முக்குலவகுப்பைச் சேர்ந்த இருவரையே அபேட்சகர்களாக நிறுத்தி பலப் பரீட்சை நடத்தின. காங்கிரஸ் சார்பாக திரு. ராமகிருஷ்ணத் தேவரும், ஜனநாயக காங்கிரஸ் சார்பாக திரு. கரியமாணிக்க அம்பலமும் போட்டி யிட்டார்கள்.

திராவிட முன்னேற்றக்கழகம், திரு. வெள்ளையன் செட்டியார் என்பவரை நிறுத்தி தகிடுதத்தங்கள் செய்தது. அங்குள்ள ஸ்தல விவகாரங்களில் நகரத்தார் (செட்டியார்), நாட்டார் என்ற கட்சியைக் கிளப்பி காங்கிரசுக்குச்சேர வேண்டிய நகரத்தார் ஓட்டுக்களைப் பிரிப்பதற்காக தி. மு. க. வினர் திரு. வெள்ளையன் செட்டியாரை நிறுத்தி வேடிக்கை பார்த்தனர்.

இத்தொகுதியில் முக்குல மக்களில் அம்பலக்காரர் என்ற வகுப்பினர் சற்று அதிகம் என்று கூறப்படுவதும் உண்மை. இந்தத் தேர்தலில் எத்தனையோவிதமான ஜனநாயகத்துக்குப் புறம்பான உருட்டல் மிரட்டல்கள் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. அம்பலக்காரர்கள் காங்கிரசுடன் சென்ருல், ஜாதி, கிராமக் கட்டுப்பாடுகள் செய்வது, தலா 250 ரூபாய் அபராதம் விதிப்பது போன்ற கர்ண கடூரமான காரியங்களைச் செய்யவும் திரு. முத்துராமலிங்கத் தேவரின் தாசாதி தாசர்கள் தயங்கவில்லை.

தேர்தல் பிரச்சார நேரத்தில் தேவர்கள் வட்டாரத்தில் சென்று, முத்துராமலிங்கத் தேவர் அவர்களை விடுதலை செய்யவே நாங்கள் போட்டியிடுகிருேம் என்று கொக்கரித்தார்களாம். "தேவரவர்களின் விடுதலையே, அம்பலத்தின் வெற்றி" என்று கோஷமிட்டார்களாம். உள்நாட்டு குழப்பத்தில் சர்வசதாகாலமும் கண்ணும் கருத்துமாக இருக்கும் கம்யூனிஸ்டு வீரர்கள், முதுகுளத்தூரிலிருந்து போலீசை வாபஸ் பெற வேண்டுமென்று தெருத்தெருவாகச் சென்று வீரமுழக்கம் செய்து போலிக் கண்ணீர் வடித்தார்களாம்.

முக்குலமக்களின் மும்முரப் போட்டி நடக்கும் திருவாடானையில் காமராஜ் வீடு வீடாக ஏறி இறங்கி ஓட்டுக் கேட்டதாக எழுதுகிருர்கள்-பேசுகிருர்கள். இவர்கள் சொல்கிறபடி காமராஜ் "ரத்தக்கறை படிந்த கரங்களுடன்" அங்கு சென்றிருந்தால். திருவாடானை மக்கள்

இந்தத் தீர்ப்பு தந்திருப்பார்களா? காமராஜ் நியாயத்தைத் தான் செய்தார் — நீதியைத் தான் கடைப்பிடித்தார் என்று எண்ணித்தான் மக்கள் நல்ல தீர்ப்பளித்துள்ளார்கள் என்பது தெளிவாகிறதல்லவா ?

சென்ற பொதுத் தேர்தலில் 9186 ஓட்டுகள் வாங்கிய காங்கிரஸ் ராமகிருஷ்ணத்தேவர் இப்போது 19367 ஓட்டுகள் பெற்று வெற்றி அடைந்துள்ளாரென்றால் முக்குல மக்கள் எந்த அளவுக்கு ஏமாற்றுக்காரர்களிடமிருந்து தப்பி இருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஸ்தலஸ்தாபனத் தொகுதியில் நடைபெற்ற மேல்சபைத் தேர்தலில், முதுகுளத்தூர் பிரச்னைக்கு மூலகாரணமாக இருந்தவர்களில் ஒருவரென்று 'கன்னுபின்னு' வென்ற பேச்சுக்கும் ஏச்சுக்கும் ஆளான ஒருவரான ஆசிரியர் திரு. கோசல்ராம் அவர்களும், கா சீ. க. ராஜகோபாலனும், மற்றும் பலரும் போட்டியிட்டனர்.

இந்த தேர்தலின் புள்ளி விவரங்களிலிருந்து இந்த மாவட்ட மக்கள் யாரை விரும்புகின்றனர் என்பதை தங்கள் ரகசிய ஓட்டுகள் மூலம் நிரூபித்து விட்டனர். இந்த ஸ்தல ஸ்தாபன தேர்தல் பற்றி குறிப்பாக ஒன்று சொல்ல விரும்புகிறோம். அதாவது திரு. முத்துராமலிங்கத் தேவரின் கோட்டை என்று கூறப்படும் முதுகுளத்தூர் தாலுக்காவில் மொத்த ஓட்டுகள் 42. அதில் 24 ஓட்டுகள் உங்கள் ஆசிரியர் கோசல்ராம் அவர்களுக்கும், 10 ஓட்டுகள் திரு ஆதித்தனுக்கும், மீத ஓட்டுகள் கா. சீ. க. ராஜகோபாலனுக்கும் மற்றவர்களுக்கும் கிடைத்திருக்கிறதென்றால் மக்கள் எந்தப்பக்கம் இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ளவேண்டாமா?

ஜாதியைச் சொல்லி, குண்டாந்தடி தர்பார் நடத்தி மக்களை மிரட்டி ஏமாற்றி விட முடியாது என்பதற்கு இவ்விரு தேர்தல்களும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

மதுரையிலிருந்து "காவியகால கற்பரசி" ஒருவளின் பெயரைத் தாங்கி வெளிவரும் ஜனநாயக காங்கிரஸ் பத்திரிகை ஒன்று திருவாடானைத் தேர்தல் பற்றி 'கன்னு பின்னு' என்று பிதற்றி எழுதி அரசியல் கற்புக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளது என்பதை மிக வேதனையுடன் குறிப்பிடுகிறோம்.

சென்ற தேர்தல்களில் திருவாடானைத் தொகுதியில் அவர்களுடன் கூடிக்குலவி இருந்த திரு நடாராஜத் தேவர், திரு செல்லத்துரை தேவர் போன்றவர்கள் அவர்களுடைய தரத்தையும் தன்மையையும் புரிந்து கொண்டு " தேவர் கனவுலகத்திலிருந்து " விடுபட்டு உண்மை ஜனநாயக வாதிகளுடன் சேர்ந்து கொண்ட ஆத்திரத்தில் தான் அந்த 'கற்புக்கரசி' யின் பெயரைத் தாங்கி வரும் பத்திரிகைக்கு அடக்க முடியாத ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும். இவ்விதம் குண்டுச்சட்டியில் குதிரையோட்டும் குல்மால் பேர்வழிகள் இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அற்பசொற்ப ஓட்டுகளில் தான் வெற்றி பெற்றுள்ளது என்று கூறி ஆத்ம திருப்தி

அடைந்து கொள்கிறார்கள் போலும்! மண்ணைக் கவ்வினாலும் மீசையில் மண் ஒட்டவில்லையே என்று சொல்லிக் கொள்கிறார்கள், அவ்வளவுதான்.

சென்ற தேர்தலை விட இத்தேர்தலில், பத்தாயிரம் ஓட்டுக்கள் அதிகம் பெற்று காங்கிரஸ் வெற்றி அடைந்துள்ளது என்பதைச் சொல்ல அவர்களுக்கு வெட்கமாக இருக்கிறதோ என்னமோ? காங்கிரசின் இந்த மாபெரும் வெற்றியிலிருந்து கா. சீ. க. என்கின்ற ஜனநாயக காங்கிரசுக்கு செல்வாக்கு இல்லை — இல்லவே இல்லை என்பது நிரூபணமாகிறதல்லவா?

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஸ்தலஸ்தாபன தொகுதிகளில் நடைபெற்ற மேல் சபைத் தேர்தலில் ஜனநாயக காங்கிரஸ் அபேட்சகர் திரு. ராஜகோபாலன் அவர்கள் மொத்தம் 188 ஓட்டுகள் பெற்று படுதோல்வி அடைந்திருக்கிறார். அதே மேல் சபை தொகுதியில் நம் ஆசிரியர் திரு. கோசல்ராம் அவர்கள் தம் சொந்த கட்சியின் பெயரையும் செல்வாக்கையும் உபயோகிக்காமல், தன்னந்தனியாக நின்று 556 ஓட்டுக்கள் பெற்று ஜெய பேரிகை கொட்டியிருக்கிறார் என்றால் இதிலிருந்து மக்கள் எந்தப் பக்கம் நிற்கிறார்கள் என்பதைச் சொல்லியா தெரியவேண்டும்?

எனவே கண்ணை மூடிக் கொண்டு உண்மைக்குப் புறம்பாக எதையும் எழுதியும், பேசியும் மக்கள் மனதை மாற்றிவிட முடியாது என்பதை அறியாமலிருக்கும் இந்த 'அண்டப் புளுகு அப்பாவி' களுக்காக நாம் வருந்துகிறோம். அவர்கள் திருந்துவார்களாக!



அன்பர்களுக்கு நன்றி!

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்ட ஸ்தல ஸ்தாபன தொகுதியில் மேல் சபை அங்கத்தினர் பதவிக்கு போட்டியிட்ட என்னை, உங்கள் உளங்கனிந்த நல்லாதரவை அளித்து அமோக வெற்றி பெறச் செய்தமைக்கு என் அன்பு நிறைந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று போல் என்றும் நாட்டுக்கு நல்ல சேவை செய்ய உங்கள் ஆதரவு என்றும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

உங்களன்புள்ள,

K. T. கோசல்ராம் M.L.C.,

விந்தை மனிதன்

தெருப் பாடகன்

கன்னிக்கண்ணன்

விந்தை மனிதன் - கேட்பதற்குக் கூட இனிமையான சொல்தான். இந்தப் பரந்த உலகில், பிறவிகளில் பெரும் பிறவியாக, பெருமைக்குரிய பிறவியாக கருதப்படும் பிறவி இந்த மனிதப் பிறவி ஒன்றுதான். மனிதப் பிறவிகளில்தான் எத்தனை வேடிக்கையான பிறவிகள், விநோதமான பிறவிகள்? இந்தப் பிறவிகளில் ஒருவனாக இடம் பெறுபவன்தான், நம் சிந்தைக்குரிய இந்த விந்தை மனிதன். இவர்களில் கூட பல ரகங்கள் உண்டு. அந்த ரகங்களில் ஒருவன்தான் இந்த தெருப்பாடகன்!

தெரு என்ற சொல்லை மறைத்து விட்டு பாடகன் என்ற சொல்லை மட்டும் கேட்க நேர்ந்தால் உண்மையில் நாகரீக மனித உள்ளம் அவனைப் பற்றி சற்று உயர்வாகவே எண்ணும், அப்படித்தானே! தெரு என்ற அந்தச் சிறு சொல் பாடகன் என்ற பெயரோடு ஒட்டிக் கொண்டிருப்பதால் நாம் சற்று தரக் குறைவாக எண்ணி விடுகிறோமல்லவா?

இது தானய்யா விந்தை உலகம்! மனிதனுடைய தர்ம சிந்தைதான் தெருப் பாடகர்களின் பிறப்பிடம் என்று சொன்னால் அதில் தவறொன்றுமில்லை யல்லவா? இன்பமும், துன்பமும் நிறைந்த இந்த மனித வாழ்வில் தெருப் பாடகர்களும் ஒரு மதிக்கத் தக்க இனமாகவே கருதப்படுகிறார்கள் — கருதப்பட வேண்டும். இந்தத் தெருப்பாடகன் எப்படி மக்கள் மனதைக் கவரும் விந்தை மனிதனானான்? இந்த வினாவுக்கு விடை கிடைத்து விட்டால் இந்த விடைதான், இயற்கையின் சக்தியின் பெருமையாக விளங்கும்.

உலகத்தில், தேசத்தில் அல்லது ஊரில் புயல் வீசினாலும் சரி, போர் நடந்தாலும் சரி, அவர்கள் அந்த ஊர் உலக விவகாரங்களில் தங்கள் மனதைப் பறிகொடுப்பதில்லை. எல்லாம் காலச்சுழலின் மாய விளையாட்டு என்று வேதாந்தம் பேசிவிட்டு 'எல்லோரும் இன்புற்றிருப்பதுவே யன்றி யாமொன்று மறியேன் பராபரமே' என்பது போன்று கவலையும், களங்கமுமற்ற உள்ளத்தோடு அவர்கள் வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்து நடத்துவதோடு தன் இன்னிசையால், இனிமையான குரலால், துயருற்றிருக்கும், சோர்வுற்ற மனிதர்களைக்கூட, சுறு சுறுப்பாக்கி தன் வசப்படுத்தி விடுகிறார்கள். இது ஒரு வியக்கத் தக்க விந்தையல்லவா!

பழங்காலத் தமிழர் வாழ்வோடு பிணைந்தும் இணைந்துமே இந்த தெருப்பாடகர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதைநாம் நம் பழம் பெரும் காவியங்களிலிருந்தே புரிந்து கொள்ளலாம். மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு அதற்கு

தக்கபடி பண் இசைத்துப் பாட்டுப் பாடும் மனோதத்துவ சாஸ்திரம் தெரிந்தவர்கள் இவர்கள். பெண்கள் விரும்பும் இனிமையான நையாண்டிப் பாடல்களை இசைத்து அவர்களின் அன்புக்குப் பாத்திரமாகும் ஒரு அபார சக்தியும் இவர்களிடமுண்டு. அச்சக்தியைக் கொண்டுதான் இவர்கள் பசியில்லாத வயிற்றோடும், மானம் மறைத்த உடலோடும் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

ஏறத்தாழ பழங்காலத் தமிழ்க் கவிகள் அனைவருமே தெருப்பாடகர்களாகத்தானிருந்திருக்க வேண்டும். வையம் புகழும் நமது ஔவைப் பாட்டி கூட தெருத் தெருவாகச் சென்று கூழுக்குப் பாடியதாக படித்திருக்கிறோமல்லவா? இன்றையத் தெருப் பாடகன் நாளைய தேசியப் பாடகனாகலாம்; உலகம் வியக்கும் உன்னத கவியாகலாம், மக்கள் போற்றும் மாபெரும் கவிஞனாகலாம். எனவே தெருப்பாடகர்கள் என்றால் சாமான்யமானவர்களல்ல. கானச்சுவையும், கருத்துச் செறிவும் நிறைந்த கவிதா பூஷணங்கள்.

தெருப்பாடகன் என்ற ஒரு சொல்லால் இவர்கள் பொதுவாகப் பிணைக்கப்பட்டிருந்தாலும், இவர்களில் எத்தனையோ ரகங்கள் உண்டு. எத்தனை, எத்தனையோ விதங்கள் உண்டு. அவர்கள் நாட்டுக்கு நாடு, தேசத்துக்குத் தேசம், ஊருக்கு ஊர் மாறுபட்டிருப்பார்கள். நம் தமிழகத்தைப் பொருத்த மட்டில் இவர்களில் பலவித ரகங்களுண்டு. இராப் பாடி, குறி சொல்வோன், குடு குடுப்பைக்காரன், சித்தேசி, பக்திப் பிரசாரகன், போன்று எத்தனையோ ரகங்களுண்டு. இதைப் போன்று மேனாடுகளில் கூட நாடோடிப் பாடகர்கள், மதப் பிரசாரகர்கள் தெரு வழியே பாடிச் செல்வதுண்டாம். சுமத்ரா, ஜாவா போன்ற இடங்களில் இரவு நேரங்களில் தெருத் தெருவாக ஆடிப் பாடி மக்களை மகிழ்விப்பவர்கள் உண்டாம்.

தெருப்பாடகன் என்றால் பைத்தியக்காரத்தனமாக வாயில் தோன்றியதை உளறிச் செல்பவர்கள் என்று நம்மில் சிலர் தவறாக நினைப்பதுண்டு. அது சரியல்ல.

பாட்டையும் பண்ணையும் சேர்த்து இதம் தரும் இனிமையான குரலொலியில் இசை பாடிச் செல்கிறார்கள் இவர்கள். அதில் தாளங்கள், லயங்கள், ராகங்கள் போன்ற இசை இலக்கணங்கள் அப்படியே இணைந்திருப்பதை நாம் பார்க்கலாம். "மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே. தூங்கும் பனி நீரை வாங்கும் கதிரோனே" என்ற இந்த ஏற்றப் பாடலை பாருங்கள். இதுவும் ஒரு நாடோடிப் பாடலின் ரகத்தைச் சேர்ந்ததுதான். இதில் எவ்வளவு இனிமையிருக்கிறது? காதுக்கு எவ்வளவு இன்பமிருக்கிறது? கருத்தில் எவ்வளவு பொருளிருக்கிறது? கற்பனையில் எவ்வளவு ஆழம் இருக்கிறது? ஒரு சாதாரண தெருப்பாடகன் பாடிய ஒரு பாடல்தான் அது. அவன் படித்துப் பாண்டித்தியம் பெற்றவனுமல்ல, இலக்கியத்தில் புலமை வாய்ந்தவனு

மல்ல, இசையைக் கற்றுத் தேர்ந்தவனுமல்ல. எனினும் மூன்று சுவையும் நிரம்பிய ஒரு பாடலை அவன் இயற்ற முடிந்த தென்றால், இயற்கையின் படைப்புச் சக்தியின் பெருமையைத் தானே நாம் உணருகிறோம்? குருவிடம் சீடனாக இருந்து இசையை முறையாகப் பயின்ற பெரும் பாடகர்களைப் போன்று இவர்களுக்குக் குருவும் கிடையாது. இலக்கண இலக்கிய முறையும் தெரியாது. அப்படியிருந்துங்கூட, அவர்களது அந்தப் பாடல்களில் முறை தவறிய இசை இலக்கணமில்லை. குறை கூறத்தகுந்தஇலக்கியப் பிழையும் இல்லை. தன்னந் தனியாக, சுய முயற்சியிலேயே இயற்கையின் துணை கொண்டு பாட்டு இயற்றி இன்பகரமாகப் பாட்டிசைக்கும் இவர்கள் உண்மையில் விநோதமான வேடிக்கையான, வியக்கத் தகுந்த விந்தை மனிதர்களல்லவா!

இன்னும் பார்ப்போமானால், வெறும் சத்தற்ற "வெத்து'' இசையோடு மட்டும் தெருப்பாடகர்கள் பிறரைக் கவருவதில்லை. பண்ணோடு பாடும் அந்தச் சுவைமிக்க இசையோடு, கருத்தமைந்த இலக்கியமுமல்லவா, கலந்திருக்கிறது! தெருவும், திண்ணையும், சத்திரமும் சாவடியுமாக அலையுமிந்த அபூர்வப் பிறவிகளுக்கு இலக்கியத்தில் கூட இவ்வளவு புலமையிருக்கிற தென்றால் அது உண்மையில் அதிசயத்துக்குரிய விஷயமல்லவா? அது மட்டுமா? சந்தர்ப்பத்திற்கும், சூழ்நிலைக்கும் தக்கபடி சமயோசித புத்தியையும், யுக்தியையும், மிக லாகவமாகக் கையாண்டு பாடல் இயற்றி பாட்டிசைக்கிறார்கள் இந்த விந்தை மனிதர்கள். அதிலும் சிலேடைக்குப் பஞ்சமா? நகைச் சுவைக்குப் பஞ்சமா? அல்லது நளினம் கலந்த நையாண்டிக்குத்தான் பஞ்சமா? எல்லா சுவைகளிலும் பாட்டியற்றிப் பண்ணிசைக்கும் இந்தத் தெருப் பாடக இனத்தின் அபார சக்தியை நாம் என்னென்று புகழ்வது? இங்கு தானே இயற்கையின் ஈடு இணையற்ற சக்தியின் மகிமையை காண்கிறோம். கானச் சுவையும், கருத்துச்செறிவும், நிரம்பிய நாடோடிப் பாடல்களுக்கு இவர்கள் நடுநாயகமாகவிளங்குகிறார்கள் என்றால் அது மிகையாகாது. இந்த நாடோடிப் பாடல்களின் உயிர் நாடிகளே தெருப்பாடகர்கள் தானே.

"தங்கக் குடமெடுத்து தண்ணீக்குப் போறவளே என் தங்க ரத்தினமே'' என்று அவர்கள் பாடத் தொடங்கி விட்டால் அதைக் கேட்டு கிறுகிறுத்து கற் சிலைபோல் மெய் மறந்து நிற்காத பிறவிகள்தான் உண்டா?

இலக்கியத்திலும், இசையிலும் நாடோடிப் பாடல்களின் திறம்பெற்ற தெருப்பாடகர்களைப் பற்றி இது வரை குறிப்பிட்டேன். இனி எதிர் கால நல்வாழ்வுக்கு ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு எதிர்கால பலன் சொல்லும், 'கோடாங்கி' என்று அழைக்கப்படும் குடு குடுப்பைக்

காரனைப் பார்ப்போம். கந்தல் துணிகளால் ஒட்டுப் போட்டு தைக்கப்பட்ட சட்டை. முறுக்கிவிட்ட பயங்கரமான மீசை. தலைக்கனத்தை எடுத்துக் காட்டும் முண்டாசு. தோளிலே பல பழைய கந்தல் துணிகள். கையிலே ஒரு சிறு குடுகுடுப்பை. இவன்தான் குடுகுடுப்பைக்காரன்.

"ஐயாவுக்கு நல்லகாலம் பொறக்குது. நல்லகாலம் பொறக்குது குடு...குடு...குடு" என்று அவன் தாளத்திற்குத் தக்க பாடிக்கொண்டே குறி சொல்வதில்தான் எவ்வளவு நயம் இருக்கிறது? கலை இருக்கிறது! காலத்தோடு போட்டி போட்டுக் கொண்டு, கடவுளையும் ஒரு படி மிஞ்சி மக்களின் எதிர்கால பலன்களைக் கணிக்கும் துணிச்சலை என்னென்று கூறுவது!

"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்ற தாயுமானவர் பாடலையும், "பூட்டைத் திறப்பதும் கையாலே" என்ற ஞானக் கும்மியையும் பாடி சோர்ந்திருக்கும் நம் உள்ளத்திலே கடவுள் நம்பிக்கையையும் தத்துவ விசாரணையையும் கிளப்பிவிட்டு இருளுக்கு மத்தியில் பிரகாசமிருக்கிறது என்று அறிவுறுத்துகிறவன் தெருப்பாடகன் தான்.

"யாதும் ஊரே, யாவரும்கேளிர்" என்பதைப் போன்று எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து எங்கோ வாழ்ந்து எங்கு நோக்கியோ சென்றுக் கொண்டிருக்கும் இந்த விந்தை மனிதன் இசை, இலக்கியம், நாட்டுக் கலைகள், ஆருடக் குறிகள், ஞான உரைகள் இவை அனைத்திற்கும் வளர்ப்புப் பண்ணையாய் விளங்குகிறான். யோசித்துப் பார்த்தால் தெருப்பாடகன் என்ற விந்தை மனிதன் ஒரு நடமாடும் நூல் நிலையம், கலைக்கூடம், ஞானக்களஞ்சியம். அவன் வாழ்க!

[சென்னை, திருச்சி அகில இந்திய வானொலி நிலயத்திலிருந்து ஒலிபரப்பட்ட திரு கன்னிக்கண்ணன் அவர்களின் சொற்பொழிவே இக்கட்டுரை.]

அட்டைப்பட விளக்கம்

பிரம்பூரின் பெருமனை ஒன்றின் பாங்கே, பெண் குழந்தைகள் சிலர் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அக்குழந்தைகளுள் **சுடர்க்கொடி** என்ற சிறுமி ஒருத்தி சற்று சுறு சுறுப்புடன் விளையாட்டில் முதலிடம் பெற்று விளங்கினாள். அப்பக்கமாக சிறு குறும்புகள் பல புரியும் **மகிழ்நன்** என்ற சிறுவன் வந்தான். திடீரெனத் தன் கால்களால், சிறுமிகள் வருந்திக் கட்டிய அம்மணல் வீட்டை அழித்து விட்டு ஓட்டம் பிடித்தான்.

ஆண்டுகள் சில கழிந்தன. அப்பையன் வாலிபனானான். குறுகுறுப்பான விழியுடைய குழந்தை சுடர்க்கொடியும் பருவப் பெண்ணானாள். தன் தாயுடன் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தாள். அப்பக்கமாக ஒரு நாள் மகிழ்நன் வந்தான். நீர் வேட்கையாக இருந்தது. அக்குடிசைக்குச் சென்று "யார் வீட்டில்? தாகமாக இருக்கின்றது. தண்ணீர் தருவீர்களா?" என்று கேட்டுக் கொண்டு கதவைத் தட்டினான். அப்பேதைப் பெண் கதவைத் திறந்து செம்பை நீட்டினாள். கண்கள் மாறி மாறிப் பார்த்தன. அவன் செயல் மறந்து செம்புக்குப் பதில் வளையல் ஒலிக்கும் அச்செம்பினைத் தாங்கியிருந்த கரங்களைப் பற்றினான். அவளோ 'அம்மா! இதோ இவன் செயலைப் பார்' என்று கத்தினாள். ஆனால் அன்புடையுள்ளம் ஓர் கணத்தில் பேச்சை மாற்றி விட்டது! "அன்னையே! நான் கொணர்ந்த நீரை ஆவலோடு பருகினான். அது காலை விக்கலெடுத்துத் திகைத்த நிலை கண்டு பதறியதால் அப்படிக் கத்தினேன்," என்று சமயத்திற்குகந்த ஓர் பொய்யைப் புகன்றாள்.

இது கலித்தொகையில் வரும் ஓர் சித்திரம். இம்மாத நமது அட்டைக்கும் விளக்கம்!

கருத்து உதவியவர்:
வித்வான் திரு.
எஸ். முத்துக்குமரனார், தஞ்சை.

'இசைக்குயில்கள் வரிசை'

கே. ராணி

இசைக்குயில்கள் வரிசையிலே இரண்டாவது பேட்டியாக நேயர்கள் சார்பிலே, குமாரி கே. ராணியைச் சந்தித்தேன். இரண்டாவது இடத்தை இந்த வரிசையிலே குமாரி ராணிக்குக் கொடுத்ததுபற்றி, பேட்டி முடிவிலே நான் பெருமையே கொண்டேன்.

குமாரி ராணி ஓர் இசைக் குயில் மாத்திரமல்ல-பன்மொழிப் புலமை வாய்ந்த பண்டிதையும் கூட. தீந்தமிழ், தித்திக்கும் தெலுங்கு, களியூட்டும் கன்னடம், மனங்கவரும் மலையாளம், தேசியமொழி இந்தி, அண்டைநாட்டு சிங்களம், சர்வதேசிய ஆங்கிலம் அத்தனையிலும் பயிற்சி பெற்றவர் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா ?

உரையாடல் கலையிலும் குமாரி ராணி உயர்ந்திருக்கிறார். சரளமாகவும், சகஜமாகவும் இனிக்க இனிக்கப் பேசுகிறார்.

சென்னை மைலாப்பூரில் பலாத் தோப்புத் தெருவில் வசிக்கிறார், இந்த இசைக்குயில். சிறியவீடு; ஆனால் அடக்கமான, அழகிய வீடு.

'புதுமை' சென்ற மாத இதழைத் திருப்பிப் பார்த்தபடி, பேட்டிக் கட்டுரையில், 'சூடான சுவை மிக்க காபி வந்தது' என்ற பகுதியைப் படித்துவிட்டு, 'நானும் அப்பொழுது காபி தர வேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள் இல்லையா?' என்று கூறிச் சிரித்தார் ராணி.

அவர் இப்படிச் சொல்லி முடிக்கவும், அவருடைய சகோதரி கூப்பிய கரத்துடன், 'டீப் பாய்' ஏந்திய பணியாள் கட்டியம் கூற வந்து அமர்ந்தார்கள். 'கரம் சாயா' வைக் கையிலெடுத்துக் கொண்டேன். விறுவிறுப்பாகப் பேட்டி தொடங்கியது.

மூன்று சகோதரிகளுடனும், ஒரு சகோதரனுடனும், கடைசி மகளாகப் பிறந்தவர், குமாரி ராணி. முதல் சகோதரி ஓர் டாக்டர்; இரண்டாவது சகோதரி ஓர் நடிகை. மூன்றாவது சகோதரி நடனமணி. நான்காவதாகிய குமாரி ராணியோ, இசைக் குயில் !

குமாரி ராணி முதன் முதலாக குமாரி வைஜயந்திமாலாவின் நாட்டியக் குழுவிலே பாடிவந்தார். தற்செயலாக, ஓர் முறை காலஞ்சென்ற பிரபல சங்கீத டைரக்டரான திரு. ஸி. ஆர். சுப்பராமன், அவரது இசையைக் கேட்க நேர்ந்து, லாவண்யாவின் 'பாரிஜாத'த்தில் அறிமுகப்படுத்தினார்.

'எனது முதல் பிரபலமான பாட்டு 'ஒரு ஜாண் வயிறே இல்லாட்டா' என்று சிங்காரி

யில் நான் பாடியதாகும்!' என்று குறிப்பிட்டார், குமாரி ராணி.

தற்பொழுது முறையான கர்நாடக இசையை கும்பகோணம் திரு. கைலாசத்திடம் பயின்று வருகிறார்கள். குமாரி ராணி தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சிங்களம் ஆகிய பல மொழிகளில் சுமார் 400 பாடல்கள் வரை பாடியுள்ளார்கள். 'பியாமிலான்' 'பஹூத்தின் ஹூவே' ஆகிய இந்திப் படங்களில் பாடிய பாடல்களும், 'சுஜாதா' என்ற சிங்களப் படத்தில் பாடிய பாடல்களும், மிகவும் புகழ் பெற்று விட்டன.

'நமோ, நமோ, மாதா' என்ற அவர்கள் பாடியுள்ள சிங்கள தேசிய கீத இசைத் தட்டை, அடிக்கடி சிலோன் ரேடியோவில் கேட்கலாம். தமிழ் நாட்டைவிட ஆந்திராவிலும், இலங்கையிலும் அதிகப் புகழ் ஈட்டியிருக்கிறார், குமாரி ராணி. 'உங்களுக்கு எத்தகைய பாடல்களைப் பாட மிகவும் பிடிக்கும்?' என்று கேட்டேன் 'சோகமான பாடல்களும், குறும்புத்தனமான பாடல்களும் எனக்கு மிகவும் ஏற்றவை என்பதே என் கருத்து' என்று விடை கொடுத்தார். 'உணர்ச்சி பூர்வமாக, சந்தர்ப்பத்தை உணர்ந்து பாடுவது தான், பின்னணிப் பாடகியின் வெற்றிக்கு அடிப்படை. நாங்கள் பாடுவதோடு நடிக்கவும் வேண்டும்', என்று கூறுகிறார், இந்த இசை நட்சத்திரம்.

'ஓர் முறை, 'காஞ்சனம்மா' என்ற தெலுங்குப் படத்தில் சோக இசை ஒன்றை இசைக்கையில், கண்ணீர் விட்டபடியே பாடினேன்; நான் பாடி முடித்து வந்ததும், வழக்கம் போல் சிரித்ததைக் கண்டு எல்லோரும் ஆச்சரித்துடன், ''நீ உண்மையிலேயே அழுததாக அன்று நினைத்தோம்' என்று கூறினார்கள்.

'உண்மையிலேயே அழுதால் பாட முடியுமா? தொண்டை கம்மிவிடாதா? அது நடிப்பு' என்று நான் பதில்சொன்னேன், என்று தனது கருத்துக்கு விளக்கமும் தந்தார்கள். வெற்றிகரமான திரைவாழ்க்கை நடத்தும் இந்த இசைக் குயிலுக்கு கர்வம் துளி கூட கிடையாது' 'நான் ஒரு 'பச்சா' (சிறிய)

பாடகி' என்று அடிக்கடி சொல்லுகிறார்கள்.

கர்நாடக இசை வேந்தர்களாகிய தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சதர், சுவாதித் திருநாள் ஆகியோருடைய படங்கள் அவரது வீட்டை அலங்கரிக்கின்றன. வெங்கிடாஜலபதியும், அநுமாரும், ராணியின் இஷ்ட தெய்வங்கள்; அநுமாருக்குப் பொட்டிட்டு பூசை செய்து வருகிறார்கள்!

'உங்களுடைய வாழ்க்கை இலட்சியங்களைக் கூற முடியுமா?' என்று கேட்டேன்.

ஓ! தாராளமாக; நான் ஓர் டாக்டராக வேண்டும் என்று கனவுகண்டு வந்தேன், அது பலிக்கவில்லை; ஆனால், ஓர் டாக்டரையே மணக்க வேண்டும் என்பது என் முதல் இலட்சியம். இரண்டாவதாக, நௌஷாத் டைரக்ஷனில், பாடல்கள் பாட வேண்டும் என்பதும் ஓர் ஆசை' என்று கூறினார்கள். ஆங்கில நட்சத்திரங்களில் ஆட்ரி ஹெப்பர்ன், டெபாரோ கெர், ராக் ஹட்சன், டானிகே ஆகியோரும், இந்தித் திரை உலகில் திலீப் குமார், நர்கீஸும்; தமிழ் சினிமாக் கலைஞர்களில் சிவாஜி கணேசன், நாகேஸ்வரராவ் சாவித்திரி, பத்மினி, ஆகியோரும் எனது அபிமான நடிகர்கள்' என்றார்கள்!

'உங்கள் பொழுது போக்குகள்?'

'எம்பிராய்டரியும், வர்ணச் சித்திரங்கள் வரைதலும்'

'வளையல்களும், நெக்லஸும் எனக்குப் பிடித்த நகைகள்; வெள்ளையும், நீலமும் எனது பிரியமான வர்ணங்கள்' என்றும் சொன்னார் குமாரி ராணி.

கெடிகாரத்தைப் பார்த்தோம். மணி பன்னிரெண்டு. இரண்டு மணி நேரம் போனதே தெரியவில்லையே!, தாங்கள் கொடுத்த இந்த வாய்ப்பிற்காகப் 'புதுமை'க்கு எனது மனம் நிறைந்த நன்றி; உங்கள் நேயர்களுக்கு எனது அன்பு கலந்த வாழ்த்துக்கள்' என்று கூறி, மின்னல் புன்னகை இதயத்தின் மலர்ச்சியைக் காட்ட, கரம் கூப்பினார். 'இந்த இசை ராணி சினிமா உலக முடிசூடா ராணியாக நிலைத்து நின்று, நீடுவாழ்க' என்று நினைத்தபடி விடைபெற்றேன். —ஆரெஸ்லெஸ்.

ஸ்ரீ காளீஸ்வரீ
லித்தோ ஒர்க்ஸ்
தபால் பெட்டி எண் 42,
சிவகாசி.
அச்சுத் தொழில் வளர்ச்சிக்கு ஓர் அத்தாட்சி எங்கள் ஸ்தாபனம்!
ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்.

Phone: 713 Tel. ANANDJOTHI
சிற்றுண்டிகளுக்குச்சிறந்த இடம்.
ஜோதீ
ஆனந்த பவான்
காபி ஓட்டல் & போர்டிங் ஹவுஸ்
கீழமாசி வீதி, மதுரை.
N.B.—ஜோதி ஆனந்தா காபி ஒர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.

இயற்கை வைத்தியம்

என். எஸ். சுப்பையர் பி. ஏ., பி. எல்.,

தண்ணீர்

சூரிய ஸ்நானம் பண்ணின உடன், தண்ணீர் ஸ்நானம் பண்ண வேண்டும். தொப்பிளிலிருந்து தொடைகள் மத்திய பாகம்வரை, தண்ணீரில் இருக்கும்படியும், தேகத்தின் மற்ற பாகங்களை நனையாமல் வெளியில் அமர்த்திக் கொண்டு, 10 அல்லது 15 நிமிஷங்கள் ஒரு தொட்டியில் உட்கார்ந்து, வயிற்றை தொப்பிளிலிருந்துஇடுப்பு வரை ஒரு துவாலையால் தடவிக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். தேகத்தின் ஒரு பாகம் திடீரென்று குளிர்வதினுல், மற்ற பாகங்களிலுள்ள ரத்தம் அடிவயிற்றுக்கு அதிக அளவிலும், வேகத்திலும் பாய்கிறது. இதனுல் கழிவு பொருட்களை வெளியேற்றும் இதர சாதனங்களான மூத்திர கிரந்திகளும், குடலும் தூண்டப்பட்டு, இவைகள் கழிவு பொருட்களை ரத்தத்திலிருந்து துரிதமாய் இழுத்து வெளியேற்றுகின்றன. இது இடுப்பு ஸ்நானம் (Hip-bath) என்று சொல்லப்படுகிறது. இன்னும் தண்ணீரில் ஆண்குறி, பெண்குறி ஸ்நானம் (Friction Sitz-bath) முதுகு எலும்பு ஸ்நானம் (Spinal bath) என்றும், வியாதிகளுக்கு தகுந்தாற்போல் பலவித ஸ்நானங்களும் இருக்கின்றன.

மண்:

புத்து மண்ணை தண்ணீரில் கரைத்து, சமபாகம் சல்லடையில் சலித்த பொடி ஆற்றுமணலை கலந்து களியாக்கி, புண்கள், கட்டிகள், அல்லது வாதவலிகள் இருக்குமிடத்தில் பூசினுல் நல்ல குணம் காணலாம். களிமண்ணில் கரிசல் தன்மை வாய்ந்த பல அம்சங்கள் இருக்கின்றன. அமிலமும் (Acid) கரிசலும் ரசாயன அமைப்பில் ஒன்றுக் கொன்று முரண்பட்டவைகள். (Chemical oppopites) ஆகவே ரத்தத்திலிருக்கும் அமில அம்சங்களை கரிசல் அம்சங்கள் உறிஞ்சி, செயலற்றதாக்கி (Neutralise) வெளியே தள்ளுகின்றன. சாதாரண களிமண்ணை விட, அந்த மண்ணில் அதிக ஊதா கிரணங்களை (Ultraviolet rays) பாய்ச்சி, கரிசல் தன்மையுள்ள பச்சிலைகளை சேர்த்து உபயோகித்தால், வியாதிகள் 20 மடங்கு குறுகிய காலத்தில் குணமாகின்றன.

சூரியன், தண்ணீர், மண் இவைகள் மூன்றும் தான், உலகத்தில், உள்ள சகல ஜீவராசிகளின் சிருஷ்டிகர்த்தாக்கள் என்று சொல்லலாம். விதையைத் தரையில் ஊன்றினுல் மாத்திரம் அது முளைப்பதில்லை. பூமியில் அதற்கு வேண்டிய உணவு அம்சங்கள் இருந்தும் அதற்கு கிரஹிக்கும் சக்தி இல்லை. தண்ணீர் விட்டு அந்த உணவு அம்சங்களை கரைத்தால் தான் கிரகிக்கிறது. மேலும் விதை ஊன்றின இடம் நிழலானுல், செடி வெளிறி, குறுகி நசித்து விடுகிறது. மேற்படி மூன்று சாதனங்களுக்கு சிருஷ்டிக்கும் சக்தி இருக்கும் பொழுது, தாங்கள் சிருஷ்டித்த பொருட்களை நோய் நொடியிலிருந்து காப்பாற்றவும் சக்தி இருக்கவேண்டும் என்பது வெளிப்படை.

வேறொரு கட்டுரையில் இயற்கை வைத்தியத்தின் அடிப்படைத் தத்துவங்களையும், எப்படி வியாதிகளை குணப்படுத்துகிறது என்பதை பற்றியும், மருந்து உட்கொள்வதிலுள்ள தீமைகளையும் விவரிப்போம்.

உலகப் பிரசித்திப்பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு

மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்
உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.
மதுரை, ராமனதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,
5, ஸ்காட் ரோடு : : மதுரை.

உண்மையில் உறுதியாக,

குறைந்த செலவில்

உங்கள் வீட்டை கட்ட

இதோ நவீன முறை!



நிரந்தரமானது
இணைக்க சுலபம்
பார்வைக்கு
திருப்தி
கொடுக்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது!
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு &
ப்ளெயின் ஷீட்டுகள்

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

மோகனின் மோதிரம்

எம். எஸ். கமலா

“இன்னும் எத்தனை நேரம்? அவர்கள் வீட்டில் தாலிகூட கட்டியிருக்கும். புறப்படு சந்திரா!” என்று மோகன் கார் ஷெட்டிலிருந்து காரை எடுத்து வந்து காத்திருந்தான். சந்திரா வராதிருக்கவே கைக் கெடியாரத்தை உற்றுப் பார்த்தான். வினாடி முள் படபட வென்று அடித்துக் கொண்டு சுழன்று கொண்டிருந்தது. கால் மணி நேரமாயிற்று. இன்னும் சந்திரா அலங்காரத்தை முடித்துக் கொண்டு வெளிவர வில்லை. “பெண்களே இப்படித்தான். அலங்காரம் செய்து கொள்ள ஆரம்பித்து விட்டால் பொழுது போவதே தெரிவதில்லை” என்று முணு முணுத்தான். “ஆண்களுக்கே அது சகஜம்தான். பெண்ணினங்களும் “ஆகிவிட்டது” என்று சொல்லிக்கொண்டே ஏதோ ஓர் குறைபட்ட அலங்காரத்துடன் தான் வெளிவருவார்கள். பிறகு தங்கள் கணவன்மார்கள் அவசரப் படுத்தியதாக ஒரு குற்றச்சாட்டையும் சுமத்துவார்கள்” என்று ‘ஹாரனை’ அழுத்தி, அழுத்தி அடித்தான். சந்திரா கலங்கிய கண்களுடன் அவ்விடம் வந்தாள். அவன், “புறப்படத் தாமதமேன்? இன்னும் அலங்காரம் முடியவில்லையா? பாக்கி இருக்கிறதா?” என்றான். அவள் பதில் பேசாது காரில் ஏறினாள். மோகன் குறும்பாய் சிரித்துக் கொண்டே “அறு சுவையைக் கூடச் சீக்கிரம் பக்குவம் செய்துவிடுகிறார்கள். அலங்காரம் செய்து கொள்வதற்குத்தான் எவ்வளவு பொழுதிருந்திடினும் போதவில்லை” என்றான். அவள் அதற்குப் பதில் விடுக்க வில்லை.

கார் காமாக்ஷிநாதன் வீட்டுமுன் போய் ஒரு குலுக்கு குலுக்கி நின்றது. இருவரும் இறங்கி உள்ளே சென்றனர். சந்திரா பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டாள்.

கெட்டி மேளத்திற்கிடையே மாங்கலியத்தைக் கட்டிக் கொண்டிருந்தான், மணமகன் மணிவண்ணன். ஜனங்களிடையே அதி அற்புத பரபரப்பு, நாதஸ்வரத்தின் ஜிஞ்சாமிருத ஒலி. இத்தனைக்கிடையே மணமகள் மரகதவல்லி மணவறையில் அமர்ந்திருந்தாள்.

நடுக்கூடத்தில் அழகு பெற வைக்கப் பட்டிருந்த திருமணப் பரிசுகளை அனைவரும் பார்க்கச் சென்றனர். சந்திராவும், மோகனும் அங்கிருந்தவைகளைப் பார்த்துக்கொண்டே வந்தனர். மூன்றாவது வரிசையின் நடுவில் ஒரு தங்கத் தட்டில் சில விலை மதிப்புள்ள நகைகளை வைத்திருந்

தனர். அவைகளில் மோதிர வகைகள் அதிகமாயிருந்தன. அதில் ஒரு ஒற்றைக்கல் வைர மோதிரம் சுற்றும் பட்டை தீர்த்த மரகத கற்கள் பதிக்கப் பெற்று ஒளி வீசிக் கொண்டிருந்தது. அந்த மோதிரத்திற்கு எதிரில் வைக்கப்பட்டிருந்த பெரிய கண்ணுடிக்குள் அந்த மோதிரத்தின் அற்புத வேலைப்பாடு தெரிந்தது. சுற்றிலும் பதிக்கப்பெற்ற மரகதக் கற்கள் ஆலிலை வடிவத்திலும் நடுவிலிருந்த ஒற்றைக் கல்லின் கீழ் மெல்லிய தங்க இழையில், பச்சிளம் குழவி கண்ணன் கால் கட்டை விரலை சுவைக்கும் காக்ஷி அதி அற்புதமாய் தெரிந்தது. மோகன் ஆச்சரியத்துடன், "சந்திரா பார்த்தாயா? நம் வீட்டில் வெறும் ஆலிலை கிருஷ்ணன் மோதிரமிருக்கிறது. இவர்களுடையதில் ஆலிலை வடிவத்திற்கு பச்சை கற்களை பதித்திருக்கிருர்கள். யாருடைய பரிசு? பார்க்கலாம்" என்று அங்கு கட்டி தொங்க விட்டிருக்கும் பெயர் பட்டியலைப் பார்த்தான். "ஸ்ரீமதி சுந்தரமூர்த்தி" என்றிருந்தது.



"இந்தம்மாள் யார்? உனக்குத் தெரியுமா?" என்று மோகன் கேட்டபோது பின் நின்றிருந்த ஒரு கனவான் "காமாக்ஷி நாதனின் மூத்த சகோதரரின் பெண்" என்ருன். சந்திராவுக்கு ஆச்சரியமாயிருந்தது. காமாக்ஷிநாதரின் சகோதரரின் பெண் சண்பகம் அவளுடன் படித்தவள். காமாக்ஷிநாதனைப்போல் தன் பெற்ருேர்கள் பணம் படைத்தவர்களாயில்லை என்ற குறையால் அவள் மணம் செய்து கொள்ளாமல், பணத்தைத் திரட்டும் வழியை நன்கறிந்து தன் வீட்டிலேயே சங்கீத, நடன கல்வி வகுப்புகளை நடத்திஞள். தானும் உயர்தரப்பள்ளி உபாத்தியாயினியாஞள். "அவள் எப்பொழுது மணமுடித்துக் கொண்டாள்? யாரை?" என்று ஒன்றுமே விளங்க வில்லை. மோகன், சந்திராவை பார்த்து "உன் சினேகிதியாக இருப்பாளோ? உன் சினேகிதியாயிருந்தால் உனக்குத் தெரியாமலிருக்குமோ?" என்றவன் "எங்கே? நம் மோதிரத்தைப் போட்டுக் கொண்டு வந்திருக்கிருயா? இதன் அருகில் அதை வைத்துப் பார்க்கலாம். வேலைப் பாட்டில் எது சிறந்ததென்று தெரியும்."

"நான் போட்டுக் கொண்டு வரவில்லை" என்ருள். அப்படி சொல்லும் போது அவள் குரல் நடுங்கியது. மோகன் அதைக் கவனிக்காது, "நம் மோதிரத்தையும் இது போல் செய்ய வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே வெளியில் வந்தான்.

X X X

சந்திரா வீட்டிற்கு வந்ததும் இரும்புப் பெட்டியையும் பீரோவையும் குடைந்தாள். அவள் தேடிய பொருள் கிடைக்கவில்லை. எங்கு வைத்தோம் என்று யோசித்தாள். மூளை சோதித்ததே தவிர நினைவு வரவில்லை. அவள் கணவன் வீட்டாருக்கு அந்த மோதிரத்தால்தான் அதிர்ஷ்டம் வந்தது. அந்த மோதிரம் மூன்று தலைமுறைகளாய் அவர்கள் வீட்டு சொத்தாய் இருந்து வருகிறது. அதை அந்த வீட்டின் மூத்த மகனுக்குத்தான் கொடுத்து வந்தார்கள். மோகனின் இரு சகோதரர்களுக்கும்கூட அதில் சிறிது வருத்தம். எனினும் குடும்ப வழக்கம் என்ற சொல்லினல் வாயை மூடிக்கொண்டிருந்தார்கள். சந்திரா யோசனையிலாழ்ந்திருந்த போது 'டிரிணிங், டிரிணிங்' என்று 'போன்' அலறியது. ரிஸீவரை கையில் எடுத்தாள்.

"ஹலோ! சந்திரா!! இன்று மாலை நான் வரும்போது ஒரு ரத்தின வியாபாரியை அழைத்து வரு

கிறேன். நம் வீட்டு மோதிரத்திற்கேற்ற பச்சைக் கற்களைப் பொறுக்க வேண்டும். உனக்கு அவகாசமிருந்தால், காமாக்ஷிநாதன் வீட்டுக்குச் சென்று அந்த மோதிரத்தில் எத்தனை கற்களிருக்கின்றன வென்று பார்த்து, எந்த ஆசாரியிடம் செய்தார்களென்றும் கேட்டு தெரிந்து கொள்'' என்று ரிஸீவரை கீழே வைத்தான். அவள் உள்ளம் துடித்தது. "பரம்பரையாய் வந்த பவித்திர மோதிரம். அது காணவில்லை. அவர்கள் வீட்டு மோதிரத்தைப் பார்த்தால்...'' இப்படி நினைத்தபடி காமாக்ஷிநாதன் வீட்டுக்கு புறப்பட்டாள். போகும் வழியில் பழிதீர்த்த விநாயகரின் கோயில் வழியாய் வண்டி செல்லவே, வண்டியை நிறுத்தி, கோயிலுக்குள் சென்று, விநாயகரை சேவித்து, பிரகாரத்தை சுற்றும்போது,

"அந்த மோதிரத்தை எங்கண்ணுதான் செஞ்சாரு. அது அவுங்க ஊட்டுலே ரொம்ப காலமா இருக்குதாம். அந்தப் பழைய மோதிரத்திற்குப் புதுசா ஆலிலை வடிவத்திலே பச்சை கல் பதிச்சு கொடுத்திருக்குது. அந்த மோதிரத்திற்குள்ளே தங்க இழையில் கண்ணன் உருவை செதுக்கி அதன் மேல் வைரத்தைப் பதித்திருக்கிறார்கள். அந்த அழகிய கண்ணனின் உருவம் அத அற்புதமாய் செதுக்கியிருந்ததாம். அண்ணுவே ஆச்சரியப்பட்டாரு."

"எந்த அண்ணு? ஆறுமுகப் பத்தரா?''

"எங்க சொந்த அண்ணுச்சியல்ல. பெரியப்பாரு பிள்ளை, சுப்பிரமணியப் பத்தர்தான் செதுக்கு, குந்தன வேலையில் கெட்டிக்காரர். அவருதான் செஞ்சாரு. அந்த சமயத்தில் நான் அங்கிட்டு இருந்தேன். அதனுலேதான் இத்தனை வெவரமா சொல்றேன்'' என்றாள். அதைக் கேட்டு சந்திரா காமாக்ஷிநாதன் வீட்டுக்குச் சென்றாள். அச்சமயம் மரகதவல்லி எங்கோ புறப்பட சித்தமாயிருந்தாள், சந்திராவைக் கண்டதும் மகிழ்ச்சியாய் வரவேற்றாள்.

"எங்கோ புறப்படுவது போலிருக்கு. எங்கள் வீட்டில் அவருக்கு உன் கலியாணத்தில் உனக்குப் பரிசு வந்த ஆலிலை கண்ணன் மோதிரம் போல் செய்ய வேண்டுமாம். மாதிரி பார்க்கக் கொடுக்கிருயா?''

"அதைத் தவிர்த்து எதை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். எக்காரணத்தைக் கொண்டும் அதை எவரிடமும் கொடுக்கக் கூடாதென்று அப்பா சொல்லியிருக்கிறார்'' என்றவள், "அது அப்பாவிடமிருக்கிறது'' என்றாள். சந்திரா சோர்வுடன் வீட்டிற்குச் சென்றாள்.

x x x

முத்துக்குளம் முத்து ராமன், மோகனின் முப்பாட்டன். அவர் வெகு எளிய நிலையில் பண்ணையார் பரமேச்வரரின் நிலங்களை வாரத்திற்குப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பரமேச்வரரின் பிள்ளை சதாசிவன் சகல துர்க்குணங்களும் நிரம்பியவனுய் கண்ணை மூடிக் கொண்டு காசைக் கரைத்ததுமன்றி, நிலபுலன்களை அடமானம் வைத்து, பொய் கையொப்பமிட்டு சிறைக்குப் போகும் நிலைக்கு வந்தான். பண்ணையார் புழுவாய்த் துடித்தார். ஒரே மைந்தன் சிறைக்குச் சென்ருல் அவமானம். அவன் மனைவி கருவுற்றிருந்தாள். அவள்...அந்த அதிர்ச்சியில்... ஏதாவதாகி விட்டால் குலப் பெருமையும் நாசமாகி, குலக்கொழுந்தும் நசித்து விடும்.

நீதிபதி தீர்ப்புக் கூறி எப்படியும் சதாசிவத்தை தண்டனைக்கு ஆளாக்கி விடுவார். முத்துக்குளமே இந்த அதிசயக் கேஸின் முடிவைப் பார்க்க துடிதுடித்து நின்றது. பண்ணையார் தம் பூஜையறையிலமர்ந்து கடவுளைக் கட்டிக் கொண்டு கதறியபடி இருந்தார். கோர்ட்டுக்கு புறப்படும் நேரமா

யிற்று. இந்த சமயத்தில் பண்ணை யாள் முத்துராமன் எங்கோ ஊரை விட்டுப் போயிருந்தான்.

அன்று கோர்ட்டில் வழக்கை வாதித்துக் கொண்டிருந்தனர். நீதி பதி தம் முடிவைச் சொல்லத் தொடங்கும்போது முத்துராமன் ஓடோடி கோர்ட்டில் நுழைந்து தங்கள் வக்கீலிடம் ஒரு கடிதத்தை யும், பண முடிப்பையும் கொடுத் தான். அந்தக் கடிதத்தைப் பார்த்த வக்கீல் அதை நீதிபதியிடம் ஒப்ப டைத்தார். அதில்,

"என் காதலர் சதாசிவத்திற்கு ஒன்றும் தெரியாது. நான்தான் ராஜ துரையின் பணத்தைப் பறிக்க பொய் கையொப்பமிட்டேன். நான் இனி பிழைக்கமாட்டேன் என்று டாக்டர் சொன்னதால் செய்யாத குற்றத்திற்காக என் ஆசைநாயகன் இறப்பானேன்? என்று என் இடு காடு வைராக்கியம் இடித்துக் கூறவே உண்மையை முத்துராம னிடம் எழுதிக் கொடுத்துள்ளேன். சதாசிவம் குற்றவாளியல்ல." இதைப் படித்த நீதிபதி முத்து ராமனை ஆச்சரியத்துடன் பார்த் தார். முத்துராமன் கொடுத்த பண முடிப்பில் சதாசிவம் கையாடிய தொகை கோர்ட் சிலவு உள்பட இருந்தது. அதைப் பார்த்ததும் சதாசிவத்தை விடுதலை செய்து விட்டனர்.

பண்ணையார் பரமசிவம் முத்து ராமனின் உண்மையன்பிற்கு வியந்து "முத்து! என் குலப் பெயரைக் காப்பாற்றினுய். என்னி டம் உன் மேன்மையான குணத் திற்கு ஏற்றது ஒன்றுமில்லை. என் முதாதையர் வைத்திருந்த இந்த சந்தான கோபாலன் வைரத்தை எடுத்துக்கொள். இது இருக்குமிடத் தில் எவ்வித குறைவும் ஏற்படாது. உனக்கு நான் பட்ட கடனை இதன் மூலமாய் தான் தீர்க்கக் கூடும். வேறு ஒன்றுமில்லை." என்று அதைக் கொடுத்தார். முத்துராம னுக்கு அதை வீட்டில் வைக்க மன மில்லாததால் மோதிரமாய் கட்டிப் போட்டுக் கொண்டான்.

முத்துக்குளம் பண்ணையார் களெல்லாம் தத்தம் நிலங்களைப் பயிரிட அவனை அழைத்தார்கள். முத்துராமன் பத்தாண்டுகளில் பணக்காரனுகி விட்டான். அவன் சந்தானங்கள் வியாபாரிகளாய் பம் பாயில் பெருத்த சீமான்களாயினர். முத்துராமன் இறக்கும்போது அந்த மோதிரத்தின் சரித்திரத்தைச் சொல்லி, அந்த மோதிரம் சத்தியத் தின் பிறப்பிடம்; அது வீட்டு மூத்த பையனிடம்தான் பாரம்பரியமாய் இருக்க வேண்டுமென்று சொல்லி விட்டார்.

அதன்படி மோகனுக்கு அந்த மோதிரம் கிடைத்தது. அவன் மனைவிமேல் வைத்த அபார அன்பால் அதை அவளிடம் அளித்தான். அந்த மோதிரம் காண வில்லை என்றால் எப்படிச் சகிப் பாள்? அவளுக்கு துக்கம் பீறிட்டுக் கொண்டுவந்தது. நேராய் வீட்டிற்கு வந்து தன் அறையில் குப்புறப் படுத்து தேம்பித் தேம்பி அழுதாள். பொழுது போனதே தெரியவில்லை.

இருண்டுவிட்டது. ஆபீஸிலி ருந்து வந்த மோகன் "சந்திரா! சந்திரா!!" என்று அன்பொழுக அழைத்துக் கொண்டு வந்தவன் முகம் கள்ளுப் பானையைப்போல் கரைபடிந்து கனத்துக் கிடக்க, படுத் திருக்கும் சந்திராவை "எதற்காக அழுகிருய்?" என்று அணைத்துக் கொண்டான். அவள் சிவந்த கண் களில் நீர் சுழன்றது. பேச்சுத்தடு மாறியது. நெஞ்சைத் துக்கம் அடைக்க,

"என்னை மன்னியுங்கள். மோதி ரம் எங்கோ காணவில்லை" என் ருள். மோஹன் தலையில் இடி வீழ்ந் தாற்போல் நிலைகுலைந்து நின்ருன். அவன் கண்களில் நீர் சோர்ந்தது,

"சந்திரா! எங்கள் குலதெய் வத்தைப் போக்கடித்து விட்டாயே? நான் உன்னிடம் கொடுத்தபோதே என் தம்பிகள் என்னை அருவருத்

ார்களே! அதற்கேற்றுப்போல் ....'' என்று குரல்வளையைப் பிடித்துக் கொண்டான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. இருவரும் சேர்ந்து அழு தனர். கணவன் கண்களில் நீரைக் கண்டதும் சந்திராவின் மனம் தளர்ந்தது. எதற்கும் அஞ்சா மோஹன் அழுவதைப் பார்த்ததும் அவள் இன்னும் அதிகமாய் அழு தாள். அவன் அவளைத்தேற்றினன். அவன் ஆறுதல் பேச்சுக்கு செவி

சாய்க்காமல் வாய்விடாது அழு தாள். உணவை மறந்தாள். உறக் கத்தை மறந்தாள். அன்பான கண வனை மறந்தாள்; அழுகையை மறக்கவில்லை. மோஹன் தன் குடும்ப டாக்டரை அழைத்துக் காட் டினன். அவளுக்கு ஏதோ மன அதிர்ச்சி ஏற்பட்டிருக் கிறது; அதிர்ச்சி வைத் தியம் தான் செய்ய வேண்டுமென்று சொன் ஞர்.

*

சந்திராவை அதிர்ச்சி வைத்திய நிபுணர் தன்ராஜ் வைத்தியசாலை யில் சேர்த்துவிட்டு, துப்பறியும் காரியாலயத்தில் தன் நகை காணு மற்போனதை யறிவித்தான். துப் பறியும் நிபுணர் துரை ராஜசிங்கம் மோஹன் வீட்டுக்கு வந்தார்.

மோஹனிடம் விஷயத்தை யறிந்து நேராய் தன்ராஜ வைத்திய சாலைக்குச் சென்றார். அங்கு சந்திரா ஓர் அறையில் அழுது கொண்டிருந்தாள். துப்பறிபவர் அவளருகில் சென்று "இதோபார்! உன் மோதிரம்" என்று தன் கையிலிருந்த மோதிரத்தை நீட்டினார். அது வெறும் ஆலிலை கிருஷ்ணன் இறு மல் மோதிரம். அதை உற்றுப்பார்த்தவள் "சீ! இதல்ல, என்னையா ஏமாத்தப் பார்க்கிறே! சுப்பிரமணியப் பத்தரை ஏமாத்தினப்போலே என்னை ஏமாற்ற முடியுமா?" என்றாள்.

துரைராஜர் கண்கள் மின்ன சந்திராவை உற்றுப் பார்த்துக் கொண்டே "பூ! அவன் உதவாக்கரை. அவனுக்கு வேலையே தெரியாது. ஆறுமுகப் பத்தன் நல்ல வேலைப்பாடுடையவன்" என்றார். "ஹி, ஹி, உனக்கென்ன தெரியும்? அவன் அக்காவே சொன்னாளே! அந்தப் பழைய கண்ணன் மோதிரத்தைச் சுற்றி ஆலிலை வடிவத்திற்கு பச்சை கற்களைப் பதித்தவண்ணு......ஊம் ......ஊம்.....எப்படிப் போச்சோ! என் அத்தான் அழுறாரு. நானும் அழுகிறேன். நகைவரும். அழுவேன். எடுத்துக் கொண்டு போவார். அழுவேன். அடிப்பார். அழுவேன். நீ என்னபண்ணுவே?" என்றாள்.

"சிரிப்பேன்." என்றார்.

"நான் அழுவேன். நீ......"

"அழுவேன்" என்று எழுந்து போய்விட்டார்.

காமாக்ஷிநாதன் காலை பத்திரிகையை படித்துக் கொண்டிருந்தார். மரகதவல்லி வீணை வாசித்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் அவர் வீட்டின் முன் ஓர் கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒருகையில் ஒரு தோல் பெட்டியும், மற்றொரு கையில் ஒருதோல் பையுமாய் ஒரு கனவான் இறங்கினார். காமாக்ஷிநாதன் அவரை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தார். அவர் தம் கையிலிருந்த குறிப்புப் புத்தகத்தை அவரிடமளித்தார். அதில் நகரத்திலுள்ள பெரிய மனிதர்களெல்லாம் அவரைப் பற்றியும், அவரிடமுள்ள நகைகளைப் பற்றியும் வானளாவப் புகழ்ந்து எழுதியிருப்பதைப் பார்த்தார்.

காமாக்ஷிநாதன் அந்த ரத்தின வியாபாரியிடம் சிறிது நேரம் பேசி, மரகதவல்லியை அழைத்து நகைகளைப் பார்க்கச் சொன்னார். அதில் லக்ஷ்மி, சரஸ்வதி, உமை, ராதா கிருஷ்ணன் இந்த நான்கு மோதிரங்கள் அதி அழகாய் கட்டப் புட்டிருந்தன. காமாக்ஷிநாதன் வீட்டிலிருக்கும் ஆலிலை கண்ணன்போல் தங்க இழையில் கடவுள்களை சமைத்திருந்தார்கள். அதைப் பார்த்ததும் மரகதவல்லி,

"அப்பா! லக்ஷ்மியும், சரஸ்வதியும் வாங்கிக் கொடுங்கப்பா!" என்றாள்.

வியாபாரி அதை காதில் வாங்கிக் கொள்ளாதவன்போல் "என்னிடம் ஒரு சிறு கண்ணன் மோதிரமிருந்தது. அதை சுகந்தாஸ்டுடியோஸ் சங்கீத டைரெக்டர் சுந்தரமூர்த்திக்குக் கொடுத்தேன். அந்த கண்ணனின் உருவம் செதுக்கப் பட்டிருந்த கல் காணமற்போய்விட்டது. அவரிடம் போய், 'அந்தமோதிரத்தை இரண்டு நாள் கொடுங்கள். நீங்கள் அதற்குக் கொடுத்த தொகையைக் கொடுத்துவிடுகிறேன். அம்மாதிரி ஒரு டிஸைன் எடுத்துக் கொண்டு மறுபடியும் தருகிறேன்' என்றேன். அவர் மைத்துனிக்கு விவாக வெகுமதியாய்க் கொடுத்து விட்டாராம். எங்கள் தாத்தாதான் இம்மாதிரி வேலைகள் நன்கு செய்வார். எங்கப்பா ஏதோ செய்கிறார். நான் பிசினெஸ்தான் செய்வேன். வேலை தெரியாது" என்றார்.

"சுந்தரமூர்த்தி எங்கண்ணு மருமகன்தான். என் பெண்ணுக்குத்

தான் சென்ற மாதம் விவாகம் நடந்தது. இருங்கள். காட்டுகிறேன்,'' என்று எழுந்துபோய் அந்த மோதிரத்தை எடுத்து வந்தார். அதைப் பார்த்த வியாபாரி, அதை இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்து தன் ஜேபியிலிருந்த மெருகால் அதைப் போல் ஒற்றி எடுத்துக் கொண்டு. அந்த மோதிரத்தை புகைப்படம் எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

★

மாதங்கள் நான்கு மறைந்து விட்டன. 'பாரத் இண்டஸ்ட்ரீஸ்' மோஹன் தன் அலுவலகத்துக்குச் செல்லாமல், விளையாட்டுகளில் கலந்து கொள்ளாமல், வேளைக்கு உறங்காமல் உலகமே வெறுத்துப் போனவர்போல் இருந்தான். அவன் நண்பர்கள் ''மோஹன்! உம் மனைவிக்கு மூளை கலங்கியது. உமக்குக் கலங்கவில்லை. அதுதான் வித்தியாசம்'' என்பார்கள். அவன் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பரம்பரை சொத்தைத் தொலைத்த சந்திராவை நினைக்கக் கூட அவன் மனம் இடம் கொடுக்கவில்லை.

அன்று அலுவலகத்தில்தணிக்கையாளர்கள் வருவதாய் அறிந்து மனமில்லாவிடினும் கடமையை உத்தேசித்துச் சென்றான். அவனுக்கு முன்பே அவனை தேடிக் கொண்டு வந்த ஓர்ஆள் அவனுக்காகக் காத்திருந்தான். மோஹனைக் கண்டதும் தன்னிடமிருந்த ஒரு கடிதத்தை அவனிடமளித்து சென்றான். அது டாக்டர் தன்ராஜ் எழுதியது. சந்திராவுக்கு உடம்பு குணமாகிவிட்டதாகவும், வந்து அழைத்துப்போகும் படியும் எழுதி, சிகிச்சைக்கான சிலவுத் தொகையையும் குறிப்பிட்டனுப்பி யிருந்தார்.

மோஹன் தன்ராஜை போனில் அழைத்து மறுநாள் அவருக்கு செலுத்தவேண்டிய பணத்தை செலுத்திவிட்டு சந்திராவை அழைத்துப் போவதும் இல்லாததும் சொல்வதாய் சொன்னான். ஆனால் அன்று மாலையே வைத்தியருக்குப் பணத்தையனுப்பிவிட்டு வியாபார விஷயமாய் வெளியூர் சென்றுவிட்டான்.

ஒரு மாதம் ஓடி மறைந்தது. சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு வந்த மோஹன் படுத்துக் கொண்டிருந்தான். அவன்மூளை, 'சந்திராவை அழைத்து வருவதா வேண்டாமா?' என்ற பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருந்தது. அவளால் தானே தனக்கு இக்கதி ஏற்பட்டதென்று எண்ணிக் கொண்டிருக்கும் போது துப்பறியும் துரைராஜா சந்திராவுடன் அவ்விடம் வந்தார்.

மோஹன் ஒன்றும் பேசாது துரை ராஜாவையும், சந்திராவையும் வெறிக்கப் பார்த்தான்.

''மிஸ்டர் மோஹன் எழுந்திருங்கள். உங்கள் வீட்டு மோதிரத்தை வாங்கி வரலாம்'' என்றார் துப்பறிபவர்.

''நான் வரவில்லை. நீங்களே வாங்கி வாருங்கள்'' என்றான் உடைந்த குரலில்.

''வரமாட்டீர்களல்லவா? இந்தாருங்கள்! இதைப் பத்திரமாய் வைத்திருங்கள்' என்று அவரிடம் ஒரு மோதிரப் பெட்டியைக் கொடுத்தார். அதைத் திறந்து பார்த்த மோஹன் திகைப்புடன்,

''மிஸ்டர் துரைராஜ்! இது காமாக்ஷிநாதன் மகளுடையதல்லவா?'' என்றான் நடுங்கியபடி.

''ஆம், புது உருவில் காமாக்ஷிநாதன் பெண்ணுடையது. பழைய உருவில் உங்கள் பரம்பரைச் சொத்து'' என்றான். சந்திரா சந்தோஷமாய் அந்த மோதிரத்தை வாங்கி தன் கையில் போட்டுக் கொண்டு பெருமையுடன் ''துப்பறியும் சார்! என் மோதிரம் அவளிடம் எப்படிப் போயிற்று?'' என்றாள்.

"ஆறுமாதங்களுக்கு முன் சண்பகம் தன் காலக்ஷேத்திர ஆண்டு விழாவிற்கு உங்களை வரச்சொல்லி அழைத்தாள்," என்னும் போதே "என்னை சும்மா வரச் சொல்லவில்லை. நாடகத்தில் நடிக்கும் பெண்களுக்கு வேஷம் போட அழைத்தாள்!" என்றாள்.

"நீங்கள் அலங்கரித்துக் கொண்டு போனீர்கள்! அங்கு பெண் குழந்தைகளுக்கு மேக்கப் பண்ணும் போது மோதிரத்தைக் கழட்டி மேஜை மேல் வைத்து விட்டீர்கள். அதை சமயம் பார்த்து சண்பகம் அபேஸ் செய்து விட்டாள். நீங்கள் அதை மறந்த விட்டீர்கள். காமாக்ஷிநாதன் வீட்டுக் கல்யாணத்தின்போது தான் நினைவு வந்தது. ஆனால் சண்பகம் வீட்டில் போனதென்று நீங்கள் எண்ணவேயில்லை. உங்களை அதை மறக்கும்படி செய்தவளும் சண்பகம்தான். அந்த மோதிரம் அவளிடம் வந்ததும்தான் டைரெக்டர் சுந்திர மூர்த்தியை மணந்து கொண்டாள். அவள் தன் திருட்டு வெளி வராமலிருக்க அந்த மோதிரத்தைச் சுற்றி பச்சைக் கற்களை ஆலிலைபோல் பதிக்கச் செய்தாள். சுந்தரமூர்த்தி அந்த மோதிரத்தின் மேல் ஆசை கொள்ளவே, அதைப்போல் செயற்கை ரத்தினங்களால் செய்து அவருக்குக் கொடுத்து விட்டாள்.

திடீரென்று நிச்சயமான மரகதவல்லி திருமணத்திற்குத் தன் கணவனுக்காக செய்த போலி வைர மோதிரத்தைப் பரிசளித்துவிட்டாள். பார்ப்பவர்கள் உண்மை வைரமென்று ஏமாந்தனர்"

"அதிருக்கட்டும். நீங்கள் எங்கள் மோதிரத்தை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டான் மோஹன்.

"அன்று உங்கள் வீட்டிலிருந்து நேராய் வைத்திய சாலைக்குச் சென்று உங்கள் மனைவியைப் பார்த்தேன். அவளிடம் ஒரு இனமல் மோதிரத்தைக் கொடுத்தேன். அதைத்தூக்கி தூர வீசி சுப்பிரமணியப் பத்தரைப் பற்றிச் சொன்னாள். உடனே போலீஸ் துணையுடன் அவன் வீட்டுக்குச் சென்று விசாரித்தேன். சண்பகம் அவனிடம் வந்து பழைய மோதிரத்தைச் சுற்றி கற்களைப் பதித்துக் கொண்டதையும் வேறு இரண்டு மோதிரங்கள் செய்து கொண்டதையும் சொன்னான். ஒரு வாரத்தில் வேண்டிய சாமான்களுடன் வியாபாரியைப் போல் காமாக்ஷிநாதன் வீட்டுக்குச் சென்று, அவரிடமிருந்த மோதிரத்தைப் பார்த்தேன். உண்மை விளங்கிற்று. அதை புகைப் படமெடுத்துக் கொண்டு, அளவும் எடுத்துக் கொண்டு சுப்பிரமணியப் பத்தரிடம் அதே போல் மற்றொரு மோதிரம் செய்யச் சொல்லி, எடுத்துக் கொண்டு சண்பகம் வீட்டிற்கு காமாக்ஷிநாதன் பெண்ணுடன் சென்றேன். என்னிடமிருந்த மோதிரங்களைக் காட்டி அவள் மோதிரத்தைப் பார்க்க விரும்பினேன். அவள் மோதிரத்தைக் காட்டியபோது வெகு ஜாக்கிரதையாய் மோதிரத்தை மாற்றி வைத்துவிட்டு, என்னிடமிருப்பதில் இரண்டை விற்று அன்று இரவே வியாபார நிமித்தம் வெளியூர் செல்வதாகச் சொல்லி வந்துவிட்டேன்" என்றார்.

மோஹன், அந்த மோதிரத்தை வாங்கி தன் கையில் போட்டுக் கொண்டு "துப்பறிபவரே! உங்கள் உதவியை என்றும் மறவேன்" என்றான். "சந்திரா! இன்றிலிருந்து இரும்புப் பெட்டிச் சாவி என்னிடமிருக்கட்டும். உனக்கு ஆனாலும் மறதி அதிகம்" என்றான்.

"நம் குலகௌரவத்தைக் காப்பாற்றியதே போதும். பெட்டிச் சாவி எனக்கு வேண்டாம். உங்கள் அன்பிருந்தால் போதும்" என்றாள்.

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள்; மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

Telegrams : 'RANGAVILAS' Telephone : 17 & 817

SRI RANGA VILAS
GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P.O. COIMBATORE

SPINDLES	: :	36,368
LOOMS	: :	88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2^s to 80^s counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

Managing Partner :—

G. N. VENKATAPATHY.

கு. ப. சேது அம்மாள்

அத்தியாயம் 15

மனச்சாட்சி

'பாதுகாப்பாக இருக்க வேண்டிய வஸ்து' எனக் கருதி நாம் ஒன்றை பந்தோபஸ்தாக வைத்துக் கொண்டிருக்கும் சமயம் நம்மையுமறியாமல் அது கை நழுவிப் போய் விட்டதை உணரும் பொழுது எப்படிப்பட்ட நிதானியும் கவனப் பிசகாக இருந்து விட்டோமே என்று பதட்டமடைவது இயல்பு.

சோமுவும் இதே உணர்வினால்தான், கோடியிலிருந்த பெட்டியில் ஏறிய வாலிபனைக்கண்டு துரைதான் அது என்று நிச்சயித்துக் கொண்டு பறிகொடுத்து விட்ட சவக்களை பொருந்திய முகத்துடன் செயலற்று நின்று விட்டதைக் கண்ட துரை, 'கலகல'வென்று நகைத்தவாறு பின்புறம் நிற்பதை திரும்பிப்பார்த்த சோமு, "அட பாவி! இருக்கிறாயா? உன்னைப் போலவே வேஷ்டி, ஷர்ட் அணிந்திருந்த, ஒருவன் அவசரமாக ரெயிலேறியதைக் கண்டு நீதான் என்று நினைத்து விட்டேன்." என்று நிம்மதியான குரலில் கூறி பெருமூச்சு விட்டான் சோமு.

"சே! பஅப்டியெல்லாம் திருட்டுத்தனமாக ஓடமாட்டேன் உன்னை ஏமாற்றிவிட்டு!"

"அதற்காகத்தானே நீ வந்தாய்..."

"நீதான் என் தீர்மானத்தை அங்கீகரிக்க வில்லையே! சரியென்று நின்று விட்டேன்!" என்றான் துரை.

"ரொம்ப சந்தோஷம். வா. நல்ல வேளையில் ஊர் போய்ச் சேரலாம்" என்று இருவரும் ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு சாலை வழியாக பொன்னகரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

பொழுது சாயும் தருணத்தில் பொன்னகரக் கிராம எல்லையிலிருந்த கொய்யாத் தோப்பருகில் வந்ததும் "துரை, மேலப்பாலத்து வழியாக நேராக வீடு போய்ச் சேர், எங்கேயும் நிற்காதே", என்று எச்சரிக்கை செய்து அவனை அனுப்பி விட்டு அவன் கண்ணுக்கு மறையும்

வரை நின்று பார்த்துவிட்டு பிறகு வீட்டுக்குச் சென்றுன் சோமு.

மணி ஐந்து இருக்கும்.

அது வரையில் எண்ணங்களில் மூழ்கிக் கிடந்த ஐயர், அவற்றின் துளைப்பை இனியும் தாங்கயியலாது, கீழே யிறங்கி கோயில் பக்கமாவது போய் வரலாம் என்று வந்தார்.

வாசலில் உட்கார்ந்து, துரை வரும் வழியைப் பார்த்தவாறு இருந்தாள் கமலம்.

ஐயர் வெளியே சென்றுர்.

சமையலறையில் சமைத்த பதார்த்தங்கள் மூடி வைத்த படியே இருந்தது. அம்மியின் மீது இரண்டு அடுக்குகளில் அரிசியும், உளுத்தம் பருப்பும் மதமதவென்று ஊறிக்கொண்டிருந்தன.

பித்துப் பிடித்தவள்போல, அன்னம்மாள் எழுந்திருப்பதும் மறுபடி படுத்துக் கொள்வதும், வாசலுக்குப்போய் வருவதுமாக இருந்தாள்.

படுத்திருந்தவள் சட்டென்று தோன்றிய நினைவில் எழுந்து வாசலுக்கு வந்து "ஏன் அக்கா, வேணுமானல் கருப்பையாவை அனுப்பிப் பார்க்கச் சொல்லலாமா?" என்று கேட்டாள். "என்னவென்று சொல்லி, எங்கே என்று தேடச் சொல்லுவது? அவன் மெல்லப்போய் சிவாவிடம் 'வத்தி' வைப்பான். தெய்வமே துணையென்று இரு. அந்த ஏழுமலையான்தான் அவனை வீடு கொண்டு வந்து சேர்க்கவேண்டும்." என்று கூறி முடிக்கும் சமயம் ஐயரும் வந்து விட்டார்.

வாசற்படி ஏறியவாறு "எங்கே போகிறது அந்தத் தறுதலை? ஸ்டேஷனில் பார்த்தேன் என்கிறுனே முத்துப் பயல்?" என்று கமலத்தைக் கேட்டார்.

ஒரு வினடி திணறினுள் அவள்.

"எங்கே அவன்?" என்று கேட்டால் அதற்குரிய பதிலை யோசித்து வைத்திருந்த கமலத்திற்கு இந்த எதிர்பாராத கேள்விக்கு என்ன பதிலை சொல்லுவதென்று புரியாமல் "ஸ்டேஷனிலேயா?" என்று திருப்பிக் கேட்டாள்!

"நீ என்னைக்கேளு!" என்று சொல்லி அங்கவஸ்திரத்தை எடுத்து 'மாப்பிள்ளைத் திண்ணை' மீது போட்டு 'அப்பாடா' வென்று அதில் சாய்ந்து கொண்டார் ஐயர்.

"என்னிடம் ஒன்றுமே சொல்ல வில்லையே அவன்?"

"ஏன் சொல்லுகிறுன்? உம், காலுக்கு உதவாத செருப்பு. ஸந்தி பண்ண ஜலம் கொண்டு வா" என்றுர்.

கால் அலம்ப, செம்பில் ஜலமும், விபூதி, ஸந்தியா வந்தனத்திற்கு ஜலமும் கொண்டு வந்து வைத்தாள் அன்னம்மாள்.

ஸந்தி பண்ணி முடித்து, 'காயத்திரி' பண்ணிக் கொண்டிருக்கும் சமயம் துரை வந்து வாசற்படி யேறினுன்.

அவனைக் கண்ட பிறகுதான் உயிர் வந்தது, கமலத்துக்கும் அன்னம்மாளுக்கும்!

பரபரப்புடன் சமயலறையைப் பெருக்கி இலை போட்டாள் அன்னம்மாள்.

ஜபத்தை முடித்துக்கொண்டு உள்ளே வந்த ஐயர் இலை முன் உட்கார்ந்ததும். துரை வந்து உட்கார்ந்தான்.

"எங்கடா போயிருந்தாய் மத்தியான மெல்லாம்?" என்று கேட்டார் ஐயர், மூண்டு வரும் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டவராக.

"நாலுமணி வண்டியில் பிரயாணம் செய்யும் ஒரு நண்பனைப் பார்க்கப் போயிருந்தேன்" என்றான் துரை.

அன்னம்மாள் மௌனமாகப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

"நாலு மணி வண்டியில் வருகிறவனைப் பார்க்க படைபதைக்கிற பன்னிரண்டு மணி வெய்யிலில் நடந்துதான் போக வேண்டுமா? வீட்டிலே வண்டியில்லையா? என்னவோ செய்! உனக்குத் தோன்றினதையெல்லாம்." என்று சலிப்புடன் சொல்லிவிட்டு சாப்பிட்டு எழுந்தார் ஐயர்.

துரை மறுபடியும் எகிறப் போகிறானே என்று பயந்து கொண்டிருந்தாள் அன்னம்மாள்.

அவள் எதிர் பார்த்தவாறு ஒன்றும் நிகழாமல் சாப்பிட்டு கை அலம்பிவிட்டு நேராக மாடிக்குச் சென்றான் துரை.

சுருட்டி வைத்திருந்த படுக்கையைப் பிரித்துப் போட்டுக் கொண்டு படுத்தான்.

எண்ணங்கள் எழுந்தன!

சென்னையிலிருந்து வந்து வீட்டில் காலடி வைத்தது முதல் இன்றுவரையில் நடந்த நிகழ்ச்சிகளை வரிசைக் கிரமமாக எண்ணிப் பார்த்தான்!

'உயிரை விட்டாலும் விடுவேனே யொழிய உன் கையில் அகப்படமாட்டேன்' என்கிற வேகத்துடன் வள்ளி கிணற்றில் குதித்த சம்பவம் அவன் நினைவின் முன் நின்றது!

அவனுடைய புலன்கள் சிலிர்த்துக் கொண்டு எழுந்தன. "அடி, கேடு கெட்டவளே! நீ மட்டும் எனக்கு இணங்கி வந்திருந்தால் என் வேகம் ஒருக்கால் அன்றே தணிந்து போயிருக்கும். உன் சாகசச் செயல் என்னை வெறி கொள்ளச் செய்திருக்கிறது! ஒன்று, உன் கொழுப்பை அடக்கி, உன் முகத்தில் காறி உமிழ வேண்டும் இல்லை—, உன்னையும் கொலை செய்து நானும் சாவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். இது சத்தியம்" என்ற விபரீத சபதம் செய்தது அவன் நெஞ்சம்!

கூடத்திலிருந்த ஊஞ்சலில் ஏக்கமே உருவாக அமர்ந்திருந்த கமலத்தைக் கண்டதும், "ஏன் அக்கா, பலகாரம் ஒன்றும் கிடையாதோ இன்று உனக்கு?" என்று கேட்டார் ஐயர்.

"பலகாரமுமாச்சு, மண்ணுமாச்சு! நல்லகுடி, இப்படி நலம் கெட்டுப் போக வேண்டும் என்று யார் சாபமிட்டார்களோ?"

"அக்கா! குடும்ப கௌரவம்; அகௌரவம், மானம், அவமானம் எல்லாம் எனக்கு இனி ஒன்றுதான்! தார ஏஷணை, புத்திர ஏஷணை, தன ஏஷணை என்று மூன்று உண்டு என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். இன்று மத்தியானம், அந்த

மூன்று ஏஷணைகளையும் கொன்று விட்டேன்; குடும்ப சுக துக்கத்தில் சிரத்தையே கிடையாது. நீயும் அதே போல ஸம்சார கவலைகளுக்கெல்லாம் தர்ப்பணம் பண்ணிவிட்டு, 'ராமா, கிருஷ்ணு' என்று பொழுதைப் போக்கு, அவ்வளவு தான்...''

''ராமா, கிருஷ்ணு என்று ஜபிக்கிற சமயம் ஜபிக்க வேண்டும். சம்சாரக் கடலிலும்தான் நீந்திக் கரையேற வேண்டும்.'' என்றுள் கமலம்.

ஐயருக்கு இருந்த மன உளைச்சலில் மேற்கொண்டு பேச்சை வளர்க்க இஷ்டமின்றி பாயை எடுத்துக் கொண்டு வாசல் திண்ணைக்குச் சென்றுர்.

அன்னம்மாள் இடியோசை கேட்ட சர்ப்பம்போல உயிர் ஒடுங்கி நின்று கொண்டிருப்பதைக் கண்ட கமலம், ''ஏனிப்படி நிற்கிருய் பிரம்மமாக? இலை காயுமுன்பு சாப்பிட வா'' என்று கூறி விட்டு உள்ளே போய் சாதமும், ரஸமும் எடுத்துக் கொண்டு வந்தாள் கமலம்.

இலை முன் சாப்பிட உட்கார்ந்த அன்னம்மாள், ''ஸ்டேஷனில் யார் பார்த்தார்களாம் இவனை?'' என்று கேட்டாள். ''முத்துப்பயல் 'பார்த்தேன்' என்றுனும். என்ன சொன்னுன், ஏது என்று கிண்டிக் கிளறிக் கேட்க வில்லை நான்; நாமெல்லாம் வாயால் புலம்பி கிலேசத்தை ஆற்றிக்கொண்டு விடுகிறேம். ஆண் பிள்ளைகள் மனதிலேயே வைத்து மறுகுவார்கள் என்பதற்காகவே ஆண் பிள்ளை மனதில் கிலேசம் தரக்கூடிய செய்திகளை ரொம்பப் படும்படி சொல்லக்கூடாது என்பார்கள்.

மத்தியானமே அவனுக்கு சங்கதி தெரிந்திருந்தும் இவ்வளவு நாழி வரையில் ஏதாவது அதைப் பற்றி மூச்சு விட்டானு பார்த்தியா அவன்? என்ன பண்ணலாம்?'' என்று குறைப்பட்டுக் கொண்டாள் கமலம்.

''பண்ணுகிறது என்னத்தை! எந்த வேளையில் எது வந்தாலும் அனுபவித்தே தீர வேண்டும்! 'மாட்டேன்' என்றுல் விடுமா?'' என்று சொல்லி மூக்கைச் சிந்தி விட்டு கண்களைத் துடைத்துக் கொண்டாள் அன்னம்மாள்.

''இலையில் சாதத்தை வைத்துக் கொண்டு அழாதே. சாப்பிட்டு எழுந்திரு.''

''பாழும் படிப்பு ஒரு பரீட்சையுடன் போதும் என்று முட்டிக் கொண்டேன். என் பேச்சு எடுபடவில்லை...இழவு சோறு இறங்கினுல்தானே...'' என்று இலையை மடக்கி எடுத்துக் கொண்டு எழுந்த அன்னம்மாள், போய் கையலம்பி விட்டு வந்து, ''அக்கா, அடுப்புச் சாம்பலை மட்டும் அள்ளி விட்டு, உள்ளே அலம்பி விட்டு விடுங்கள். விடியற் காலம் நான் அடுப்பு மெழுகுகிறேன். சாணியைக் காணேம் இங்கே...''

''ஆகா, அரிசியும், உளுத்தம் பருப்பும் போட்டுக் கூடையில் வாரிப் போட்டிருக்கிறேன்; அதை அள்ளி உலர்த்தி விட்டு அப்புறம் பாயைத் தொடு.'' என்றுள் கமலம்.

கொடியிலிருந்த வேஷ்டியை இழுத்துக் கீழே விரித்து, அரிசியை அள்ளிப் போட்டுத் துழாவிய வண்ணம், "நாம் ஒன்று நினைத்தால், தெய்வம் அலாதியாக ஒன்று நினைக்கிறது! இரண்டு நாளை மாவு இருக்கட்டுமென்று ஒரு பக்கா அரிசி நனைத்தேன்..." என்றாள் அன்னம்மாள்.

"ஆமாம். எல்லாம் கிடக்க இப்பொழுது இதற்கு விசாரப்படு!..."

"விசாரத்திற்குச் சொல்லவில்லை அக்கா! இது கூட நாம் நினைத்தது நடக்கவில்லை பாருங்கள் என்றேன்!" என்று மனவேதனையுடன் சொன்னாள் அன்னம்மாள்.

"பீடை விட்டது பேர். இவ்வளவு நாளும் அரைத்து அரைத்து வார்த்து வார்த்துத் தின்றது போதும்..." என்று இவ்வாறு ஒருவருக்கொருவர் பேசி மனவேதனையை சமாதானப்படுத்திக் கொண்டார்கள்.

வாசலில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தார் ஐயர். அவருடைய சிந்தனையெல்லாம்..... தனது வம்சாவளி, குலப் பெருமை, பிரக்யாதியுடன் வழி வழியாக வந்த குடும்பம், தனக்குப் பிற்காலம்...?

என்ன ஆகும்?...என்ன ஆகுமோ? அது ஆண்டவனுக்கே வெளிச்சம்!

'பகவானே, எனக்கப்புறம் எது எப்படியாயினும் சரியே, என்னை இன்னமும் சோதித்து அவமானப்படுத்தாதிருப்பாயா? ஏதோ செய்! உன் இஷ்டம்!' என்ற நினைப்பில் ஒன்றி படுக்கையில் புரண்டுகொண்டு கிடந்தார்.

அத்தியாயம் 16

புலி பதுங்குவது ஏன்?

அன்றிரவு நாகுவின் வற்புறுத்தலின்மீது அவன் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டு ஆறுமுகம் வீட்டுத் திண்ணையிலேயே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான் நாகுவுடன்,

"அப்போ என்ன சொல்லுகிறாய்? வள்ளியை நாளைக்கு அழைத்துவரவா வயல் வெளிக்கு?"

"ஓ! தாராளமாக! நமது நாலு கண், நம் ஆட்களுடைய நாலு கண்களுக்கு மத்தியிலே அவன் என்ன பண்ணிடமுடியும்?"

"மறுபடியும் நீ சொல்வதையே சொல்லுகிறாயே தவிர, நான் சொல்வதை இன்னும் நீ மனசில் வாங்கிக் கொள்ளக் காணோமே! வள்ளியை விட்டு எட்ட நின்று நாம் கண்காணிக்க வேண்டும். வசமாக அவன் வந்து சிக்கும்போது 'லபக்'கென்று கழுத்தைப் பிடித்துவிட வேண்டுமடா—நாம் சுத்த வேளாளனாக இருந்தால்?" என்று பல்லைக் கடித்தான் ஆறுமுகம்.

"சரி மாமா! இப்ப மனதில் வாங்கிக் கொண்டேன். நீ மூக்கனிடம் விஷயத்தைச் சொல்லிவிடு. நீ இப்படி அப்படி நகர்ந்தால் அவன் இருக்கணும்.

நானும் பம்பையன் கிட்ட ஓதி வைக்கிறேன்.''

"பம்பையனு?"

"ஏன் மாமா?"

"அவன் சுத்த சோம்பேறி யாச்சே"

"அந்த சோம்பேறி இனி மேல் கொம்பேறி மூக்கனுகை வேலையைக் கவனிக்கும் பாரு; சரி நேரமாகிவிட்டது. காலையில் வயல் வெளியில் பார்த்துக் கொள்வோம்,'' என்ருன் நாகு.

ஆறுமுகம் வீடு திரும்பும் போது ஊரோசை அடங்கி விட்டது. குடிசைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு சிம்னி விளக்கருகில் உட்கார்ந்து புடவையிலிருந்த கிழிசல்களைத் தைத்துக் கொண்டிருந்தாள் வள்ளி.

கதவைத் தட்டினுன் ஆறுமுகம்.

எழுந்து வந்து கதவைத் திறந்தாள் வள்ளி.

ஆறுமுகம் உள்ளே வந்ததும், வள்ளி புடவையை எடுத்து வைத்துவிட்டு அவனுக்குக் கால் கை அலம்பத் தண்ணீர் கொண்டு வந்து வைத்தாள்.

"நான் சாப்பிட்டாயிற்று வள்ளியம்மா. நாகு வீட்டிலே, வலுக் கட்டாயமாக இழுத்து உட்கார வைத்து சோறு போட்டு விட்டார்கள். விலாப்புடைக்க சாப்பாடு! சோற்றிலே தண்ணீரை ஊற்றிவிட்டுப் படு' என்ருன் ஆறுமுகம்.

வள்ளி தன் வேலைகளை முடித்துக் கொண்டு விளக்கை சிறிதாக்கி வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டாள்.

"ஏன் ஆறுமுகம், நாளைக்கு வள்ளியை வயல் வெளிக்கு.." என்று மெல்ல ஆரம்பித்தான் கந்தப்பன்.

"ஆமாமாம்! நீ உன்பாட்டில் கவலையில்லாமல் படுத்துக் கிட..."

"படுத்துத்தான் கிடக்கேனே! என் மனசுக்கு ஒன்றும் நன்ருகவே இல்லை...".

"ஏனப்பா அப்படி சொல்லுகிறீர்கள் அபசகுனம்போல..." என்று மனக் கஷ்டத்தோடு கேட்டாள் வள்ளி.

"அவர் கிடக்கிருர், நீ தூங்கு வள்ளியம்மா. பொழுதோட எழுந்து வேலையை முடித்து விட்டுப் போகவேண்டும்..." என்ருன் ஆறுமுகம்.

வள்ளிக்கு இருந்த வேதனையில் தூக்கம் எப்படி வரும்? எந்த சமயம் தனக்கு என்ன ஆபத்து நேருமோ என்ற திகிலும், கவலையும் கொண்டு புரண்டு புரண்டு படுத்துக் கொண்டு தவித்தாள்.

அவள் எப்பொழுது தூங்கினுள் என்பது அவளுக்கே தெரியாது. நன்ருகப் பொழுது விடிந்த பிறகு ஆறுமுகம் எழுப்பிய பிறகு எழுந்தாள் வள்ளி.

"கஞ்சி, சுடு தண்ணீர் எல்லாம் வைத்து விட்டேன். போய் அவருக்கு எடுத்துக் கொடுத்து விட்டு கிளம்பு''. என்ருன் ஆறுமுகம்.

"எப்போ எழுந்தீர்கள் சித்தப்பா? என்னை அப்போதே எழுப்பக்கூடாது?'' என்று இந்நேரம் வரையில் தூங்கிவிட்டோமே என்ற கலக்கத்துடன் கூறிவிட்டு கந்தப்பனுக்குக் கஞ்சி, வெந்நீர் கொடுத்து விட்டு, ஆறுமுகத்துடன் புறப்பட்டாள் வள்ளி.

இருவரும் வயலுக்கு வரும் சமயம் காலே இளம் காற்றுடன் கதிரவன் ஒளிபட்டு நெற்கதிர்கள் பொன்னிறம் பிரகாசிக்க அசைந்தாடிக் கொண்டிருந்தன.

அன்று கண்காணிப்புக்கு ஐயர் வந்திருந்தார். முறைப்படி பூசைக் கிரியைகள் நடந்த பிறகு அறுவடை ஆரம்பமாயிற்று. மூக்கனுடைய தலைமையில் ஆண்களும், பெண்களுமாக சுமார் இருநூறு பேர்கள் களத்தில் இறங்கினுர்கள்.

ஆறுமுகத்தின் கவனத்திற்கு விசேஷமாக ஏதும் இல்லே; நடுப்பகல், வள்ளியும் ஆறுமுகமும் வீட்டுக்கு வந்து ஆகாரம் உண்டுவிட்டு, கந்தப்பனுக்கும் கொடுத்துவிட்டுச் சென்ருர்கள்

ஆறுமுகமும், வள்ளியும் இருந்த மாதிரியிலிருந்து கழனி வெளியில் விசேஷமாக எதுவும் நிகழவில்லே என்பதறிந்து கொண்டு மன அமைதியுடன் படுத்திருந்தான் கந்தப்பன்.

விளக்கேற்றும் நேரத்தில் வள்ளியுடன் வீடு திரும்பினுன் ஆறுமுகம்.

"வள்ளியம்மா, அடுப்பைப் பற்றவைத்து உலே வை. கடைக்குப் போய் வருகிறேன். என்ன வேணும்? அரிசி, புளி, மிளகாய்..."

"கொஞ்சம் எண்ணெய், பருப்பு-துட்டு இருக்கிறதுக்குத் தகுந்தாப்போல" என்ருள் வள்ளி.

"சரி" என்று வெளியே சென்ருன் ஆறுமுகம்.

வள்ளி அடுப்பைப் பற்ற வைத்து உலேநீர் வைத்துவிட்டு வந்து, "அப்பா, நோவு எப்படி இருக்கிறது? தூங்கினீர்களா மத்தியானம்?"

"கொஞ்சம் சுமார். தூக்கமேது? புரண்டு கொண்டு கிடக்கிறேன். ஆமாம், யாருடைய பண்ணேயில் அறுவடை? என்ன சங்கதி?"

"நம் ஐயர் பண்ணேயிலே தான்."

"களத்து மேட்டுக்கு யார் வருகிருர்கள், ஐயர்தானே?"

"இன்றைக்கு ஐயர்தான் வந்தார். நாளேக்கு மகன் வரப் போகிருராம்."

"இருக்காது, ஐயர்தான் வருவார்..."

"இல்லேயாம். தகப்பனும், மகனும் மாறி மாறி வரப் போகிருர்களாம்."

"அப்படியென்று யார் சொன்ஞர்கள் உனக்கு?" என்று கலவரத்துடன் கேட்டான் கந்தப்பன்.

"மச்சான்தான் சொன்ஞர்."

"சும்மாபேச்சுக்குச் சொல்லியிருப்பார் ஐயர். வெய்யிலிலும், கானலிலும் அந்தப் பிள்ளேயை வரச் சொல்ல மாட்டார்கள்; அதுவும் வராது." என்று தனக்காகவும், மகளுக்காகவும் கூறிக்கொண்டான் கந்தப்பன்.

"என்னது?" என்று வினவியவாறு உள்ளே வந்தான், ஆறுமுகம்.

"ஒன்றுமில்லே, எந்தப் பண்ணேயிலே அறுவடையாகுது என்று விசாரித்தார்", என்று கூறினுள் வள்ளி.

ஆறுமுகம் மேல் துண்டிலிருந்த சாமான்களேக் கீழே எடுத்து வைத்து, "என்ன பண்ணுகிருய் கத்திரிக்காயை?" என்று கேட்டான்.

"என்ன பண்ண?"

"அப்பாரைக் கேளு. அவருக்கு வாய்க்கு வேண்டியதாகப் பண்ணு", என்று கூறினன் ஆறுமுகம்.

"அப்பா, பிஞ்சுக் கத்திரிக்காயாக இருக்கிறது. பருப்பு சாம்பார் வைக்கவா, இல்லே, புளிக் குழம்பு வைக்கட்டுமா?"

"ஏதாவது உன் சௌகரியம் போல் செய் அம்மா." என்ருன் கந்தப்பன்.

"மனசு நிறைந்த கவலே அண்ணுச்சிக்கு. சாப்பாட்டிலே கூடத் தேட்டமில்லே! இல்லேயா அண்ணுச்சி."

"நான் கவலேப்பட்டு என்ன ஆகப்போருது?"

"கவலேயே படவேணும் இனிமேல் நீ. பசி நேரத்தில் கிடைத்ததைச் சாப்பிட்டு விட்டுப் படுத்திரு, அவ்வளவு தான்" என்ருன் ஆறுமுகம்.

"சாம்பாரை விட புளிக் குழம்புதான் அப்பாருக்கு ரொம்ப இஷ்டம். பருப்பை வருத்துத் துவையல் அரைத்து, கத்திரிக்காயையும் —மொச்சையிருக்கிறது-அதையும் போட்டு குழம்பு வைக்கிறேன்." என்று சொல்லிக்கொண்டே அடுப்பங்கரையை அடைந்தாள் வள்ளி.

கந்தப்பன், பகலில் கிடைத்த தனிமையில் யோசித்து வைத்திருந்ததையெல்லாம், மீண்டும் ஒரு முறை மனதுள் கோர்வை படுத்திக்கொண்டு தம்பியிடம் கேட்க நினைத்து, "ஆறுமுகம்" என்று அழைத்தான்.

"ஏன் அண்ணுச்சி, என்ன வேணும்?" என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்தான் ஆறுமுகம்.

"உட்காரு இப்படி" என்ருன் இடப்புறமாக இடம் காட்டி. ஆறுமுகம் உட்கார்ந்ததும், அவன் கையைப் பிடித்துக் கொண்டு கனிந்த குரலில், "தம்பி, அப்பாரை உனக்குத் தெரியாது"

"ஆமாம், நீதான் அப்பாருக்கு மேலே அருமையாக என்னே வளர்த்தாய். நானும் உன்னிடம் மரியாதையும், விசுவாசமும் வைத்திருக்கிறேன் என்று நினைக்கிறேன்; உனக்கு இப்போது என்ன வேண்டும்?"

"மரியாதை என்னிடம் வைத்திருக்கிருயா ஆறுமுகம்?"

"அது கடவுளுக்கு வெளிச்சமாக இருந்து, நானும் என் கடமையைச் சரிவரச் செய்து வந்தால், தன்னுல் தெரிந்து போய் விடாதா? வாயால் ஏன் சொல்ல வேண்டும்

"அப்போ, நான் சொல்லுவதைக் கொஞ்சம் கவனித்துக் கேட்டு அதன்படி நீ நடந்தால்-"

"சொல்லு"

"சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். உன்னிடம் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல குணமிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு முன்கோபமிருக்கிறது. அந்தக் கோபத்தைக் கொண்டு—"

"'ஐயரு பிள்ளேயை ஒன்றும் செய்துவிடாதே' என்கிருய், அவ்வளவுதானே?"

"ஆமாம்! சாகிற காலத்தில், ஐயருக்கு வயிற்றுத் துக்கம் வேணும் தம்பி. தங்கமான மனிதர். அவர்கள் வீட்டு உப்பும் சோறும் தின்றிருக்கிருேம். துரோகம்."

"துரோகம் செய்ய நான் பங்காளி யில்லே அவருக்கு! வள்ளி பிறந்தது உன் வயிற்றில். அவளை எடுத்து வளர்த்தது நான். அவளைக் கெடுக்க வேண்டும் என்று நினைத்தான் அந்தப் பாவி..."

"தம்பி, பைத்தியக்கார நினைப்புலே செஞ்சுட்டுது, இனிமேல் — நீ வேண்டுமானால் பாரேன் — அந்த சோலிக்கே வராது..."

"வராதபோனால் மகராசனாக இருந்து விட்டுப் போகிறான்! ஆனால் இருக்க மாட்டானே அவன்?"

"ஏன் அப்படிச் சொல்கிறாய் தம்பீ" என்று உதறலுடன் கேட்டான் கந்தப்பன்.

"என்னவோ எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது."

"அப்போ ஏன் இதை வேலைக்கு அழைத்துப் போகிறாய்?"

"அவனுக்குப் பயந்து கொண்டு வீட்டுக்குள் அடைந்து கிடக்க வேண்டுமா அவள்?"

"இது வம்புக்கு வழியாகத் தெரிகிறது தம்பி. நாளையிலிருந்து நீ மட்டும் போய் வா. அகப்படுகிற கூலியில் கஞ்சி காய்ச்சி குடிக்கலாம்." என்றான் கந்தப்பன்.

"அவளை அழைத்துக் கொண்டு போகக் கூடாது என்கிற நிலமை வந்ததானால், நீ 'கூட்டிக் கொண்டு போ அவளை' என்று சிபார்சு பண்ணினால்கூட நான் அழைத்துப் போக மாட்டேன்."

"நீ சொல்லுகிறதைப் பார்த்தால், வந்தது வரட்டும் என்கிறாய்!"

"அப்படியொன்றுமில்லே! நம் வயிற்றுக்குப் பாடுபட்டு வயிறார உண்ணுகிறோம் என்கிற நிலைமைக்கு இடைஞ்சல் இருக்கக் கூடாது பார். இதோ இன்று இரண்டு பேர் கூலி கிடைத்தது. ஒரு குழம்பும் சோறும் வயிறாறச் சாப்பிடலாம். ஓடியாடி வேலை செய்கிற பிள்ளையை வீட்டிலே குந்த வைப்பானேன்? அரை வயிற்றுக் கஞ்சி குடிப்பானேன்?" என்று நகைத்தான் ஆறுமுகம்.

இனி அவனுடன் வாதாடிப் பயனில்லை என்று உணர்ந்த கந்தப்பன் "அப்பா, நடப்பது நாராயணன் ஆக்கினை! சரி...!" என்றான் மீளா வேதனையுடன்.

"ஆம், அப்படி மனதை நிம்மதியாக வைத்துக் கொள்ளுங்கள்!" என்றான் ஆறுமுகம்.

"இன்னும் உன்னை ஒன்று கேட்கிறேன். தென்பாதி பண்ணை அறுவடைக்கு ஐயர் உன்னை கூப்பிடடனுப்பினாரா?"

"மூக்கன் நாட்டாமையிலே ஆட்களை எடுத்தார்கள். அவன் கூப்பிட்டான். ஒத்துக் கொண்டேன், ஏன்?"

"இன்று களத்து மேட்டிலே உன்னைப் பார்த்தாரா ஐயர்?"

"பார்க்காமலென்ன? 'என்ன ஆறுமுகம் எப்போது வந்தாய்?' என்றுகூடத்தான் விசாரித்தார்...."

"அந்த மகான் வயிற்றிலே வந்து பிறந்திருக்குது பாரேன் கோடாலிக் காம்பாக!... பட்டணத்துக்கு அனுப்பிப் படிக்க வைத்ததில் முளைத்தது தீம்பு..."

"பட்டணத்திலே படிக்கிறஎல்லாப் பிள்ளைகளுமே இப்படித்

தறிதலையாகத் திரிகிறார்களா என்ன? வட பாதி வீட்டுப் பிள்ளை கூடத் தான் பட்டணத்திலே படிக்குது! அதை மெச்சாதவர்கள் இல்லையே!''

''ஆமாமாம். நாகு கூடச் சொன்னான். செலவுக்கு அனுப்புகிற பணத்திலே மிச்சம் பிடித்து பண்டாபீசிலே போட்டு வைத்திருக்கிறதாமே அது?''

"பிழைக்கக் கற்கும் பிள்ளைகள் அப்படி இருக்கும்! நினைத்துப் பார்த்தால் இப்பவே எழுந்து போய் அவன் மண்டையைப் பிளந்துவிட வேண்டும் போல வருகிறது ஆத்திரம்...'' என்று குமுறினான் ஆறுமுகம்.

கந்தப்பன் மௌனமாக இருந்தான்!

"தூங்கு சித்தப்பா. எல்லாவற்றுக்கும் கடவுள் இருக்கிறார். நல்லது, பொல்லாதது அவருக்குத் தெரியும்.''

"அது சரி அம்மா! ஐயர் முகத்திலே 'அவிசு, பவிசு' ஒன்றுமேயில்லை பார்த்தாயா, வள்ளியம்மா?''

"தலை குனிய வைத்து விட்டதா இல்லையா பிள்ளை? வெள்ளை வெளேர் என்று பட்டுக்கரை வேட்டியும் தானுமாக களத்து மேட்டிலே நின்று 'கார்வார்' பண்ணினார் என்றால் ராசா மாதிரி இருக்குமே!'' என்று பழைய நாட்களை எண்ணிப் பார்த்த நினைப்பில்

பெருமூச்சுடன் கூறி நிறுத்தினுன் கந்தப்பன்.

"ஏன் இப்பத்தான் அவருக்கென்ன?" என்ருள் வள்ளி.

"இப்பவெல்லாம் சுரத்துக் குறைந்து விட்டது அவருக்கு. சின்ன வயசுலே பார்க்கணும் அவரை! லட்சணமான மூஞ்சியா, சந்தனக்கித்து மேலே குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டு, வைரக் கடுக்கனும் அதுவுமாக வந்து நிற்பார் களத்து மேட்டில்! வெய்யில் பட்டு அந்த வைரக் கடுக்கன் கன்னத்திலே 'டாலு' வீசும்! வயசு ஆம்பிளைதானே! எவ்வளவு வயசுப் பெண்கள் வந்து வயலிலே, நடவு நடும், நாற்றுப் பறிக்கும், அறுவடை செய்யும், நிமிர்ந்தாவது பார்த்திருப்பாரா மன்னன்?"

"அதுதான் இப்ப அப்பனுக்கும் சேர்த்து மகன் பார்க்கிருனே!" என்ருன் ஆறுமுகம்.

கேலியாக அவன் பேசிய பேச்சில் உஷ்ணமிருந்தது!

அத்துடன் அவர்கள் பேச்சு முடிந்து விட்டது.

அறுவடை முடியும் வரையில் ஐயரும், துரையும் மாறி மாறி வந்தார்கள்.

பரம சாதுவாகத் தென்பட்டான் துரை. தந்தையின் கட்டளைப்படி நடந்து கொண்டான். ஐயர்கூட மகனுக்குப் புத்தி வந்து விட்டது என்ற உணர்வில் கவலையை மறக்க ஆரம்பித்தார்.

பிள்ளையின் மாறுதலைக் கண்டு கமலமும், அன்னம்மாளும் சந்தோஷத்தினுல் பொங்கிப் பூரித்துப் போய்விட்டார்கள்!

கந்தப்பன் குடிசையிலும், அமைதியும், சுபிட்சமும் நிலவி இருந்தது.

ஆனுல் துரையின் இந்த 'சாதுத் தன்மை'யை ஆறுமுகமும், நாகுவும் நம்பவில்லை! புலி பதுங்குவது பாய, என்பதை அவர்கள் நன்கு அறிந்தவர்களாகையால் கண் காணிப்பில் துளிகூட அயரவில்லை.

அது அவ்வளவும் வீண் என்னும்படி அவ்வளவு பதவிசாக நடந்து கொண்டான் துரை!

(தொடரும்)

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : 'TRANSPORT'

AT
YOUR
SERVICE

Grams : CORONATION

Phone : 54

THE CORONATION LITHO WORKS

DHARMAVILLA BUILDINGS

POST BOX NO. 2. SIVAKASI. (S. I.)

PIONEERS IN FINE ART LITHO & OFFSET PRINTING. CONTACT FOR PRINTING LABELS, CALANDERS, ADVERTISEMENT POSTERS etc. FOR ALL TRADES.

Distributors for: **HOOGHLY INK Co, Private, Ltd.**

எங்கள் கம்பெனியில் நயம் அரைத்த உப்பு
நயம் பருமணி உப்பு (97% Nacl)
கல்கத்தா, பீகார், ஒரிஸா, மத்திய
பிரதேஷ், கேரளா முதலிய
இடங்களுக்குச் சப்ளை செய்து
கொண்டிருக்கிறோம்.

தேவைப்படுகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதி
தெரிந்து கொள்ளவும்:

மச்சாது சால்ட் கம்பெனி

18-A, பீச் ரோடு, தூத்துக்குடி.

Phone : [illegible]1 & 333 **Tel. Address: MACSALT**

மங்கம்மா, என் அன்பே!

சீகம்பட்டி ராஜகோபாலன்

'களுக்' கென்று சிரித்தாள் அவள். பளபளக்கும் மேனியின் தளுக்கும் குலுக்கும் அவனை நிலை தடுமாறச் செய்தன. வெற்றிலைக் காவியேறிய பற்கள், குவிந்து மாயா ஜாலம் புரிந்த அதரங்களுக்கு மத்தியில் ஒளிந்துகொண்டு செவ்வொளி காட்டின. திறந்தவாய் மூடாமல் அவளையே வியப்போடு பார்த்து நின்றான் அவன். எவ்வளவு அழகாகச் சிரிக்கிறாள்?

"அதென்ன, அப்படிப் பாக்குறே?"

'செம்மாதுளை பிளந்த தன்னச் செவ்விதழ் மின்னிக் கொடி முல்லையென குலுங்கச் சிரித்த' அந்த மென்மலர் மேனியாள் சிரிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் கழுத்தைச் சாய்த்து ஒய்யாரமாக அவனை நோக்கி வினவினாள். பெண்களுடைய கழுத்துத்தான் எத்தனை லாவகமாக வளைந்து கொடுக்கிறது! அந்த நளினத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்து ஏங்கிய ஆண்மகன் வார்த்தைகளை மென்று விழுங்கினான்.

"ஒண்ணுமில்லை........"

"ஒண்ணுமில்லேன்னா எதுக்கு வந்தியாம்?"

"என்னை ஏன் இப்படி விரட்டறே மங்கம்மா? ......உனக்கு என்னைப் பிடிக்கலையா?"

"இதெல்லாம் என்ன பேச்சு? வயசு வந்த இளவட்டம் வாலைப் பெண்ணைப் பார்த்துக் கேட்கிற கேள்வியைப் பாரேன்!......வெட்கமாயில்லே, உனக்கு? ......"

"மங்கம்மா! ...ஊரிலே எல்லோரும் என்னை......"

"சோத்தாலடிச்ச பிண்டம்! கையாலாகாதவன்! ....தண்டச் சோறு ......அரைக் கிறுக்கு!...... இன்னும் என்னென்னமோ சொல்றாங்க! அப்படித்தானே! அதைத்தானே நீ இப்போ என்னண்டை சொல்ல வந்தே? ......"

"ஏன் தூக்கியெறிஞ்சு பேசறே? ...... எனக்கு ஒம்மேலே எவ்வளவு ஆசை தெரியுமா? ஆனா, நீ என்னை வேப்பங்காய் மாதிரி நினைச்சு உதறிப் பேசுறே! எல்லாரையும் போலே நீயும் வெறுத்திட்டியானா நான் எதுக்கு உசிரை வச்சுக்கிட்டு இருக்கணும்? எங்கேயாச்சுலும் போய் செத்துப் போறேன்!." விரக்தியடைந்த நெஞ்சிலிருந்து வெடித்துக் கிளம்பிய வார்த்தைகளைக் கேட்ட அவள் உள்ளம் நெகிழ்ந்தது. அவனுடைய கண்களைக் குளமாகக் கண்டாள், மங்கம்மா. மனம் உருகிய அவள் ஆறுதல் கூற எண்ணி ஒரு அடி முன்னால் எடுத்துவைத்தாள்.

உடலழகும், நாகரீக டாம்பீகங்களும் இருந்து விட்டால் போதாது. உள்ளத்தழகும், உண்மையான நல்ல பண்பும் தான் மனித இனத்தின் இலக்கணம். எனவே ஆளைக்கண்டு மயங்கிவிட வேண்டாம். இந்த அரிய தத்துவத்தை சித்தரித்து காட்டுகிறது இந்தக் கதை.

"சபாஷ்டா, ராக்கப்பா!...... ஒன்னை இவ்வளவு நாளும் என்னவோ போல நினைச்சிருந்தேன்! நீயே இவ்வளவு பேசுறியா! எங்கிருந்தடா கத்துகிட்டே? ....ஏண்டா, டேய்! ....உடம்பு ஊறுதா? ..." அட்டகாசமாக ஒலித்த குரலைக் கேட்டுத் திகைத்துப்போன மங்கம்மா திரும்பிப் பார்த்தாள். தோளிலே கிடந்த துண்டை எடுத்துத் தலையில் சுற்றியவாறு பெரியண்ணன் வந்து கொண்டிருந்தான்.

"ஏண்டா, இங்கே வந்தே?..." ராக்கப்பனுடைய காது பெரியண்ணன் கையிற் சிக்கிக் கொண்டு அவஸ்தைப் பட்டது.

முகத்தைச் சுளித்த மங்கம்மா பெரியண்ணனைப் பார்த்துச் சூடான சொற்களை அள்ளி வீசினாள்.

"என்னங்க!.... அவரும் உங்க வயசொத்த ஆம்பிளை தானே!.... சின்னப் புள்ளையாட்டமாக் காதைப் புடிச்சு திருகுறீங்களே!...."

"ஆமா !...இவன் பெரிய ஆம்புளைச் சிங்கம் !...மூஞ்சியும் மொகரையும் ஆளும் ! .... இனிமே இந்தப் பக்கமா வந்தே காலை ஒடிச்சுப் புடுவேன் !... ராஸ்கோல் !... போடா, போக்கத்தபயலே !" ராக்கப்பனுடைய கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளினன் பெரியண்ணன். அவ்வளவுதான்! நான்கைந்து தடவை மண் தரையில் உருண்டு விட்டான் அவன். தூசியைத் தட்டிவிட்டுக் கொண்டு எழுந்து நின்ற ராக்கப்பன் மருண்ட நிலையோடு விழித்து நின்ற மங்கம்மாவை ஒரு முறை பார்த்துவிட்டு நடையைக் கட்டினன். அவனுக்கென்ன மான உணர்ச்சியே இல்லையா ஆண்பிள்ளை இல்லையா ? பெரியண்ணனை எதிர்த்து ஒரு வார்த்தை பேசவில்லையே !...விசித்திரப் பிறவிதான் !

'ஐயோ !.... கடவுளுக்குத்தான் எவ்வளவு வஞ்சனை ! இவரை ஏன் இத்தனை விகாரமாகப் படைத்து விட்டார் ? ...' மங்கம்மாவின் மனம் ராக்கப்பனுக்காகப் பச்சாதாபப்பட்டது.

"மங்கம்மா ! அந்தக் குரங்கு இங்கே எதுக்கு வந்தது ?"

"இப்போ நீ எதுக்குவந்தே!..." பொல்லாத குறும்புக்காரி ! அவனையே மடக்கிக் கேட்டு விட்டாள்.

"நானு. . நான்... ஒன்னைப் பார்த்துட்டுப் போகலாமுன்னு வந்தேன் !..."

"அவரும் அப்படித்தான் வந்தாரு !..."

"அவரு!.... விளக்கு மாத்துக் கொண்டைக்குப் பட்டுக்குஞ்சமா ? மரியாதை வேறே கேக்குதோ அந்த மன்மதப் புலிக்கு ? அவன் ஆளும் ...."

"இந்தாங்க !... அவரு உங்களுக்கு மூத்தவருங்கறதை மறந்து பேசுறீங்களே ! முன்னலே பிறந்த அண்ணருங்கற மரியாதை இல்லாம......" மங்கம்மா வார்த்தையை முடிப்பதற்குள் பெரியண்ணன் கூச்சல் போடத் தொடங்கினன்.

"ஹூம் !... அண்ணராம் ! சொல்லிக்கவே வெக்கமா இருக்குது... எங்க வம்சத்துக்கே திருஷ்டிக்கு வந்து பொறந்துட்டான் ! எங்கேயாவது செத்துத் தொலைஞ்சாலும் கருமாதி பண்ணிக் கடனைக் கழிச்சுட்டு நிம்மதியா இருப்போம் !..."

"சரி, போயிட்டு வாங்க! ... அப்பாரு வர்ற நேரமாச்சு ! ... நான் கஞ்சி காய்ச்சி வைக்க வேணும் ! ....."

'சரே' லென்று வீட்டுக்குள் சென்ற மங்கம்மா கதவை ஓங்கியடித்துச் சாத்திவிட்டாள். அவனுக்கு முகத்தி லடித்தாற் போலிருந்தது. சற்று நேரம் திகைத்துப் போய் நின்ற பெரியண்ணன் ஏதோ நினைத்துக் கொண்டவனக வேகமாகப் புறப்பட்டுப் போனன்.

ராக்கப்பனுடைய உருவத் தோற்றம் மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டது. பிறர் அவனை ஒதுக்கி வைத்து வெறுத்துப் பேசுமளவுக்கு விகாரமாகவும் கையாலாகாதவனகவும் படைத்து விட்டான் படைப்புக் கடவுள். பூசனிக்காயைப் போன்ற உடலை விட ஒரு சுற்றுப் பருத்த கனமான மண்டை ; சப்பையான மூக்கு ; சற்றுப் பெரிதான காதுகள் ; குட்டையான கறுத்த உருவம் ; எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் கூனல் விழுந்த முதுகு. அவலட்சண தேவதைகள் அத்தனைபேரும் அவனையே குடியிருப்பாகக் கொண்டு வாழ்ந்தார்களோ, என்னமோ! பெற்றோருக்குத் தீராத வேதனை அவனல். நாகம்பட்டியில் ராக்கப்பன் என்றால் எல்லாருக்கும் இளக்காரம். 'ஏழையைக் கண்டால் மோழையும் பாயு'மல்லவா! பலரிடமும் படாதபாடு படுவான் அவன்.

அதே சமயம் சிரித்துக் கொண்டே எல்லா அடிகளையும் ஏற்றுத் தாங்கும் இதயம் அவனுக்கு உண்டு.

பெரியண்ணன் ராக்கப்பனுக்குப் பின்னல் பிறந்தவன். ஆள் ஆஜானுபாகுவாக இருப்பான்; வாட்டசாட்டமான தோற்றம்; உருட்டி வைத்த இரும்புக் கட்டிகளை ஒன்று சேர்த்து வைத்தது போன்ற உடல்! ஒரே வயிற்றில் பிறந்த சகோதரர்களுக்குள்ளே எவ்வளவு வேறுபாடு! ராக்கப்பனை மூத்தவனாகவே எண்ணி மதிப்பதில்லை பெரியண்ணன். அண்ணனைக் கட்டி மேய்ப்பதில் அவனுக்கு அலாதி ஆனந்தம்; திருப்தி! சின்ன வயதிலிருந்தே ராக்கப்பனுக்கு மங்கம்மாள் என்றால் உயிர்! தாய் மாமனுக்குப் பிறந்த ஒரே ரத்தினமான அவளை அவன் விரும்பி நேசித்தான். 'ஆனல் அவள்.... தன்னுடைய உருவத்தை!....சே! அழகி மங்கம்மாள் எங்கே? குருபி தான் எங்கே? மாமன் மகளானாலும் குப்பைக் காட்டில் திரியும் தனக்கு மனமொப்பி மாலையிட அவளுக்குப் பைத்தியமா?...தன்னுடைய ஆசையை வெளியில் யாராவது அறிந்தால் வாய்விட்டுச் சிரிப்பார்கள்; கைகொட்டிக் கேலி பண்ணுவார்கள்!...பெரியண்ணன் தம்பிக்குத்தான் அவள் பொருத்தம்!' ராக்கப்பனின் விகார உருவத்துக்குள் பொருந்தியிருந்த விரிந்த இதயத்தில் எத்தனையோ எண்ணங்கள் சுழலும். உடலில்தான் அஷ்ட கோணல்கள்; உள்ளத்தில் கோணல் ஏது? உடல் விகாரமானாலும் சாதாரண மனிதர்களுக்குள்ள ஆசையும் எண்ணங்களும் அவன் உள்ளத்தில் இல்லை பரப்பாமலா போய்விடும்?

நாகம் பட்டியைச் சுற்றி வளைத்து அணைத்தவாறு செல்லும் அந்தச் சிற்றோடை மணலில் விளையாடி மகிழ்ச்சியுற்ற நாட்களில் மங்கம்மா ராக்கப்பனுடைய தோற்றத்தைக் கண்டு பலமுறைகள் சிரித்துக் கேலி பண்ணியிருக்கிருள்! நேராக நடக்கமுடியாமல் கூனல் முதுகு அசையக் கிந்திக்கிந்தி அவன் நடக்கும் போதெல்லாம் கெக்கலி கொட்டி நகைத்திருக்கிருள். அவன் அவளுக்கு ஒரு வேடிக்கைப் பொருள்; சிரிப்புக்கு மூலம்!... ஏன், காலையில் அவளைப் பார்க்கப் போனபோது சிரித்தாளே! வெட்கத்தையெல்லாம் மூட்டை கட்டி மூலையில் போட்டுவிட்டு அவனது ஆசையை எடுத்துச் சொன்னபோது அவள் ஒன்றும் சொல்லவில்லை... அவளுக்கு அவன்பேரில் அன்பு இல்லை; ஆசை இல்லை! ஏதோ, கொஞ்சம் இரக்கம் உண்டு ...தம்பிக்கு அவள்மேல் பிரியம் அதிகம். தான் அவளோடு பேசிக் கொண்டிருந்ததைக் கண்டவுடன் எவ்வளவு ஆத்திரம் வந்து விட்டது அவனுக்கு! ......ஏதேதோ எண்ணங்கள் ராக்கப்பனுடைய உள்ளத்தில் கப்பிக் கொண்டன.

★

மூலையில் சாத்தியிருந்த பலகைகளில் ஒன்றையெடுத்துப் போட்டு விட்டுக் கும்பாவில் தண்ணீர் ஊற்றிக் கழுவிய மருதாத்தாள், கயிற்றுக் கட்டிலில் சிந்தனைக்கு அடியவனாக அமர்ந்திருந்த ராக்கப்பனைச் சாப்பிட வருமாறு அழைத்தாள்.

"எனக்குச் சோறு வேணாம்மே!...பசியில்லே"

"ஏண்டா?...காலம்பர வேறே சரியாச் சாப்பிடலியே! ... ஒரு கவளம் வாயிலே போட்டுக்கோ!... எழுந்து வாடா, ராஜா!" ஆயிரம் தான் விகாரமாக இருந்தாலும், ஊருக்கெல்லாம் வேண்டாதவனாக இருந்தாலும், பெற்றதாய் மருதாத்தாளுக்கு அவன் ராஜாதான்.

"பசியில்லாத போது சோறு எப்படித் தொண்டைக்குள்ளே இறங்கப் போவுது?..."

"அதுக்காக வேளைக்குச் சாப்பிடாமக் காயறதா ... உடம்பு என்னத்துக் காவும் ?"

"இம்....பொல்லாத உடம்பு பாழாய்ப் போனா பெரிய நட்டம் வந்துடப் போவுதாக்கும் ?......"

"அப்படியெல்லாஞ் சொல்லாதே ...உடம்புலே என்ன இருக்குது? ...குணந்தான் பெரிசு ... ஒங்குணத்துக்கென்ன குறைச்சல் ?...". மருதாத்தாள் மகனை ஆறுதல் படுத்தச் சொன்னாளே தவிர மகனுடைய தோற்றம் அவள் மனத்தை வெகுவாக வருத்தியதென்பதைப் பெருமூச்சின் அளவு எடுத்துக் காட்டியது.

"ஏனம்மா, என்னை இவ்வளவு காலமாக வளர்த்தீங்க ?.... ஒருத்தருக்கும் பிரயோஜன மில்லாத நான் எதுக்கு உசிரோடே இருக்கணும் ? ... பிறந்தவுடனே எழவு பண்ணித் தண்ணியைத் தெளிச்சிருக்கப்படாதா ?..."

"இருபத்தைஞ்சு வயசு ஆம்புள்ளை பேசுற பேச்சா இது!... உன்னையே ஏண்டா சங்கடப் படுத்திக்கிடறே ... ஒனக்கென்ன. குறைச்சல் ?... இன்னும் கண்ணாலம் பண்ணிக் குழந்தை குட்டியோடே காலம் தள்ளுறதை விட்டுட்டு...போடா, பைத்தியக்காரா! உம்...எழுந்திரு. .சாதம்...பிசைஞ்சு தாரேன்..."

"அம்மா ! எனக்குக் கண்ணாலமாவுமா ? எந்தப்பொண்ணு என்னைக் கட்டிக்கச் சம்மதிப்பா ? ..." ராக்கப்பன் ஏக்கத்தின் அடிவாரத்திலிருந்து ஆவலோடு குரலைப் பரப்பினான்.

"மங்கம்மா உனக்காவ வளருகிற பொண்ணு ! அவ மனசு தங்கம் ! உன்னையேதான் கட்டிக்குவா ! தாயில்லாப் பொண்ணு அவ. எம் மேலே உசிரையே வச்சிருக்கா !"

"மங்கம்மாவுக்கு ஒம்மேலேதான் உசிரு !என்னைக்கண்டா அவளுக்கு ஆவாது! ....அம்மே ! அடுத்த மாசமே அவளுக்கும் தம்பிக்கும் கண்ணாலத்தை முடிச்சுடு ! ... எனக்குக் கண்ணாலமே வேணாம் !.. என்னால் இன்னொரு பெண்ணும் வேதனைப்பட வேணும் ! என் துக்கம் என்னோடே போயிடட்டும் ! அவளுக்கு அழகுக்கேத்த ஆம்பிளையைக் கட்டிக்க வேணுமின்னு ஆசை இருக்காதா ? ... நான் ஆயுசு பூராவும் இப்படியே இருந்துடறேன் ; ... சீக்கிரமா அவங்க ரெண்டுபேருக்கும் பரிசம் போட ஏற்பாடு பண்ணுங்க ! ..."

ராக்கப்பன் பேசி வாய் மூடவும் வாசல் புறமிருந்து "அத்தை !" என்று அழைத்துக் கொண்டே வீட்டுக்குள் வந்தாள் மங்கம்மா. அவளைக் கண்டதும் முகத்தைத்திரும்பிக் கொண்டான் அவன். அள்ளி முடித்த கொண்டையும், கயல் துள்ளும் கண்ணின் கருமணிகளுக்குப் போட்டியாக நெற்றியிலே இட்ட சாந்துப் பொட்டும், புள்ளி போட்ட ரவிக்கையும் புதுச் சேலையுமாக அழகை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்த மங்கம்மாவைக் காண்பதற்கு விருப்பமில்லையா, அவனுக்கு ?

"அத்தே ! கொஞ்சம் இப்படி வாங்களேன் ! ..." என்று மருதாத்தாளைக் குடிசைக்கு வெளியில் அழைத்துச் சென்றாள் மங்கம்மா. போகும் போது கடைக்கண்ணால் இலேசாக ஒரே தரம் நெஞ்சையள்ளும் பார்வைக் கணையை ராக்கப்பன் பால் வீசி விட்டுத்தான் போனாள். அவன் அவள் பக்கம் திரும்பவே இல்லை...

☆

"குட்டிச் சாத்தான் மாதிரி எனக்குப் புள்ளையா வந்து பொறந்தானே! ... ஏண்டா ராக்கப்பா ! தம்பி ஒன்னை அடிச்சுக் கீழே தள்ளிட்டானாமே ! ... அந்தப் பொண்ணு அழுதுகிட்டே வந்து சொல்லுது ! ... அவ ஒம்மேலே எவ்வளவு ஆசையா இருக்கா! ...

இதோ, பாரு ! வர்ற வெள்ளிக் கிழமை நல்ல நாளு. ஓங்க அப்பாரைப் போயி பரிசம் போட்டு வரச் சொல்லுகிறேன்... அவளுக்கு ஒன்னைத்தான் கட்டிக்கணுமாம்! அவளுக்கே பிரியம் இருக்கும் போது வேற யாரென்ன செய்ய முடியும் ? .. சரி, எழுந்துவா சாப்பிடலாம் ! ... ''

மங்கம்மாவுக்குத் தன்மேல் பிரியமா ? என்னத்தைக் கண்டு விட்டாள் தன்னிடம்? அன்பில்லாதது போலப் பேசினாளே... வெறுப்பது போலப் படபடவென்று எடுத்தெறிந்து பேசுவாளே! உருவத்தைக் கண்டு சிரித்தாளே? அந்த மங்கம்மாவா கல்யாணத்திற்குச் சம்மதிக்கிருள்!...

'' நீ வேணுமின்னே சொல்லுதே...முந்தியெல்லாம் என்னைப் பாத்துக் கேலி பண்ணிச் சிரிப்பாளே? அதெப்படி என்னைக் கட்டிக்கச் சம்மதித்திருப்பா?...''

'' பிஞ்சிலே எல்லாரும் அப்படித்தான் விளையாட்டுப் புத்தியா இருப்பாங்க!... பெண்ணுடை மனசு எல்லாம் ஒனுக்கெப்படிப் புரியப் போவுது ? ... நீ இன்னும் கோரமா இருந்தாக்கூட அவ ஒனக்குத்தவிர வேற யாருக்கும் கழுத்தை நீட்ட மாட்டா ...'' பெண் மனத்துக்கு விளக்கம் கொடுத்துப் பேசிய மருதாத்தாள் சாதத்தைப் பிசைந்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

மங்கம்மாவின் அன்புக்கு பாத்திரமான தான் எவ்வளவு பாக்கிய சாலி ! ... சோற்றுக் கவளம் தேனாக இனித்தது ராக்கப்பனுக்கு.

'' தம்பியை எங்கே காணோம் ?''

'' கழுதை எங்காவது ஊர்க் காட்டைச் சுத்திட்டி வரும் ! ''

குடிசைக் கதவு 'கிறீச்' சிட்டது. பெரியண்ணன் உள்ளே வந்தான்.

'' ஓகோ !... துரை சாப்பிடுருரோ ? ''

''ஒன்னைத்தாண்டா கேக்கிறேன்! ...அண்ணனேங்கிற மருவாதை கொஞ்சமாவது இருக்குதா?....... எத்தனைதான் இருந்தாலும் அவன் ஒனக்கு மூத்தவன் ! ...நினைப்பிலே வச்சுக்கோ ! ... கீழே தள்ளி அடிச்சியாமே ! ... இளைச்சவனு இருந்தா என்னமுஞ் செய்துடறதா ?... புத்தி கெட்டுபோய் அலையாதே ! ''

'' நான் ஒண்ணும் புத்தி கெட்டுப் போய் அலையலே ! ... இவனுடை மூஞ்சிக்கு அந்தப் பொண்ணு மங்கம்மாவோட என்ன பேச்சு வேண்டிக் கிடக்குது ?...அடிச்சதை உடனே இங்கே வந்து புகார் பண்ணிட்டாரோ, சோதாத் துரை !...''

'' அவனொண்ணும் சொல்லலே! அந்தப் பொண்ணுதான் உன்னுடை சூரத்தனத்தை வந்து சொல்லிச்சுது ! ... நாளைக்குக் கண்ணாலம் கட்டிக்கப் போற பொண்ணுகிட்டே அவன்பேசருன் ! ... ஒனக்கென்ன வந்தது ? அடுத்த மாசம் கண்ணாலம் ! வர்ற வெள்ளிக்குப் பரிசம் போடணும் ! அண்ணன் கண்ணாலத்துக்கு கூடமாட இருந்து ஒத்தாசை பண்ணுறதை விட்டுட்டுக் கச்சை கட்டி நிக்கறயே !... வெட்கமாயில்லே !...நாலு பேர் கேட்டாச் சிரிக்கப் போறுங்க ! .. ''

''என்னது கண்ணாலமா ...மங்கம்மா சம்மதிச்சிட்டாளா?'' ஆத்திரம் கொப்புளித்துக் குமிழியிட வார்த்தைகளை உமிழ்ந்தான் பெரியண்ணன்.

'' பின்னே......அவசம்மதம் இல்லாமலா நடக்கப் போவுது ! இப்பத்தான் வந்துட்டுப்போனு அவ. கண்ணாலத்துக்கு அவ 'பூரண சம்மதியா' இருக்குரு ! தட்டு முட்டுச் சாமானெல்லாம் வாங்கணும்! ஒத்தாசையா இரு ! முகத்தைத் தூக்கி வச்சிட்டு இராதே ! .. நல்லா இருக்காது, ஆமா ! ''

பெரியண்ணன் முகம் விகாரமாகத் தோற்ற மளித்தது. தாயின் வார்த்தைகள் அவன் உள்ளத்தைப் பேரிடியாகத் தாக்கின. கட்டைகுட்டையான சோதா அண்ணனுக்

குக் கட்டழகி மங்கம்மா சொந்த மாவதா ?.. தாங்க முடியவில்லே அவனல். வேகமாக எழுந்து வெளியே சென்ருன்.

" எங்கேடா, போறே! .. இப்படி வா!..." என்று கூவியழைத்த மருதாத்தாளின் குரலைச் சட்டை செய்யவில்லை அவன்.

★

மங்கம்மாளை ராக்கப்பனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாக ' பூவைத்து நிச்சயம் ' பண்ணிப் பரிசம் போடுவதற்கு மூன்று நாட்கள் தாம் இருந்தன. நாகம்பட்டி மூக்கின்மேல் விரலே வைத்து அதிசயப்பட்டது; மங்கம்மாளின் தூய அன்பையும், ராக்கப்பனின் அதிர்ஷ்டத்தையும் வியந்து போற்ருதார் இல்லே. பொருமைக் குணத்தால் உந்தப்பட்டுத் தூற்றி எள்ளி நகையாடியவர்களும் உண்டு.

சக்திக்கேற்ற அளவு விதவிதமான பலகாரங்களேயும் பண்டங்களேயும் மூத்த பிள்ளேயாண்டான், ராக்கப்பனின் திருமண வைபவத்திற்குச் செய்யத் திட்டம் போட்டுக் கொண்டிருந்த மருதாத்தாள், ராக்கப்பனே ரத்தம் சொட்டச் சொட்ட நாலேந்துபேர் தூக்கி வருவதைக் கண்டு பதறிப்போனுள்.

" என்ன.. என்ன ஆச்சுது ? "

" களத்து மேட்டுச் சாவடிக்குப் பின்புறம் யாரோ அடிச்சுப் போட்டிருக்காங்க ! .. நினேவு தப்பிடுச்சு" என்று யாரோ ஒருவன் கூறினன். ராக்கப்பனேக் கட்டிலில் கிடத்தினுர்கள்.

" எந்தப் படுபாவி இப்படிச் செய்தானே !...யாராச்சுலும் ஓடிப் போய் வைத்தியரை இட்டாங்களேன்...ஐயோ! எம்மவன் பிழைப்பானு? " தலையிலடித்துக்கொண்டு அலறிய மருதாத்தாள் மகனுக்குப் பக்கத்திற் சென்று பார்த்தாள். இரத்தம் ஏராளமாக வெளியேறியதால் நினேவிழந்து கிடந்தான் அவன்.

"ராக்கப்பா .... கண்ணேத்திறந்து பாரடா ! மூணுநாளிலே கண்ணுலத்துக்குப் பரிசம் போட இருந்தேனே ! இப்படி ஆயிடுச்சே ! என்ன செய்வேன் !" அவன் மேல் விழுந்து கதறினுள் மருதாத்தாள்.

செய்தி கேள்விப்பட்ட மங்கம்மா ஓடிவந்தாள். அத்தைக்கும் மருமகளுக்கும் ஆறுதல் கூறித் தேற்றுவதற்குள் அங்கே இருந்தவர்கள் மிகவும் பாடுபட வேண்டியிருந்தது.

வைத்தியர் வந்தார். பச்சிலே மூலிகைகள் பல ராக்கப்பனின் தலேயில் அரைத்து வைத்துக்கட்டப் பெற்றன. "இரத்தம் அதிகம் வெளியேறிப் போச்சு ... உயிர் பிழைக்கிறது இரண்டாம் பட்சந்தான்..." என்று கையை விரித்து விட்டுப் போனுர் வைத்தியர்.

கொஞ்சநேரம் கழித்து மெதுவாகக் கண்விழித்துப் பார்த்தான் ராக்கப்பன். ' அம்மா ' என்று ஈனஸ்வரத்தில் மெல்ல அழைத்தான்.

" என்னடா, ராஜா ? .. "

" தம்பி... அவளேப் பார்க்கணும் ! .. "

" இதோ, கூட்டிவரச் சொல்கிறேன்!..." மருதாத்தாள் எழுந்து வெளியே போனுள். மங்கம்மா மட்டிலும் அங்கே நின்று கொண்டிருந்தாள். கண்களில் நீர் வழிய நின்றிருந்த அவளேக் சைகை செய்து அருகில் வரச்செய்தான் ராக்கப்பன்.

" மங்கம்மா ... நான் இனிமேப் பொழைக்க மாட்டேன்... "

" ஐயோ அப்படிச் சொல்லாதீங்க மச்சான் ... " விக்கி அழுதாள் அவள்.

"ஒனக்கு எம்மேல ஆசை அதிகம்...ஆனு, தம்பி பெரியண்ணன் ஒம்மேலே உசிரை வச்சிருக்கான்...... அவனேக் கை விட்டுடாதே...... அவனேயே கண்ணுலம் பண்ணிக்கோ. அவன் நல்லவன்! "

" உடம்பை அலட்டிக்காதீங்க மச்சான் ! "

பெரியண்ணனை அழைத்து வந்தாள் மருதாத்தாள்.

"தம்பி!...வந்துட்டியா அம்மா!...தம்பி கூட நான் தனியாப் பேசணும்........" மங்கம்மாளைக் கூட்டிக் கொண்டு வாசலைக் கடந்து சென்றுள் அவன் தாய். ராக்கப்பனின் கண்களில் நீர் சுரந்தது. பெரியண்ணனும் கண்ணீர் வடித்தான்.

"நீ ஏன் அழணும்?..."

"என்னை மன்னிச்சுடு! ஆத்திரத்திலே செய்துட்டேன்!..."

"நீ நல்லதைத்தானே செய்தே!.. நான் உயிரோடு இருக்கிறதுலே யாருக்கு லாபம்?...மங்கம்மா மேலே நீ வச்ச அளவில்லா ஆசைதான் உன்னை அப்படி நடந்துக்கத் தூண்டிச்சுது!..நீயே மங்கமாவை கண்ணலம் பண்ணிக்கிட்டு சுகமா இரு!...கடப்பாரைக் கம்பியாலே என் தலையிலே அடிச்சதை மட்டும் யாரிடமும் சொல்லிடாதே! அப்புறம் மங்கம்மா உன்னைக் கட்டிக்க மாட்டா!... நீ சந்தோசமா இருக்கணும்!... எங்கே... காளியாத்தா மேலே ஆணை வச்சுக் சொல்லு......... யாரிடமும் சொல்றதில்லேன்னு!... ....."

"ஆணை! அண்ணுச்சி ... நான் பெரிய பாவி!...என்னை மன்னிச்சிடுங்கோ! நீங்க தெய்வத்துக்குச் சமானம்!" என்ற வார்த்தைகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான் பெரியண்ணன்.

சாவதிற்குள்ளாகப் பெரியண்ணனையும், மங்கம்மாளையும் மணக் கோலத்திலே பார்த்துவிட வேண்டுமென்று ராக்கப்பன் விரும்பியதற்கிணங்க, அதிகத் தாமதமில்லாமல் அவர்கள் திருமணம் நடந்தேறியது. தம்பதிகளை மாலையும் கழுத்துமாகப் பார்த்து மனமார ஆசீர்வதித்து மகிழ்ந்தான் ராக்கப்பன். இதில் ஆச்சரியம் என்னவென்றால், இறந்து விடுவானென்று எல்லோரும் எண்ணியிருந்த ராக்கப்பன் மணமக்களை வாழ்த்திய கையோடு, படுக்கையிலிருந்து எழுந்து நன்றாக நடமாடத் துவங்கியதுதான். அனைவருக்கும் அவன் பிழைத்து எழுந்தது, வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

அன்று மாலை யாரோ ஒருவனிடம் ராக்கப்பன் கூறிக்கொண்டிருந்தான். "மங்கம்மாவுக்கும் அம்மைக்கும் எம்மேலே பிரியம் அதிகம்!... ஒண்ணுக்கும் லாயக்கில்லாத என்னைக் கட்டிக்கிட்டா அவளுக்குக் கடைசி வரையிலும் வேதனைதான்! பெரியண்ணனுக்கு மங்கம்மான்னு உசிரு! நான் சொன்னாலும் பிடிவாதக்காரி மங்கம்மா கேட்கமாட்டாள். களத்து மேட்டிலேயிருந்து பள்ளத்திலே உருண்டு விழுந்துட்ட எனக்கு இலேசான காயந்தான்... ஆனா, நினைவு தப்பின மாதிரியும் சாகப் போற மாதிரியும் படுக்கையிலே கிடந்து காரியத்தைச் சாதிச்சுட்டேன்......தம்பி பெரியண்ணன் மனசும் இப்போ தங்கக் கம்பியாட்டம் மாறிட்டது! வெறே என்ன வேணும் எனக்கு? ......மீதிக் காலத்தை நான் நிம்மதியாகக் கழிச்சுடுவேன்.........காளியம்மன் திருப்பணி இருக்கவே இருக்குது'........"

சந்தா விகிதம்

——

தனிப்பிரதி 25 ந. பை.

6 மாதச் சந்தா ரூ. 1-50

வருடச் சந்தா ரூ. 3-00

Telephone: MADRAS 4890. MADURAI: 581

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை . மதறாஸ் . பெங்களூர் . விஜயவாடா

போன்: 151 தந்தி: VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அண் கோ.

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.

197693

THE LAKSHMI MILLS COMPANY LIMITED

Pappanaickenpalayam,

COIMBATORE.

Telephone : 18 & 818
Telegrams : 'LAKSHMI'

Branch at Kovilpatti : Telephone : 18
Telegrams: 'LAKSHMIMIL,

SPINDLAGE AT *Coimbatore—59,680 & Looms 200*
Kovilpatti —51,120

SPINNERS OF :

Quality Cotton Yarn 20^s to 100^s Combed and Staple Fibre Yarn

Manufacturers of :

GREY LONGCLOTH AND MULLS

: MANAGING AGENTS :

G. KUPPUSWAMY NAIDU & CO.,

COIMBATORE.

சிறுவர் பகுதி

பொய்யும், நெய்யும்

த. சண்முக சுந்தர பாண்டியன்

பள்ளியில் ஆண்டு இறுதித் தேர்வுகளெல்லாம் எழுதியாயிற்று; விடுமுறையும் அளிக்கப்பட்டு, பள்ளி மூடப்பட்டு விட்டது. வழக்கம் போல் இந்த ஆண்டும் சித்திரைத் திருவிழா பார்க்க மதுரைக்குப் புறப்பட்டோம். மதுரையில் எங்கள் அக்கா வீடு இருக்கிறது. அதனுல்தான் எங்களுக்கு வருடா வருடம் தவருமல் சித்திரைப் பெருவிழாவினைப் பார்க்கின்ற வாய்ப்பு கிட்டி வருகிறது; அதன் மூலம் விடுமுறை நாட்களையும் நல்ல முறையில் கழிக்க முடிகிறது. இந்த ஆண்டு நானும், என்னுடைய பெரிய தம்பி ரவி, சின்னத்தம்பி வாசுவுமாக மூன்று பேர்களும் மதுரைக்கு ரயிலேறினேம்.

மதுரைக்கு அக்கா வீட்டிற்குச் செல்லுகின்ற போதெல்லாம் இனிப்புப் பண்டங்கள் சுட்டுக் கொடுத்தனுப்புவது எங்கள் அம்மாவுக்கு வழக்கம். அந்த வழக்கத்தில் இந்த ஆண்டிலும் எந்த விதமான மாற்றமும் இல்லை. லட்டு, மிட்டாய், அதிரசம் முதலிய நெய்யிற் சுட்ட பண்டங்களைத் தனித் தனியே ஓலைப் பெட்டிகளில் அடைத்து, ஓலைப் பெட்டிகளை ஒரு சின்ன பையில் வைத்துக் கட்டிக் கொடுத்திருந்தார்கள் எங்கள் அம்மா! அதோடு மதுரை போய்ச் சேருகின்றவரை அந்தச் சின்னப் பையை அவிழ்க்கவே கூடாது என்ற கண்டிப்பான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த உத்தரவை அமல் நடத்துவதில், என்னைக் கண்காணிக்க எனது தம்பிமார்களையும், அவர்களைக் கண்காணிக்க என்னையுமாக, மூவரையும் அந்தச் சின்னப் பைக்குக் காவலாளியாக நியமித்திருந்தார்கள் எங்கள் தாயார்.

"டக்கட்டி! டக்கட்டி! டக்கட்டி டக்!" என்று ரயில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. பண்டங்களிலிருந்து நெய் வாடை மூக்கைத் துளைத்தது; நாவில் நீரும் ஊறியது; ஆனுலும் "இந்தப் பூனைகளும் பால் குடிக்குமோ" என்று நினைக்கத் தோன்றும் படியாக அந்தப் பண்டங்களைப் பற்றியே பேசாதிருந்தோம்.

கோவில்பட்டியை இரயில் தாண்டியது. சிறுநீர் கழிப்பதற்கென்று எழுந்து சென்றேன். கக்கூசுக்குள் நுழைந்து விடவில்லை. தம்பிமார்களை சோதிக்க வேண்டுமென்று எண்ணினேன். அவர்களுக்குப்

பின் புறமாக ஒளிந்து நின்று நடப்பதை யெல்லாம் பலகை இடுக்குகளின் வழியே கவனித்தேன்.

பெரிய தம்பி ரவி சுற்றும் முற்றும் பார்த்து விட்டு சின்ன பையை அவிழ்த்தான், வேகமாக! சின்னவன் வாசு முதலில் எதிர்த்தான் என்ருலும் சிறிது நேரத்தில் உடன்பட்டு இணங்கி விட்டான். பன்னிரண்டு அதிரசங்களை எடுத்துக் கொண்டு கிடைக்கும்'' என்று வாசுவையும் பயமுறுத்தினன். வாசுவுக்கும் பயம். அவனுக்குக் கிடைத்த இரண்டு அதிரசங்களைக் கூட தின்றுதீர்க்கவில்லை.

''டேய், வாசு! நீ மதுரையில் போய் நிறையத் தின்னலாம்... இப்போது.... அண்ணன் வந்து பார்த்துவிடப் போகிருன்...'' என்று கூறி, இரண்டில், வாசு முழுசாக கையில் வைத்திருந்த ஒன்றையும் பிடுங்

பழையபடியே பையைக் கட்டி வைத்து விட்டான் ரவி. ஒரு டசன் அதிரசங்களில்இரண்டை மட்டுமே வாசுவுக்குக் கொடுத்தான். சிணுங்கிக் கொண்டே இன்னென்று கேட்டான் வாசு; வாசு ஒன்றைக்கூட த்தின்னவே இல்லை. அதற்குள் பத்து அதிரசங்களையும் தின்று தீர்த்து விட்டான் ரவி!

''வாசு! சீக்கிரம் தின்றுவிடு! பெரிய அண்ணன் வந்து விடப் போகிருன். வந்து விட்டால் அடிதான் டசன் கணக்கில் கித் தின்றுவிட்டான் ரவி! வாசுவுக்கும் ஆட்சேபனை இல்லை. ஏனென்ருல் அவனுக்கு அவ்வளவு பயம் இருந்தது.

இத்தனையும் அறியாதவன் போல் வந்து என்னுடைய இடத்தில் அமர்ந்து கொண்டேன். இரயில் சாத்தூரைத் தாண்டியது. இருவருடைய முகங்களையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வந்தேனே தவிர அவர்களிடம் எதுவும் கேட்கவும் இல்லை; பேசவும் இல்லை. மூளையிலும்

மனத்திலும் ஆழப் படியும்படியாக ஒரு கதை சொல்லி, குற்றத்தை உணரச் செய்து அவர்களைத் திருத்த வேண்டும் என்று எண்ணினேன். அதற்காக ஒரு சிறு கதையை சிருஷ்டித்துக் கொண்டிருந்தேன்.

இருவரும் திருதிரு வென்று விழித்தார்கள். ரவி, அடிக்கடி முகத்தைச் சுழித்துக் கொண்டதையும், வயிற்றைப் பிசைந்துக் கொள்வதையும், எழுந்து எழுந்து அமர்வதையும் கவனித்தேன்.

"அண்ணா! வயிறு வலிக்கிறது. ஒரு சோடா வாங்கிக் கொடு!" என்றான். அதைத் தொடர்ந்து சிணுங்கினான். பின்னர் அழுகையாகி கதறலில் வந்து முடிந்தது. குப்புறப் படுத்துக் கொண்டு "அய்யோ, அம்மா, அப்பா" என்று கதறினான். எனக்குக் கதை சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது.

"காரணமில்லாமல் வயிறு வலிக்காதே" என்றேன். அவனிடமிருந்து பதிலே இல்லை.

"தின்பண்டம் நிறையத் தின்று விட்டாயோ?" என்று கேட்டேன்.

"இல்லை அண்ணா! வீட்டில் தான் தின்றேன். இரயிலில் தின்னவே இல்லை" என்றான். அவன் பேச்சே, பேசுவது பொய் என்பதைக் காட்டி விட்டது. நான் கேட்ட கேள்வி, அவன் தின்ற பண்டத்தின் அளவினைப் பற்றியது, "நிறையத் தின்று விட்டாயா?" என்பதாகும். அதற்கு அவன் அளித்த பதிலோ, பண்டத்தின் அளவினைப் பற்றியதாக இல்லை; தின்ற இடத்தைப் பற்றியதாக, "இரயிலில் அல்ல வீட்டில் தான்" என்பதாக இருந்தது.

"வாசு! நீ ரயிலில் தின்றாயா? உள்ளதைச் சொல். பொய் சொன்னால் உனக்கும் வயிற்று வலி வந்துவிடும்" என்றேன், சின்னவனைப் பார்த்து.

"நான் ஒன்றே ஒன்றுதான் அண்ணா தின்றேன்! ரவிதான் நிறையத் தின்றான்" என்றான் வாசு.

"இல்லை அண்ணா! வாசு பொய் சொல்லுகிறான். நான் ரயிலில் தின்னவே இல்லை" என்று மறுத்தான் பெரியவன் ரவி.

"இல்லை அண்ணா! ரவிதான் பொய் சொல்லுகிறான்" என்றான் வாசு.

அவர்களுடைய தர்க்கம் உச்சகட்டத்தை அடைந்து விட்டது.

"வாசு! உனக்கு வயிறு வலிக்கிறதா?" என்று குறுக்கிட்டுக் கேட்டேன் நான்.

"இல்லை!" என்றான் வாசு.

"ரவிக்கு மட்டும் ஏன் வலிக்கிறது?"

"அவன் பொய் சொல்லுகிறான் அண்ணா" என்றான் வாசு.

இந்த பதில் ரவியின் இருதயத்தில் முள்ளாகத் தைத்துவிட்டது. வாசுவை முறைத்துப் பார்த்தான்.

"ரவி! நீ பொய் சொல்லுகிறாயாம், அதனால்தான் உனக்கு வயிறு வலிக்கிறதாம். மெய் சொல்லிவிடு; உடனே வயிற்று வலி நின்று விடலாம்" என்றேன்.

"மெய்யாகவே இரயிலில் தின்னவே இல்லை அண்ணா!" என்று மீண்டும் பொய்தான் சொன்னான். அவன் தன் வாயை

மூடுவதற்குள் ரவி தன் வாயைத் திறந்து விட்டான்.

''அண்ணு! நீ எழுந்து போன வுடனே பையை அவிழ்த்து ஓலைப் பெட்டியிலிருந்து 'ரெம்ப' அதிரசம் எடுத்தான். எனக்கு ரெண்டுதான் கொடுத்தான். அப்புறம் அதிலும் ஒன்றைப் பிடுங்கித் தின்று விட்டான்!'' என்முன் ரவி. இதற்கு வாசு மறுப்பு கூறவில்லை; மௌனமாக இருந்தான்.

''ரவி! உனக்கு வயிற்று வலி நீங்கவேண்டுமா, வேண்டாமா? நீங்க வேண்டுமானுல் உள்ள தைச் சொல்லிவிடு! உள்ள தைச் சொல்லா விட்டால் வயிற்று வலி நீங்கவே நீங் காது...?'' என்று கடுமையாக எச்சரித்தேன். வயிற்று வலி பொறுக்க முடியாமல், வேறு வழியும் இல்லாமல் உள்ளதைச் சொல்லி விட்டான். வாசு சொன்ன தெல்லாம் உண்மை என்பதையும் ஒப்புக்கொண் டான்.

''இதுவரை நீ என்னென்ன குற்றங்கள் செய்திருக்கிருய் சொல்லு பார்க்கலாம்?'' என்று கேட்டேன். பதிலே பேச வில்லை. கண்ணீரைத்தான் கொட்டினுன். அந்த நிலையில் குற்றங்களை உணர்ந்தால்தான் மீண்டும் அவை போன்ற குற்றங்களைச் செய்ய மாட்டான் என்பதற்காகவே மீண்டும் மீண்டும் கேட்டேன். அழுது கொண்டே பதில் சொன்னுன்:

''அம்மா சொல்லைத் தட்டி விட்டு பையை அவிழ்த்து அதிரசம் எடுத்தது; வாசுவுக்கு ஒரு அதிரசம் மட்டும் கொடுத்து விட்டு மீதியிருந்த பதினென் றையும் நான் தின்றது; இரயி லில் தின்னவே இல்லை என்று பொய் சொல்லியது''.

''ஆக எத்தனை குற்றங்கள் செய்திருக்கிருய்?''

''மூன்று'' அழுது கொண்டே தான் சொன்னுன்.

''அதற்கு என்ன தண்டனை கிடைத்தது?''

பதில் சொல்லவில்லை. விக்கி விக்கி அழுதான். நான் விட வில்லை.

''உம், பதில் சொல்! என்ன தண்டனை கிடைத்தது?''

''வயிற்றுவலி'' என்முன்; எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. சிரித்து விட்டேன். அதைப் பார்த்து அழுகையினூடே தன்னையுமறியாமல் அவனும் சிரித்து விட்டான். மறுகணம் கண்களைப் பிசைந்து கொண் டான்.

''தண்டனை தந்தது யார்?'' என்று கேட்டேன். ஏங்கி ஏங்கி அழுதான். நானு விடுவேன்?

''உம், சொல்லு! தண்டனை தந்தது யார்?''

''கடவுள்'' என்று சொல்லி விட்டு என்னைப் பார்த்தான். நான் சிரிக்கவில்லை, அவனும் சிரிக்கவில்லை.

''நீ செய்த குற்றங்களை உணர்ந்து விட்டாயல்லவா?''

''உம்'' என்று தலையசைத் தான்.

''இனிமேல் இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்ய மாட் டாயே?'' தலையசைப்பைத் தவிர வேறு பதில் இல்லை.

" இப்போது உன் வயிற்று வலி நீங்கவேண்டுமல்லவா ?" என்று இலேசாக சிரித்துக் கொண்டே கேட்டேன்.

ஏக்கமும் அழுகையும் கலந்து வந்து அவனை ஒரு உலுப்பு உலுப்பி விட்டன. இரயில் நின் றது. அது விருதுநகர் ஸ்டே ஷன். கீழே இறங்கினேன். ஸ்டாலில் மூன்று காப்பிக்குச் சொன்னேன். முதலில் கொஞ் சம் 'கொதிநீர்' வாங்கிவந்து அதை இலேசாக ஆற்றி ரவி யின் கையில் கொடுத்தேன். 'சுடச் சுட' குடிக்கும்படி செய் தேன். அதற்குமேல் ஆளுக் கொரு சூடான காப்பி சாப்பிட் டோம்.

இரயில் நகர்ந்தது. ஏறி அமர்ந்து கொண்டேன். பசுமலை வரை எதுவுமே பேசவில்லை. மதுரை நெருங்கி விட்டது.

"ரவி! வயிற்றுவலி இருக் கிறதா இல்லையா?" என்று கேட் டேன். இலேசாகச் சிரித்தான்.

" இல்லை " என்று பதில் சொன்னான்.

"நெய் உறையுமா ரவி?"

"உறையும்"

"எப்போது?"

"குளிர்ச்சியாக இருக்கும் போது...!"

"உறைந்த நெய்யை இளக்க என்ன செய்ய வேண்டும்?"

"நெருப்பில் வைக்க வேண் டும்"

"நீ தின்றுயே அந்த அதிரசம் எதில் சுட்டது?"

"நெய்யில் சுட்டது!"

"அந்த நெய்தான் உன் வயிற் றுக்குள் போய் உறைந்து விட் டது. அதனால்தான் வயிறு வலித்தது. சூடான காபியும் நீரும் வயிற்றுக்குள் போய் உறைந்திருந்த நெய்யை இளக்கி விட்டன. உடனே உன் வயிற்று வலியும் நின்று விட்டது."

ரவியின் மூளை பலமாக வேலை செய்தது. சிந்தித்தான், ஆழ்ந்து சிந்தித்தான். வயிற்று வலிக்கு, செய்த குற்றங்களே காரணம் என்பதை அவனு டைய மனம் ஏற்றுக்கொண் டது. உறைந்த நெய்யே வயிற்று வலிக்குக் காரணம் என்பதை அவனுடைய மூளை ஏற்றுக் கொண்டது. மதுரையில் வந்து இரயில் நின்றது. நாங்கள் மூவ ரும் பையுடன் இறங்கி, அக்கா வீடு போய்ச் சேர்ந்தோம்.

★



" கோபித்துக் கொள்ளாதீர்கள் ஐயா சைக்கிளில் 'பிரேக்' இல் லாததால் உங்கள் மேலே இடித்து விட்டேன்! மன்னிக்கணும். கொஞ் சம் தீப்பெட்டி தருகிறீர்களா? 'லைட்'டை ஏற்றிக்கொண்டு விட்டுத் தருகிறேன் !"

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனாமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதராஸ்.



S. SANTHOSA NADAR & SON

1/4, EVENING BAZAR . . . . PT. MADRAS

BAROOL

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3

7, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

எழுத்தாளரே! எழுதாதீர்!



ஆரெஸ்ஸஸ்

1. எழுத்தாளர் தலையில் விழுந்த இடி!

ஞாயிற்றுக்கிழமை. வாரத்தின் ஆறு நாட்கள் வீணுட்களான பிறகு, நமக்காக நாமே அனுபவித்து வாழும் இருபத்தி நாலே பொன்னுன மணிகள் கொண்ட திருநாள்.

அலுவலக அவசர அலங்கோலப் பிரயாணம் கிடையாது. 'புஸ் புஸ்' என்ற நாகத்தின் பெருமூச்சு போன்ற நிர்வாகியின் மணியோசை கேளாத நன்னுள். எழுதத் தொடங்கினேன்; கடிதமல்ல; கணக்கல்ல; கதையை!

எழுத்தாளர்களில் பலரும் வேதனைப்படுவது போல், எமன் போன்ற ஏழெட்டுக் குழந்தைகளோ கடன்காரரர் என்ற கற்பனை மறைக்கும் திருநந்திகளோ வேதனை விளைக்கும் சகதர்மினியோ எனக்கில்லை... அடியேன் ஒண்டிக் கட்டை. ஒட்டியும் ஒட்டாமலும் தாமரை இலைத்தண்ணீராக வாழ்க்கை நடத்தும் தனியன்.

சிங்காரத் தோட்டத்தின் இடையே அமைந்த சிறிய வீடு... 'இலக்கிய இல்லம்' என்ற பெயர் பொறித்த கல் பதித்த வாயில். விலங்கெதுவும் பூணுமல், வில்லங்கம் இல்லாமல் இலக்கியப் பணி செய்துவந்தேன்.

எழுதத் தொடங்கினேன். மாடி வீடு வளர்ந்து கொண்டிருந்தது. அதை உருவாக்க மாடுபோல் உழைத்துக் கொண்டிருந்த மனித உள்ளங்களோ தேய்ந்து கொண்டிருந்தன...''

வாசலிலே ஏதோ கார் வந்து நின்ற ஓசை கேட்டது. எழுத்து தடைபட்டது. மெல்லிய காலடியோசை... "ஸ்லிப்பரா...செருப்பா...பூட்ஸா..." இப்படியெல்லாம் உட்கார்ந்தே இடத்தை விட்டு நகராமல் ஆராய்ச்சி செய்வது எனக்கு மிகவும் பிடிக்கும்.

'டக்டக்' "ஐயா...உள்ளே வரலாமா?"

அமைதியான நிலவு. உலகம் உறங்கும் வேளை. ஓங்கி வளர்ந்த ஓர் கோபுரம். அதன் உச்சியில் கம்பீரமாகக் கட்டப் பட்டுள்ள, சிறந்த ஸ்தபதிகளால் இலக்கணப்படி வார்க்கப்பட்ட வெள்ளிமணி,

காதல் கதைகளிலே பலவிதம்; அதிலே இந்தக் கதை ஒரு புது விதம்!

அதன் பட்டு கயிற்றை தன் பிஞ்சு விரல்களால் ஓர் குழந்தை இழுத்தால், எத்தகைய இன்ப நாதம் விளையும்? அதைக் கேட்டால் ஓர் கவிஞனுக்கு, கலாரசிகனுக்கு எத்தகைய உணர்ச்சிப் பரவசம் உண்டாகும்? அது போன்ற உணர்ச்சி என்னுள் பரவிப் பரந்தது, இந்த இனிய குரல் கேட்டதும்!

கதவு திறந்தது. நெருப்புத் துண்டமாகத் தோன்றி, பிறகு சொக்க வெள்ளிப் பாற்குடமாகப் பரிணமித்து, நீலக் கடலையும், நீனிலத்தையும் தண்ணொளியில் பரவசப் படுத்தும், சந்திரோதய காட்சியைக் கடற்கரையில் அமர்ந்து கவனித்திருக்கிறீர்களா?

கதவு திறந்ததும், அத்தகைய நிகழ்ச்சி தான் ஏற்பட்டது. பூரண சந்திரனின் பொலிவு கொண்ட பூங்கொடி ஒருத்தி உள்ளே வந்தாள். என் மனக்கதவின் 'பாட்லாக்'களும் கிறிச்சிட்டன!

'உட்காருங்கள்'

பொன்னிறமல்ல; புத்தம் புதிய வெண்கல வண்ணம்; காதளவோடாத கண்கள்தான் என்றாலும் ஆழ்ந்து அறிவொளி காட்டிய

கயல் விழிகள். விளம்பர போர்டு களின் நியான்ஸ் விளக்கின் படாடோபமான கவர்ச்சியில்லை. பூஜை அறையின், வெள்ளிக் குத்துவிளக்கின் இன்பமான ஒளிவெள்ளம். என்னைப் போலவே அவளும் மதிப்பிட்டில் இறங்கி விட்டாளோ?

அமைதியாகக் கரைந்தன, சில மணித்துளிகள். 'தாங்கள் தான் எழுத்தாளர்...' கேள்வி தொடுத்தாள்.

'புதுப் பித்தன்' நான் முடித்தேன்.

'நான் தங்கள் ரஸிகை. மேரி ராணி கல்லூரியில் இறுதி ஹானர்ஸ் படிக்கிறேன்.'

'பெயரென்னவோ? தெரிந்து கொள்ளலாமா?

'விமலா.'

('அழகான திரு நாமம்' என்று அர்ச்சனை நான் செய்யவில்லை வெளிப்படையாக என்றாலும், "உள்ளே" அப்படி நடந்தது!)

'தாங்கள் என்னைத் தேடி வந்தது?'

'சொன்னால், சற்று விசித்திரமாக இருக்கும், தாங்கள் கோபமும் கொள்ளலாம்.'

'ஏதடா இது! அடிப்படை பலமாக அமைக்கிறாளே! தலைமை தாங்கவா, தானம் வழங்கவா, எதற்காக?'

'ஏதாவது நன்கொடை விஷயமா?'

'ஆமாம். கொடைதான். நன்கொடைதான். ஆனால் விசித்திரமான தானம்,'

'அப்படி என்னதான் கேட்கப் போகிறீர்கள்?'

'சஸ்பென்ஸ்' திருப்பங்களை வாரிவழங்கும் நானே இப்பொழுது அந்தப் பரபரப்பை உணர்ந்தேன். அவள் முறுவலித்தாள். முத்துப் பல் வரிசைகூட விளம்பரமாகாதசிங்கார இளநகை.

'தொழிலில் முன்னேறியிருப்பவர்கள் புதியவர்களுக்கு ஆக்கமளிப்பது அவசியமாகச் செய்யவேண்டியதுதான்' என்றேன்.

'எழுத்துத் துறைக்கும் இது பொருந்துமல்லவா?'

'கண்டிப்பாகப் பொருந்தும்'

'அப்படி என்றால், நான் கேட்பதைத் தாங்கள் தானமளித்தே ஆகவேண்டும்!'

என்னைச் சுற்றிலும் ஓர் கயிறு இறுகிவிட்டதை உணர்ந்தேன். கோல வள்ளி கண்டு குமரனே கிறுகிறுத்தானே/ ஏழை எழுத்தாளன் ஏந்திழையாள் எழிலால் எலிப் பொறியில் சிக்கியதில் என்ன அதிசயம் உள்ளது?

'தாங்கள், இனி எழுதுவதில்லை என்று தானம் அளிக்க வேண்டும்!'

'நீலவானத்தில் இருந்து இடி இறங்கியது' போல என்பார்களே ஆங்கிலத்தில், அதுபோல என் தலையில் பேரிடி...

'சடா'ரென எழுந்தேன். கோபமும், கொந்தளிப்பும் என் நரம்புகளைத் தெரிக்கச் செய்தன.

அவளும் எழுந்து விட்டாள். பயத்தின் சாயை அவள் முகத்திலே படர்ந்தது. கூண்டிலடைபட்ட சிங்கமென இரண்டொருமுறை உலாவி விட்டு, சாளரத்தருகில் சென்று நின்று சிந்திக்க ஆரம்பித்தேன்.

'இருதயத்தை எடுத்து தானம் கொடு என்று கேட்டிருந்தால் கூட கொடுக்கலாம் அம்மணி! எழுத்தைக் கேட்டு விட்டீர்களே! என்ன துணிச்சல்! முன்பின் தெரியாத என்னிடம் வந்து'

அவள் இடைமறித்தாள். 'தாங்கள் தவறுதலாக எண்ணிக் கோபப் படுகிறீர்கள். தாங்கள் எழுதவே கூடாது என்று நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்ல எனக்கென்ன பைத்தியமா?'

'என்ன?' ஆச்சரியத்துடன் திரும்பினேன்.

'ஆம். தங்கள் ரசிகை என்ற முறையில் தான் அதையும் கேட்கிறேன். தாங்கள் இதுவரையில்

எழுதிய கதைகளின் கருப் பொருள் களாக யாரை வைத்து எழுதினீர் கள் ?'

'ஏன் ? . ரஸிக சிகாமணிக்கு அது கூடத் தெரியாதா ? '

'தெரியாது என்று நினைக்கிறீர் கள் ?

'உங்கள் படைப்புகளுடன் நான் ஒன்றி விட்டவள். ''களத்துமேடு'' 'கன்னியம்மாள்', 'மில்கூலி', 'முத் திருளன்', இன்னும் '

'எல்லோரையும் படித்து விட்டுத் தான் 'எழுதாதே' என்று கேட்க வந்தீர்களா ? '

' எனது கேள்விக்கு பதில் இல்லையே ? உங்கள் கதையின் கருப் பொருள்களை '

'சமுதாயத்தின் எல்லாப் பகுதிக ளிலிருந்தும், தேர்ந்து எடுக்கிறேன். அநீதியின் இருள் பரவியுள்ள மூலை களில் எழுத்தால் வெளிச்சம் போடுவதே என் இலட்சியம். மனி தப் பண்பு மறைந்து விட்ட மனங் களில் அதை மீண்டும் ஊறச் செய் வதற்காக தன்னம்பிக்கை தளர்ந்து விட்டவர்களின் தடுமாற்றத்தை நிமிர்ந்து நேராக்குவதற்காக எழுது கின்றேன்.

விசாலமான அவள் தடங் கண் கள் இன்னும் விரிந்தன.

'உம்' கொட்டினாள்.

'இன்னும் கேளுங்கள். தமிழகத் தின் சிறுகதை இலக்கிய பரம்பரை யில் புதிய போக்கைக் காட்டினார் 'புதுமைப் பித்தன்'. அவர் ஓர் முறை தனது சிறுகதைகளை பற்றி என்ன சொன்னார் தெரியுமா ? ''எனது கதைகளிலே நிலவு கிடையாது; தென்றல் கிடையாது; எனது செண்பக ராமன் பிள்ளை இருட்டில் வந்தார். இருட்டிலே போனார்!' நான் அவரை நூற்றுக்கு நூறு ஒப்புக்கொண்டு வழிபடுபவன். அவரது மேதை என்னிடம் இல்லை என்றாலும், அவருடைய துடிப்பு, இதய தாகத்தை நான் உணர்ந்த வன்.' விமலா குறுக்கிட்டாள்: 'தாங்கள் கூறிய இலட்சிய விளக் கத்தை ஒப்புக் கொள்கிறேன். நான் வேண்டுவதெல்லாம், 'ஒன்பான்' சுவைகளில் ஓரிரண்டை தாங்கள் ஏன் ஒதுக்கி விட்டீர்கள் ? என்பது தான் ! குறிப்பாக இலக்கிய கர்த் தாக்களுக்கு மிகவும் விருப்பமான காதல் சுவையை?'

திடுக்கிட்டேன் . கா ...த...ல்... தன்னந்தனியாக என்னிடம் வந்து 'காதல்' கதை எழுதக் கேட்கிறாள், ஓர் கட்டழகி. என்ன துணிச்சல் !

கூரிய மின்சாரத் தாக்குதல் ஒன் றைத் தன் விழிகளால் தொடுத்து விட்டுத் தலை குனிந்தாள், விமலா.

நானோ...நிலை குலைந்தேன்.

'தாங்கள், தாங்கள் என்ன கேட்கிறீர்கள் ? '

'காதல் கதைகள் எழுதுங்கள் என்று. சமுதாயத்தின் இருட்டுப் பகுதிகளை மாத்திரம் படம்பிடித்துச் காட்டுவதால், 'நிராசை' இளம் உள்ளங்களைக் கவ்விக் கொள் ளாதா ? எனவே தான் ,கசப்போடு இனிப்பையும் கலந்து எழுதச் சொல்கிறேன்.'

சட்டசபையில் வாதாடும் எதிர்க் கட்சித் தலைவரின் சாதுரியம் அவள் பேச்சிலே மிதந்தது.

'மிஸ் விமலா, உங்களுக்குத் துணிச்சல் மிகமிக அதிகம். காதல் கதை எழுது என்று ஓர் இளைஞ னிடம் வந்து...'

விமலா எழுந்து விட்டாள். 'என் வேண்டுகோள் ஒப்புக் கொள்ளப் பட்டு விட்டது என்றே எண்ணு கிறேன்.'

'உம் ... தங்களைப் போன்றவர் கள் கேட்கும் பொழுது தட்டிக் கூற முடியுமா ?'

''அப்படியானால் அடுத்தவாரம் 'தேன் கூட்'டில் ஓர் தேன் சொட் டும் கதை வரும். வருகிறேன் !'' சென்றுவிட்டாள். தனியனான என் வாழ்வில் சில நிமிடங்கள் பிரகா சித்த நிலவு மறைந்து விட்டது போன்ற உணர்வு எனக்கேற்பட் டது... தேன் சொட்டும் கதையாம்;

தேன் மொழியாள் ஒருத்தி சேட்டு விட்டுச் செல்கிருளே!

பேஞவை எடுத்து, பேப்பரில் பதித்தேன்.

2. ஏந்திழையாள் கொண்ட எண்ணம்!

'அப்பா...' பெருமூச்சு கலந்து இச்சொல்லைப் பேசியது வாய். இமயமலையின் சிகரத்தை அடைந்ததும், டென்சிங் இப்படித்தான் பெருமூச்சு விட்டிருக்கவேண்டும்!

அரியதோர் காரியத்தை சாதித்து விட்ட பெருமையால், என் உள்ளம் பூரித்துப் பொங்கிக் கொண்டிருந்தது. 'டாக்ஸி' ஓடிக் கொண்டிருந்தது வீட்டை நோக்கி. நானே உணர்ச்சிப் பெருக்கில் பறந்து கொண்டிருந்தேன் கற்பனை உலகத்தில்.

விளையாட்டாகத் தொடங்கியது, எவ்வளவு தூரம் என்னை இழுத்து வந்து விட்டது?

ஆம்; என்பெயர் விமலாவும் இல்லை...நான் மேரிராணி கல்லூரி மாணவியும் இல்லை. பாவம், 'புதுப் பித்தன்' ஏமாந்து விட்டார்!

ஊரில் உள்ள எல்லாரையும் ஏமாற்றும் இந்த எழுத்தாளர்களில் ஒருவரை நான் இன்று ஏமாற்றி விட்டேன்!

நினைத்தவுடன், பாத்திரங்களைப் பிறக்க வைத்து, உணர்ச்சிக் சடலில் தள்ளி, எண்ணியபடியெல்லாம் ஆட்டிவைக்கும், ஓர் பேஞ மன்னன், இன்று என்னல் முட்டாளாக்கப்பட்டு விட்டாரே?

ஆனல்? பாவம்! இவ்வளவு நல்லவரையா ஏமாற்றுவது?

நான் கூட மிக்க நம்பிக்கையில்லாமல் தான் புறப்பட்டேன். எப்படியோ! என்னைப் பார்த்தது முதல் அவர் போக்கே ஒரு மாதிரியாக.. ஆம்! ஒரு மாதிரியாக இருந்ததே. அடாடா! எனது பரபரப்பில், அவரைச் சரியாக ஆராயாமல் விட்டு விட்டேனே?

ஆம். 'சம்பள உயர்வு உத்திரவைக் கண்ட என். ஜி. ஓ. முகம்' போல, அவரது முகம், என்னைக் கண்டதும்! ஓ.. என்னை அவருக்குப் பிடித்து விட்டதோ? 'மரக்கட்டையையும் துடிக்கச் செய்யும் ரதி கூட அவ்வரை அசைக்க முடியாது' என்றனே ரவி. அதுவும் பொய்யாகி விட்டதே!

நான் என்ன அவ்வளவு அழகாகவா இருக்கிறேன்? சற்று ஒதுங்கி, டாக்ஸி டிரைவரின் அருகிலிருந்த கண்ணுடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டேன். உம், அவர் கூட நல்ல அழகர் தான். தூய கதர் உடை, நீண்ட பரந்த நெற்றி, கம்பீரமான கண்கள், இன்னும்...

இதென்ன, அவரை இவ்வளவு தூரம் ஏன் என் மனம் எடைபோட வேண்டும்? ஏதோ ஒன்றை அவரிடமே விட்டுவந்த மாதிரித் தோன்றுகிறதே, எனக்கு? என் உள்ளம் பறிபோய் விட்டதா?' வீடு வந்து விட்டது. டாக்சியை அனுப்பிவிட்டு உள்ளே சென்றேன்.

'ரவி, ரவி'

'அண்ணு வீட்டில் இல்லையே. அக்கா' என்று ஓடிவந்தாள் லலிதா.

மாடிக்குச் சென்று அறையில் அமர்ந்தேன். வந்ததும், வராததுமாக ரவியிடம் விஷயத்தைச் சொல்லத் திட்டமிட்டு வந்தால், எங்கேயோ போய்விட்டானே? மேஜை மீதிருந்த காகிதங்கள் 'படபட' வென்று அடித்துக் கொண்டன. அவை கூட என்னைக் கேலி செய்கின்றனவா, என்ன? 'என்ன இருந்தாலும், 'புதுப் பித்தனைப்' போல நீ எழுத முடியுமா? என்று சிரிக்கிறீர்களா, காகிதங்களே! அதையும் தான்

நீங்கள் காணப் போகிறீர்களே ? இந்த மாத இதழ் 'தேன் கூடு' கதைப் போட்டியில் '**வெண்தாமரையாளு**'க்குத் தான் முதல் பரிசு கிடைக்கப் போகிறது. 'புதுப் பித்தன்' தோற்கத்தான் போகிறார். வெண்தாமரையாளின் எழுத்தைத் தாங்கிச் செல்லப் போகும், ஏகாகிதங்களே ! நீங்கள் பாக்கியசாலிகள்! பாராட்டுகள் பல பெறப் போகும் பாக்கியசாலிகள்! இவ்வாறு சிறகடித்தன, என் எண்ணங்கள். ஆம். 'வெண்தாமரையாள்' இந்த முறை வென்றே ஆகவேண்டும்.

'எல்லா சிறுகதைப் போட்டிகளிலும், புதுப்பித்தனே வெற்றி பெற்று விடுகிறார். நீயும் எழுதுகிறாயே சரசா!' என்று, அண்ணா ரவி கிண்டல் செய்ததின் விளைவாக என்னுள் எழுந்த அவமான உணர்ச்சி எவ்வளவு தூரம் இழுத்து விட்டு விட்டது !

'பார்.. இந்த மாதம் 'தேன்கூடு' நடத்தும் கதைப் போட்டியில், நான் முதல் பரிசு பெறாவிட்டால், பேனா எடுப்பதையே விட்டு விடுகிறேன்' என்று சபதம் செய்து விட்டேன்; அன்று அண்ணா கூட கேலி செய்தான்; 'பேனா எடுப்பதை விட்டு விட்டு, ஊதுகுழல் எடுத்து உலை வைக்கப்போகிறாயோ ?' என்று.

அவன் சொன்னது உண்மையாய் விடுமா ? சே! அப்படி நடக்கக் கூடாது.

என் வெற்றிக்கு 50 % வேலை முடிந்து விட்டது; ஆம். 'புதுப் பித்தன் எழுத்துக்கு உள்ள கிராக்கி எதனால் ?' என்று ஆராய்ந்து அவர் கைகளைக் கட்டியும் விட்டேன். மோசமான செயல் தான்? ஆனால், வேறு வழியில்லையே ? உணர்ச்சித் துடிப்பு மிக்க அவர் பாத்திரங்கள் அவரிடமிருந்து பிரிக்கப் பட்டுவிட்டன. துன்பம், சோகம், துயரம், இதை எழுதத்தானே அவருக்குத் தெரியும் ?

அழகிய ஓவியங்கள் தீட்டுபவனை, தூரிகையைத் தூக்கி எறியச் சொல்லிவிட்டு, உளியைப் பிடித்து சிற்பம் செதுக்கச் சொன்னால்..?

புதுப்பித்தனாவது.. காதல் கதை எழுதுவதாவது... வெண்தாமரையாளின் அநுபவமிக்க அகத்துறைச் சொல்லோவியங்களுடன், புதுப் பித்தனின் பேனாமுனை எப்படி சமாளிக்க முடியும்?

ஆனால் எனக்குக் கொடுத்த வாக்கை அவர் காற்றிலே பறக்க விட்டு விட்டால் ?

3. கொடியும், கொழுகொம்பும் கூடின !

கடினமான வேலை...அப்பப்பா, இந்த சிறுகதைப் போட்டி முடிவு செய்வதற்குள், பஞ்சாயத்தார்கள் திணறி விட்டோம்! ஆரம்பித்த பொழுது, வெகு எளிதாக, முத்துக்கள் இல்லாத சிப்பிகளைப் பொறுக்கித் தள்ளி விட்டோம். பிறகு உண்மையான இரண்டு முத்துக்களையும் கண்டதும், எடை போட்டு மதிப்புப் போடுவதற்குள் எவ்வளவு சங்கடங்கள்!

'புதுப் பித்தனின்', 'நடைபாதைக் காதல்',—அடாடா! என்ன தெளிவு...காதல் துறையிலும் தன்னால் நிலைபெற்ற சிரஞ்சீவிப் படைப்புகள் செய்ய முடியும் என நிரூபித்து விட்டாரே !

'வெண்தாமரையாளின்', 'மனமும், மாளிகையும்'தான் என்ன ? தன்னால் காதல்துறை தவிர, வாழ்க்கைத்துறைக் கதைகளும் எழுத முடியும் என்று சவால்

விட்டது போல எழுதிவிட்டார்களே !

இந்த இரண்டில் எது முதல், எது இரண்டாவது என்று நிர்ணயிப்பதுதான் மிக்க சங்கடமாகப் போய்விட்டது.

கதவு திறந்தது.

'யார்...புதுப் பித்தனு? வாருங்கள், வாருங்கள்' என்று வரவேற்றேன்...

'வருவது இருக்கட்டும்; முதலில் இந்த 'வெண்தாமரையாள்' யார்? என்று சொல்லுங்கள், அவர்கள் விலாசமும் எனக்குத்தேவை' என்று கோபத்தோடு கேட்டார் புதுப் பித்தன்.

'எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே! சாந்தம் தவழும் உங்கள் முகத்தில், இவ்வளவு கோபம் கூட வர முடியுமா ? முதல் பரிசு பெற்ற நேரத்தில் மகிழ்ச்சியாக இருப்பதை விட்டுவிட்டு...'

'ஆசிரியர் சார்! தயவு செய்து 'வெண்தாமரையாள்' விலாசத்தை தரப் போகிறீர்களா? இல்லையா? என்று அவர் கேட்டுக்கொண்டிருந்த பொழுதே, கதவைத் திறந்து கொண்டு, 'வெண்தாமரையாள்' என்ற புனைப் பெயர் பூண்ட குமாரி சரசாவும், அவர்கள் சகோதரர் ரவியும் உள்ளே நுழைந்தார்கள்.

சரசாவைக் கண்டதும், 'புதுப் பித்தன்' என்ற புனைப் பெயர் கொண்ட சந்திரன் துள்ளினுர்.

'ஓ...நீங்கள் எங்கு வந்தீர்கள் ஏ...ரவி...நீ கூட வந்திருக்கிறுய்... ஆமாம்...மிஸ்...விமல்.... உங்கள் யோசனைப்படிதான் 'நடைபாதைக் காதல்' எழுதினேன்...என் அந்த வெற்றிப் படைப்புக்குக் காரணம் நீங்கள்தான் மிஸ்.விமல்!'

ரவி சிரித்தான். 'ஏ...சந்தர்... இது என் தங்கை மிஸ். சரசா... மிஸ் விமலும் இல்லை...கமலுமில்லை!'

'என்ன...என் கண்கள் என்னை ஏமாற்றுகின்றனவா?' என்று திகைத்தபடி கூறினுர் சந்திரன். !

'அதுமாத்திர மில்லை......மிஸ்டர் சந்தர்...தாங்கள் தேடிய 'வெண் தாமரையாளும்' இவர்கள்தான்' என்றேன் நான்...

'என்ன சொல்கிறீர்கள், ஆசிரியர் ஸார் ! இவர்கள்தான் 'வெண் தாமரையாளா ?'

'மன்னிக்க வேண்டும். ஏதோ ஓர் வெறியில்,' என்று இழுத்தாள் சரசா.

'ஏய்... ...சந்தர் ...... நான்தான் சரசாவை உன்னைப் போட்டியில் வெல்ல வேண்டும் என்று தூண்டினேன்...ஆனுல் என்ன வெல்லாமோ செய்தும், நீ முதல் பரிசை தட்டி விட்டாய். அவள் என்னிடம் சவால் விட்டபடி, இனிப் பேனுவை எடுத்து இலக்கிய சேவை செய்வதை விட்டுவிட்டு, அடுப்பங்கரையில் ஊதுகுழல் எடுத்து...', என்று ரவி இழுத்தான்.

'போ...அண்ணு!' சரசா சிணுங்கினுள்.

'ஆமாம்...சந்தர். நீ எப்படி காதல் கதை அவ்வளவு அழகாக எழுதினுய் ?'

'ஓ...அதற்கு இரண்டு காரணங்கள்—என்னைக் காதல் கதை எழுத வாக்குப் பெற்று வந்தாள் 'வெண் தாமரையாள்', என்ருல் அதை எழுத முடியாதென்று எண்ணித் தான். ஆனுல்—வாக்குறுதி கேட்க வந்த வனிதையைக் கண்டதும், எனக்கு இல்லாத வல்லமையே வந்துவிட்டதே!'

எனது அறையில் நடந்த இந்த நாடகத்தின் ஓரிரு அம்சங்களே எனக்கு விளங்கினுலும், இரண்டு இலக்கிய இதய்ங்கள் என்று கூடிவிட்டதை, அந்த இதயங்களுக்குச் சொந்தமான நான்கு விழிகள் 'பளிச்' என எனக்குக் காட்டின.

எழுந்தேன். 'கன்கிராசுலேஷன்ஸ்—மிஸ்டர் சந்தர்—என்ன மிஸ்டர் ரவி—எப்பொழுது முகூர்த்தம் வைக்கப் போகிறீர்கள்? 'தேன் கூடு' காரியாலயத்தில் நடைபெற்ற

இந்த நிச்சயதார்த்தத்தை உறுதிப் படுத்துங்கள்' என்று சிரித்தேன்.

'ஸிஸ்டர்—இனி ... குழல் ஊதப் போகிறீர்கள். இடை இடையே பேனாவையும் சற்று கவனித்துக் கொள்ளுங்கள்.'

என் சொற்களுக்கு எழுதிக் குவிக்கும் அந்த ஏந்திழை பதில் ஒரு வார்த்தை கூறாது நில மடந்தையை நோக்கினாள்.

கொழு கொம்பும், இளங் கொடியும் போல, 'புதுப் பித்தனும்' 'வெண்தாமரையாளும்' மிஸ்டர். ரவி பின் தொடர, வெளி நடந்தார்கள் !

★

இதோ ஒரு அல்லி !

உலகத்தில் பெண்கள் மாத்திரம் ஆட்சி செய்யும் ஒரே ஒரு நாடுதான் இருக்கிறது. அது வங்காள விரிகுடாவிலுள்ள நௌங்கரி என்ற பவழத் தீவு ஆகும்.

நிக்கோபர் தீவுகளில் உட்பட்ட 19 சிறு தீவுகளில் ஒன்றாகும் இது. இந்தத் தீவின் சர்வாதிகாரி லட்சுமி என்ற அழகுமிக்க ராணியாகும் ஆட்சி செய்வது. இந்த நவீன கிளியோபேட்ரா அண்மையில் டெல்லி வந்தபோது பிரபுக்களும், சினிமா நடிகர்களும், உயர்தர ராணுவ அதிகாரிகளும், அவளிடம் சென்று திருமணம் செய்ய கோரிக்கை விடுத்தபோது அவள் அதை மறுத்துவிட்டாளாம்.

'தியாக நாடு'

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுக நாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

Telegrams :
'PIONEER' Coimbatore.

Telephones :
160, 361.

THE
COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

PEELAMEDU :: COIMBATORE.

FOUNDER PARTNERS:

Messrs. P. S. G. & SONS.

No. of Spindles 27,226

Manufacturing 60's, 80's and 100's Combed Yarn

Staff Employed : 41.

Labourers Employed : 934.

—:o:—

'B' Mills, Perianaickenpalayam

No. of Ring Spindles ... 22,000

Manufacturing 20's to 40's Yarn.

Staff Employed : 6.

Labourers Employed : 320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN:

L.T.M., L.M.E., L.E.E.,

காமனை வென்றவன்

அத்தியாயம் 12.

படித்த அவள் உள்ளத்துள்ளே வீராதி வீரன் ஒருவனைக் கண்டதில் மகிழ்ச்சி. அவன் செய்துள்ள, புலி-மனிதப் போராட்டத்தைப் பார்த்ததில் மகிழ்ச்சி. அவன் குணமடைந்து தான் மாலையிடக் கொடுத்து வைக்கும் பாக்கியத்தைப் பெற வேண்டும் என்று எண்ணுவதிலே மகிழ்ச்சி. அவள் உள்ளம் அவ்வாறு வான வெளியில் அலையும்மேகத்தைப் போல அலைந்து கொண்டிருந்தாலும் அடிக்கடி நோயாளிக்கு என்ன தேவை என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தது. முத்தையனோ ஏதும் கேளாமல் சும்மா விழிப்பான். அல்லது சுகமாகத் தூங்குவான்.

சுகி

அவள், "உங்கள் பெயர்?"

"சுந்தரம்."

எவ்வளவுதரம் மாற்றிக் கேட்டும், "நீங்கள் முத்தையனா?" என்று கேட்டும் பதில் என்னமோ 'சுந்தரம், சுந்தரம்' என்றே வந்தது.

லட்சுமிக் குட்டிக்கும் சரி, அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் முத்தையனுக்குமே 'சுந்தரம்' என்ற பதில் ஏன் வந்ததெனத் தெரியாது.

நேயர்களுக்கு அதை விளக்கி விட்டால்தான் மேலே நடக்கும் சிக்கலுக்கு முடிச்சுக்கள் விழும்போது நன்கு புரியும், முத்தையன் தன் பெயர் சுந்தரம் என்றதும் உண்மை; அவன் 'பொங்குமாங் கடலுக்குப் போகவேண்டும்' என்று சொன்னதும் உண்மையான சம்பவங்கள். முத்தையன் ஆதிப்பெயர் சுந்தரம். அவனுக்கு வயசு 12 ஆக இருந்த சமயம், அவனும் இன்னும் சில விடலைப் பயல்களுமாகக் கொட்டும் குற்றால அருவியின்மேலே 'திண் திண்' என்றுவிழுகிற பொங்குமாங்கடலில் குதித்து

விளையாடுவது வழக்கம். அன்றைக்கு அடைமழையின் மிகுதியால் அருவியின் ஆர்ப்பாட்டம் மிகவும் கும்மாளமாக இருந்தது. அன்றுடம் குளித்து விளையாடிய காரணத்தால் சுந்தரம் அவன் தோழர்களுடன் போனான். மற்றவர்கள் பொங்கி நுங்கும் நுரையுமாக வழியும் அருவியின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பயந்து போனார்கள். பயம் என்பதே சுந்தரத்தின் அகராதியில் கிடையாது. அதனால் அவன் பந்தயம் வைத்தான். ஐந்து ரூபாய்! பொங்குமாங் கடலின் கிழக்குப் பக்கமான பாறையான கரையிலிருந்து உள்ளே 'ஓ' வென விழுகின்றதே அருவி அதற்குள் நீந்திப் போய்-தலையைக் கொடுத்து விடவேண்டும்.'

சாவின் வாய்க்குள் தலையைக் கொடுப்பதும், அந்த சமயம் அருவிக்குள்ளே நிலை நீச்சலில் குளிப்பதும் ஒன்றே. தண்ணீரின் சுழிப்பும் வேகமும் அதிகம். சுழலோ சொல்லுக்குள் அடங்காத சுழிப்பு வேகம். கரையிலே நின்று பார்த்தாலே தலை சுற்றும்; சுந்தரம் துணிந்து கரையிலிருந்து பாய்ந்தான். அவ்வாறு பாய்ந்த போது அவன் எதிர்பாராத சுழல் சுற்றி அவனைப் பாறையில் கொண்டு மோதிற்று. பாறையில் மோதவே அவன் மூச்சுமுட்டி வெளியேவரமுயன்றுன்; முயன்றும் பயனில்லை. தண்ணீர் மேலே கொண்டு வந்தது. உள்ளே இழுத்து அமுக்கி விட்டது. அவன் திணறியதை அவன் சேக்காளிகள் வேடிக்கையாக எண்ணினார்கள். ஐந்து ரூபாய் பந்தயம் பெறப்போகும் தெம்பிலே காட்டும் விளையாட்டாக நினைத்தார்கள். ஆனால் கரையிலே குளிக்க வந்திருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முத்தையப் பிள்ளைவாள் [இவர்தான் பிரபலமான திருடன் என்று சொல்லப்படும் ஜம்புலிங்கத்தைப் பிடித்தவர்.] அங்கே நின்றவர், சுந்தரம் தவிக்கும் நிலைமையை ஊகித்து விட்டார். மறுகணம் உள்ளே பாய்ந்து திணறிக் கொண்டிருந்த சுந்தரத்தை வெளியே இழுத்துக் கொண்டுவந்தார்.

மண்டையில் பட்ட ஊமையடியால் காயமில்லை. மூளையில் மட்டும் சற்று அதிர்ச்சி. இது

"நீ எங்கிட்டே படிக்கிறப்போ, பரீட்சையிலே காப்பி அடிச்சுண்டு இருப்பே! இப்போ என்ன பண்றே?"

"காப்பிக் கொட்டை 'பிஸினஸ்' பன்றேன்!"

போதாதா ? சுந்தரம் பேச்சு மூச்சு அற்றுப்போனான். உடனடியாகப் பொங்குமாங் கடலிலிருந்து அவனைக் கீழே காஸ்மீஸ்வரம் எடுத்து வருவதே பெரும் பாடாகப் போய்விட்டது. அச்சமயம் ஜமீன்தார் பாண்டித்துரையின் தந்தையார் உயிரோடு இருந்த காலம். பையன் மீது அவருக்குப் பாசம் என்பதை ஊரார் அறிவார்கள். அதனால் பரபரப்பு அதிகமாகவே, பாண்டித்துரையின் தந்தை வந்தார். அவர்கொடுத்துள்ள வாக்கு நினைப்பில் அவருக்கு வந்தது. சுந்தரத்தின் தந்தைக்கு " உன் பிள்ளையைக் காப்பாற்றும் முழுப்பொறுப்பு எனக்கு உண்டு " என்று சொல்லியிருந்தார். பாண்டித்துரையின் நண்பன் என்ற முறையிலும் பெரிய ஜமீன்தார் ஓடோடி வந்தார். காப்பாற்றிய முத்தையப் பிள்ளையின் கரத்துக்கு கை கொடுத்தார். மறுகணம் முத்தையனைத் தூக்கும் ஆட்களுக்குள் அவரும் ஒருவராகத் தலை கொடுத்தார்.

" ஐயா, முத்தையா பிள்ளைவாள். நீங்கள் ஐம்புலிங்கத்தைப் பிடித்தது ஊருக்கு நன்மை. இவனைக் காப்பாற்றியது என் குடும்பத்துக்கு நன்மை. இன்று முதல் இவன் பெயர் முத்தையன். இவனுக்கு மறுபிறவியைக் கொடுத்தீர்கள்" என்றார்.

சுந்தரம் என்ற பெயர் அந்த விநாடி முதலே முத்தையன் ஆகிவிட்டது. ஆனால், இன்று புலியின் அடிக்கு ஆளான அவன் மூளையிலே தான் முத்தையன் என்ற எண்ணம் மறைந்தது. 12 வயதாக இருந்தபோது பொங்குமாங் கடலுக்குள் அடிபட்டு மூளை நரம்புகள் அதிர்ச்சியடைந்ததே அந்த நிலை எவ்வாறு இருந்ததோ, அதே பக்குவ நிலைக்கு மாறிவிட்டது. அவன் அறிவுகூட 12 வயதுள்ள சிறுவனுக்கு இருப்பதை லட்சுமிக்குட்டி உணர்ந்தாள். ஆனால் அவளுக்குக் காரணம் தெரியாது. அவன் புத்தி மாருட்டத்தால் பிதற்றுகிறான் என்று எண்ணினாளே தவிர, முன்பு ஒருதடவை அவன் மூளை அடிபட்டதை எங்கே கண்டாள் லட்சுமிக்குட்டி ?

முத்தையன் தன்னைச் சுந்தரமாகவும், தான் பொங்குமாங் கடலுக்குப் போய் பந்தயம் வைக்கவேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

" அப்பா, இவர் பொங்குமாங் கடலுக்குப் போகவேண்டும் என்பதனால் இவர் எதுவோ கடற்கரையைச் சேர்ந்தவராக இருப்பார். "

உள்ளேயிருந்து உணவை முடித்துக் கொண்டு முறுக்கான் (வெற்றிலை) போட வந்த நாராயணன் சிரித்தார். அவருக்கு குற்றாலத்து அருவியிலே மேலாக விழும் அருவிக்கும், அது விழுந்து பொங்கி வரும் இடத்துக்கும் பொங்குமாங்கடல் என்று தெரியும். அதனால் புலியோடு போராடிச் சித்தம் கலங்கிய ஆசாமிக்குக் குற்றாலத்துப் பக்கம் என்று முடிவு கட்ட முடிந்தது. மேலும்

அதைச் செயல்படுத்த அவருக் குத் தெம்பு இல்லை. அடிபட்ட சுந்தரத்திடம் தன் பெண் காட் டும் பரிவைக் கெடுக்க அவர் மனம் விரும்பாது அதனால் ஏதே னும் பலன் கிடைத்தால் போதும் என்ற எண்ணமும் இருந்தது. அதனால், குற்றாலத் துப் பக்கம் தகவல் தெரிவிப் பதைவிட தெரிவிக்காமல் இருந்து விடுவது மேன்மை என்று எண்ணினார், நாராய ணன்.

"லட்சுமி, நீ முன்பு ஒரு தடவை ஒரு பையனிடம் பாசம் வைத்து வெறுப்பை யடைந் தாய். இப்போதும் நீ காட்டு கிறது நோயாளியிடம் காட்டும் அன்பாகப் படவில்லை. நீ சற்று மனசைக் கலங்கவிடாமல் இருந் தால் போதும். நாளைக்கு அந்தப் பையன் உற்றார் உறவினர் வந்து அவனைக் கூட்டிக் கொண்டு போனால் நீ என்ன செய்வாய்?"

"மகிழ்ச்சியுடன் அனுப்பி வைப்பேன்."

ஐயோ அசட்டு லட்சுமி! நீ தானா இப்படிச் சொல்வது? ஆனால் காலப்போக்கு எவ்வித மான முடிவை உன் வாழ்க்கை யில் வைத்துக் கொண்டு விளை யாடுகிறதோ என்று பரிகாச மாகச் சொல்லி மறைவது போல பிறை நிலவு மறைந்து கொண்டிருந்தது. எங்கும் அமைதி.

பாசத்தை ஆரம்பத்திலே ஈரம் உலருமுன்னதாகப் பிரித்துவிடலாம் போலத்தோற் றும். நேரம் செல்லச் செல்ல காய்ந்து விட்டால் பசையைப் பிரித்து எடுப்பது என்றால் ஏதேனும் ஒரு பொருளுக்கு அழிவு வந்துதான் ஆகவேண் டும். காதலும் காயாத கோந் தின் தன்மையைப் போல் காலப்போக்கிலே பிரிக்க முடி யாத தொல்லையைத் தரும் என் பதை அவள் அறிந்து கொள்ள வில்லை. அவளைப் பெற்ற தந் தையும் தாயும் அறிந்து கொண் டனர். அவள் செய்து வந்த சைத்தியோபசாரங்கள் அவர் களை அவ்வாறு எண்ண வைத் தன.

கண்ணுங்கருத்துமாக அவ னுக்கு அன்னாகாரம் முதல், புலி நகத்தின் வடுக்களுக்கு பச் சிலை மருந்து போடுவதுவரை அவள் கவனித்து வந்தாள். பத்தாவது நாள் கோபாலவாரி யார் அங்கே வந்து நின்றவர் "ஆ இவன்தானா முத்தை யன்?" என்று அவன் கையி லிருந்த பச்சை குத்திய அடை யாளம் பார்த்து அலறிப் போனார்.

"உங்களுக்கு இந்தப் பிள்ளை யைத் தெரியுமா?" என்று தம்பதிகள் இருவரும் கேட்ட னர்.

"ஐயோ, வாரியாருக்கு ஏன் இந்த வாலிபனைத் தெரிந் தது?" என்று ஏக்கங் கொண்டு விம்மி அழத்தொடங் கிற்று லட்சுமிக் குட்டியின் உள் ளம். வாரியார் இனங்கண்ட துமே அவள் இதயம் ஏக்கப் படத் தொடங்கிற்று.

அத்தியாயம்—13.

பைத்தியமானலும் வைத்தியம் வேண்டாம்!

ஏதோ ஒரு தினம் கோபால வாரியார் என்னிடம் தென்காசி முதல் மதுரை வரை குற்ருலம் முத்தையன் கதையைக் கேட்டார். தன் வாழ்நாளில் முத்தையனை தாமே சந்திக்க முடியுமென்று எண்ணிருரா? எண்ணியிருந்தால், நாராயணன் வீட்டிற்குள் வந்ததும், "ஆ முத்தையனு?" என்று அலறியிருக்க மாட்டார். அவர் மதுரையில் தமது பையனுக்கு வேண்டிய சிபார்சு கடிதங்கள் வாங்க முயன்ற போது, பல விபரங்களோடு தோப்புத் துறை நாராயணன் வீட்டில் யாரையோ புலி கடித்து விட்டதாகவும் எழுதியிருந்தாள், அவர் மனைவி. அதைப் படித்த போதே, அவருக்குச் சிறிது சந்தேகம். ஆனாலும் உடனடியாக அவர் வர முடியாது போகவே, பத்துத் தினங்கள் சென்ற பிறகு அவர் ஊருக்குத் திரும்பினர். திரும்பியதும் முதற் காரியமாக, நாராயணன் மலைத் தோட்டத்துக்கு வந்தார்.

அவர் பாதி எதிர்பார்த்தது, பாதி எதிர்பாராத சம்பவமாக குற்ருலம் முத்தையனைக் கண்டதும் அலறிவிட்டார். வாரியார் அலறியதுமே, முக்கியமாக லட்சுமிக் குட்டிக்கு ஜுரம் வந்துவிட்டது. அடிபட்ட நோயாளிக்கு வாரியார், ஏற்கனவே அறிமுகமானவர் என்ற எண்ணம் பிறந்தது. கடந்த பத்து நாட்களாக அவள் கண்ட கனவுகள் பல. முத்தையன் அகன்ற மார்பின் புலி நகத்துக் கோடுகளைப் பார்க்கும்போதெல்லாம் அதைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும், வாழ்ந்தால் இது போன்ற வீர புருஷனுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டாள். லட்சுமிக் குட்டியின் எண்ணம் எதுவென தாயும் தந்தையும் அறிவார்கள். அவர்கள் அவள் எண்ணம் பலிதமானற்கூட நலம் என்று எண்ணியவர்கள். அதற்காகவே வாரியார் வரவை எதிர்பார்த்தார்கள். இன்று ஏமாந்தார்கள். அமிர்தத்தை எதிர்பார்க்க அது விஷமாக முடியுமென்று எண்ணவில்லையே!

"ஏன் வைத்தியரே! இந்த ஆளை நீங்கள் அறிவீர்களோ?"

"ஓரளவு அறிவேன். இவரை நேருக்கு நேர் தெரியாது. இவருடைய நண்பர் ஒருவர் எனக்குச் சொல்லியிருந்தார்."

"இவர் பாண்டி ஆளா?"

"குற்ருலத்து ஆள் இவர். புலியைக் கொல்ல வந்தார். புலியை வெகு நாள் காட்டிலே வேட்டையாடியிருக்கிருர். முடிவிலே புலியும் இவரும் கட்டிப் புரண்டு புலியின் அடி தாங்காமல் மூளை பிசகி விட்டது. இவருக்கு என்ன செய்கிறது?"

இத்தனை காரியங்களையும் முத்தையன் கேட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பற்றி அவனுக்காகப் பேசப்படுகிறது என்று அறிந்தானு? இல்லையே? அவர்கள் பேசும் பொருள்கள்

எதுவும் அவன் மூளையில் பதிய வில்லை.

"போகலாமா? லட்சுமி!" என்று கேட்டான்.

லட்சுமிக் குட்டியும் "உம்" என்றாள்.

இருவரும் அந்த இடத்தை விட்டு மெதுவாக நடந்தார்கள். வாரியாருக்கே பொறாமையாக இருந்தது. மதனும் ரதியும் போல அவர்கள் நடந்துபோய்க் கொண்டிருந்தார்கள்.

"எங்கே போகிறார்கள்?"

"ஓடைக் கரைக்குப் போகிறார்கள். அங்கே போய் பேசிக் கொண்டிருப்பார்கள். இரவு உணவு உட்கொள்ளத்தான் வருவார்கள். லட்சுமி பேசப் பேச 'அது' கேட்டுக் கொண்டிருக்கும் பாவம்" என்று தாய் நிறுத்தினாள்.

"அந்தப் பையனால் எவ்வித மான தொல்லையும் இல்லையா?"

"ஒரு தொல்லையும் இல்லை. லட்சுமி சொல்லுகிறபடி கேட்கிறான். ஆனால் அடிக்கடி 'பொங்குமாங் கடலுக்குப் போக வேண்டும். பந்தயம் என்ன?' என்று கேட்கிறான். இதைத் தவிர வேளா வேளைக்குச் சொன்னபடி சாப்பிடுகிறான்" என்றார் நாராயணன்.

பிறகு வாரியாரைக் கெஞ்சி அந்தப் பையனுக்குக் குணம் செய்தால் வேண்டிய பணத்தைத் தருவதாகச் சொன்னார்கள்.

"அம்மா நீங்கள் பாசம் காட்டுவதை நிறுத்துங்கள். ஏற்கனவே பையனுக்கு" என்று செண்பகத்தின் பெயரை சொல்ல வந்தவர் அதை முதலாவதாக மறைத்தார். அடுத்து, "பையனுக்கு ஏற்கனவே பித்து இருப்பதால் இவனை உங்கள் பெண் நம்ப வேண்டாம்' என்று முடிவு சொன்னார். வாரியார் நாராயணன் 'குடும்பத்துக்கு நீண்ட நாள் பழக்கம் உள்ளவர். அவர் சொல் அவர்களுக்கு வேதம். ஆனால் மகள் லட்சுமிக் குட்டியின் அன்பின் காரணத்தை அவருக்கு எடுத்துச்சொன்னார்கள்.

'வைத்தியரே! என்ன வந்தாலும் சரி. நீங்கள் சுந்தரத்துக்கு வந்துள்ள பைத்தியத்தைக் குணப்படுத்தி ஆக வேண்டும். அதற்கு உரிய செலவை நாங்கள் தருகிறோம். எங்கள் மகள் வாழ்வதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை."

"பார்க்கிறேன். முத்தையன் பெயர் ஏன் மாறியது?"

முத்தையன் அந்தப் பகுதிக்கு வந்தது முதல், அவன் சொல்லிய சொற்கள் வரை வாரியார் கவனமாகக் கேட்டு அறிந்து கொண்டார். வைத்தியர் ஆனதால் அவர் மூளையில் சலனம் ஏற்பட்டது. ஏற்கனவே முத்தையனுக்கு இதற்கு முன்னால் ஒரு முறை அடி பட்டிருக்க வேண்டும். தான், தன் வயசு, தன் அனுபவங்கள் அனைத்தும் அவனுக்கு மறந்து விட்டன. முன்னாளில் நடைபெற்ற ஏதோ ஒரு சம்பவம் நினைப்பில் இருக்க வேண்டும். ஆகவே, நோயைத் தீர்த்தாலும் அவன் நிலைமையை பழையபடி கொண்டு வருவதற்கு, செண்பகத்தின் தயவில்லாமல் முடியாது என்பதை அறிந்தார்.

அவர் யோசனை செய்தபடியே இருந்தார். அவர் முன்னால் வைக்கப்பட்ட காப்பி ஆறிக் கொண்டிருந்தது.

"நான் பையனை அழைத்துக் கொண்டு போகிறேன். இங்கே வைத்தியம் செய்வதைவிட என் வீட்டில் வைத்தியம் செய்வது எளிதாக இருக்கும்."

"எப்படியோ செய்யுங்கள். எங்களுக்குப் பையனைக் குண மாக்கி இங்கே அனுப்பினால் சரி."

வாரியார் தலையை ஆட்டி விட்டு குடிசைக்கு வெளியே வந்தார். அவர் மனம் குழம்பி யிருந்ததுபோல. வெளியே வானத்திலும் குழப்பமாக இருந் தது. அந்தக் குழப்பங்கள் பார் வைக்கு ஆனந்தமாக இருந்தன. வர்ணக் கலவை அனைத்தும் ஈர மணலின் மேல் கொட்டிச் சென்றது போன்ற மேல்வானம் அழகு மயமான வான வெளி யைப் பார்த்தபடியே நடந்தார். புலி வந்திருக்கலாம் என்ற பகு தியைத் தாண்டிப் போனார். அவர் தலைக்குள்ளே மூன்று நான்கு புலிகள் உறுமி விளையா டிக்கொண்டிருந்தன. அவருக் குப் பெரியபிரச்னை. முத்தை யன் குணமாக வேண்டு மென்றால், அவனுக்குத் தற் பொழுதுள்ள எண்ணங்கள் மறைய வேண்டும். அவனைப் புலி வேட்டைக்கு அனுப்பிய காட்சிகள் ஒவ்வொன்றையும், செண்பகம் அடிக்கடி நினைவூட்ட வேண்டும். பாண்டித்துரை அவனோடு இருந்த காலங்களை அருகாக அமர்ந்து அலை அலை யாகச் சொல்ல வேண்டும். அவன் தாய் அவனோடு போராடிய காலங்களைச் சொல்லி கொஞ்சம் கொஞ்ச மாக அவன் நினைவுச் சரட்டிலே பல சம்பவ மணிகளை எடுத்துக் கோத்துக் கோத்து, அவை எங் காவது பிடித்துக் கொண்டால், அதன் வழியாக அவர் மருந்தும் ஓரளவு பயன் தரலாம். இல் லாது போனால் அவன் எண் ணம் இன்றுள்ளது போல நிற் கும்; தான் சுந்தரம் என்பதைத் தான் எண்ணுவான்; தனக்கும் செண்பகத்துக்கும் உள்ள அன் பாம் காதலை எண்ணமாட்டான்.

வாரியார் யோசனைக்குமைப் பில் வெந்து கொண்டிருந்தார்.

தென்னஞ் சோலையை அடுத்து நின்ற மாமரத்துக் கூட்டத்துள்ளே மாங்குயில் ஒன்று இனிமையாகக் கூவிக் கொண்டிருந்தது. அதன் சொல் லுக்குப் பதில் அனுப்புவது போல மற்றொரு குயில் எதிர்ப் பக்கத்துத் தோப்பு வழியாக ஒலித்தது. குயிலுக்குக் குயில் அஞ்சல் செய்து கொண்டன.

அவர் திரும்பினார் ;

லட்சுமிக் குட்டியும், முத் தையனும் !

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் வைத்த கண் வைத்த படியே பார்த்து பரவசத்தால் ஏதோ பேசிக் கொண்டிருந்தார் கள். ஒருவர் கண்களை ஒருவர் விழுங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் கண்கள் பேசிக் கொண்டிருந்தன. பெண் மனத் துப் பார்வைக்கு ஆண் மனம் பித்துக் கொள்ளும் பாரம்பர்ய ரத்தம்தானே, முத்தையன் உடம்பிலும் ஓடிக் கொண்டிருக் கிறது. அவள் பார்த்த பார் வைக்குக் கண் கொட்டாது

இவனும் பார்த்துக் கொண்டிருந்தான். வாரியார் வருகின்ற காலடி ஓசை கேட்டு அவள் எழுந்தாள். அவள் நிழலைப் போல இவனும் எழுந்தான். அவள் திரும்பினுள்; இவனும் திரும்பினுன். வாரியார் தீர்மானம் செய்து விட்டார்.

லட்சுமிக் குட்டியின் முகம் சுழித்தது. மறுகணம் முத்தையன்

முகஞ் சுழித்தான். அதைத்தான் அவள் எதிர்பார்த்தாள்.

வார்யார் சற்று முன் முத்தையனைத் தொட்டுப் பார்த்தது போல இனிமேல் பார்க்க முடியுமா? என்று எண்ணும் நிலையை அடைந்தார்.

"இது உனக்கு நல்லதில்லை. சொல்

லட்சுமிக் குட்டி தன் வசம் ஆக்குவதற்காக இவ்வாறு முயற்சி செய்கிருள்.

வாரியார் வரவைக் கண்டு

வதைக் கேள். உன் மனம் எப்படி என்பதை அறிவேன்."

லட்சுமியின் தந்தம் போன்ற கரங்கள் எழுந்து குவிந்தன.



அவள் தலை தாழ்த்தி "வாரியார் ஐயா, தங்களுக்கு என் காணிக்கை எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன். இவரை நீங்கள் என்னை விட்டுக் கொண்டு போக வேண்டாம். இவருக்கு நீங்கள் வைத்தியம் செய்வதால் செலவு என்ன ஆகும் என்பதும் அறிந்து கொண்டோம். ஆகவே இவர் இப்படியே இந்நிலையிலேயே இங்கே இருந்தால் போதும். உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் அப்பாவிடம் வாங்கிப் போங்கள்" என்று கெஞ்சாத வண்ணம் கெஞ்சினாள். அவள் குரல் கெஞ்சிற்று; கண்கள் அழுது கெஞ்சின; அவள் நெஞ்சமே துவண்டதை அவர் உணர்ந்தார்.

"உன்னிடம் தனிமையாக நான் பேசவேண்டும். இன்றிரவு சாப்பாட்டுக்கு பின்னால் பேசிக் கொள்ளுகிறேன். அதிகாலையில் நான் இவரை அழைத்துப் போவேன்" என்று பதிலுக்குக் காத்திராமல் தோப்புக்குள்ளே மலையின் அருகாகப் போய்க் கொண்டிருந்தார். மலைப் பகுதிக்கு வந்த மட்டும் அவருக்கு பல மூலிகைகள் தேவைப் பட்டன. மூலிகைகளைத் தேடுவதில் அவர் கண்கள் ஈடுபட்டன. மாலைப் பொழுதாகையால், போதுமான பச்சிலைகள் காண்பதற்கு நேரம்

போதாது. அவர் அவசரமாக மலையின் மீது போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தாள் லட்சுமிக் குட்டி. அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சுந்தரம்.

"குளிக்கும் நேரம் வந்து விட்டது. குளிக்கலாம்" என்றாள். சுந்தரம் எழுந்து ஓடைக்குள் போனான். 'குளு குளு'வென இருந்த ஓடையின் தண்ணீர் அவனுக்கு இதமாக இருந்தது. அவன் 'தம்' பிடித்து தண்ணீருக்குள் ஐந்து நிமிஷம் பத்து நிமிஷம் இருப்பதைக் கண்டு அவளுக்கு அன்றாடம் வருகின்ற சந்தேகம் வரும். உள்ளே அமுங்கி இறந்துவிடக் கூடாதே. அதனால் அதிக நேரம் உள்ளே அமிழ்ந்து விட்டால் கரையில் துண்டும் கையுமாக நிற்பவள், ஓடிப் போய் தலையை வலுக் கட்டாயமாகத் தூக்குவாள்; அப்பொழுதும் 'தம்' பிடித்த பிடியை விடாமல் உள்ளேயே தலையை இழுப்பான். இந்தப் பொழுது போக்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை நடைபெறும்.

"போதும் எழுந்து விடலாம்."

அவள் தலையை தூக்கித் தண்ணீருக்கு வெளியே இழுத்ததும் எழுந்து விடுவான். மறு முழுக்கு கூடப் போட மாட்டான்.

அவள் ஈரத்தைத் துவட்ட ஆரம்பித்ததும் அவன் வாங்கி உடம்பைத் துடைப்பான். அதுவரை அவனாகத் துண்டை எடுத்துத் துடைக்கமாட்டான். அதற்குரிய அறிவு மூளையில் செயல்பட வில்லை. அவள் உடலை நன்கு துடைத்து விட்டதும் அவர்கள் நடக்க ஆரம்பிப்பார்கள். குடிசை நோக்கி வந்ததும் சூடாக ஏதாவது ஆகாரம் இருக்கும். அன்று, வாரியார் தங்குவதால் விசேடமான காய்கறிகள் பட்சணங்கள் இருந்தன. தாளித வாசனை மூக்கைத் துளைத்தது. முத்தையனுக்குப் பசி, என்றாலும் லட்சுமிக் குட்டி சாப்பிடலாம் என்று சொன்னால் தான் சாப்பிட வேண்டும். அதற்காக அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வாரியார் ஒரு கட்டுத் தலையுடன் வந்து சேர்ந்தார். பந்தி பரிமாறப்பட்டது. முத்தையன் சிறிதும் பதற்றமில்லாமல் லட்சுமி சொல்லுகிறபடியே உண்ண ஆரம்பித்தான். சுற்றி இருக்கும், வாரியார் அவள் பெற்றோர் எவரையும் அவன் கண்கள் கண்டு கொண்டால் தானே? ருசியாக உண்டதும் வெளியே திண்ணைக்கு வந்தான். அலுப்பினால் படுத்தவன் தூங்கி விட்டான். வீட்டுக்குப் பின் பக்கமுள்ள ஒரு பகுதியில் அக்குடும்பத்தார் வாரியாருடன் பேச ஆரம்பித்தனர். வாரியார் தமது திட்டங்களைச் சொல்லி வந்தார்.

"வாரியார் ஐயா! நீங்கள் அவரை என்னிடமிருந்து பிரித்துக் கொண்டு போய் குற்றாலத்தில் சேர்க்கக் கூடாது. அவர் என்னிடம் இருக்க வேண்டும்."

"நான் அதையே செய்துவிட முயற்சிக்கிறேன். நான் ஒரு வாக்குக் கொடுத்தேன். இல்லாவிட்டால் இவ்வளவு பிடிவாதம் பிடிக்க மாட்டேன். மேலும் முத்தையன் செண்பகம் என்ற

பெண்ணின் காதலுக்கு உள்ளானவன். அவள் சொல்லுக்குப் பயந்தும் படிந்தும் காட்டுக்குள் வேட்டையாட வந்தவன். அதனால் அந்தப் பெண்ணின் காதல் என்னாகும்? எனக்கு நீங்கள் எல்லாரும் ஒன்றுதான். என்னுடைய பொறுப்பு வியாதியுள்ளவனைக் குணப்படுத்த வேண்டும். இதற்குச் செண்பகத்தின் துணை தேவை.''

"அவள் வராமலே நீங்கள் வியாதியைக் குணப்படுத்த முடியாதா?''

"முடியும். முயன்று பார்க்கிறேன். வெற்றி கிடைத்தாலும் கிடைக்கலாம். கிடைக்காமல் போனாலும் போகலாம்.''

"நான் கொள்ளுகிற பாசங்கள் எல்லாம் எமனாகி முடிகின்றன'' என்று லட்சுமிக்குட்டி கோபமாக எழுந்து போய்விட்டாள். வாரியாருக்கு கஷ்டமாக இருந்தது. லட்சுமிக் குட்டியின் மனம் பளிங்காகத் தெரிந்து விட்டது. தமது அன்பினால், "லட்சுமிக்குட்டிக்கு நான் எவ்விதமான மாற்றமும் செய்துவிடமாட்டேன். முத்தையன் வாழ்வில் எனக்கு எவ்வித பற்றும் கிடையாது. உனக்காககூட வாதாடுவேன். நீ இல்லாது போனால் அவன் இறந்திருப்பான் என்றும் சொல்லுகிறேன். யார் முத்தையனைக் காப்பாற்றியதோ அவர்களுக்கே அவன் உயிர் உரியது என்று சொல்லுகிறேன். சரிதானே?''

போனவள் திரும்ப வந்தாள். முகம் மலர்ச்சியடைந்திருந்தது.

"உங்களால் ஆன முயற்சி எடுங்கள். குணப்படுத்துங்கள். நோய் நீங்கி குணமான அப்பால் நான் கவனித்துக் கொள்ளுவேன், ஒரு வேளை குணமாகாமல் இருந்து விட்டால் ஆயுள் முழுக்க நான் காப்பாற்றிக் கவனிக்கப் பாடுபடுவேன்'' என்று உறுதி கூறினாள்.

"விடிய நாலு நாழிகைப் பொழுதிற்குள் நான் அழைத்துப் போகிறேன். என்னுடன் நாராயணன்! நீயும் வர வேண்டும். நோயாளியின் மனம் எவ்வாறு இருக்கிறது? என்ன மருந்துகள் தேவையென்பதை அறிய வேண்டும்.''

செண்பகத்திற்கோ, அவளுடைய உறவினருக்கோ எவ்விதமான தகவலும் கொடுக்க



"ஏன் இரவு பன்னிரண்டு மணிக்கு நகைக் கடையில் திருடினாய்?''

"அந்த நெருக்கடியான இடத்திலே பகலில் அதைச் செய்ய முடியாது என்பதனால் தாங்க!''

வேண்டாம்" என்று மீண்டும் கெஞ்சினாள் லட்சுமிக் குட்டி.

"என்னை நீ இவ்வளவு கரூர் கண்டிப்புச் செய்தால் இதோ போகிறேன். எனக்கு உன் வாழ்வும் கெடக்கூடாது; முத்தையன் வாழ்வும் கெட்டுவிடக் கூடாது என்பதே நோக்கம்" என்று கோபமாக எழுந்தார். காலை வந்து பற்றிக் கொண்டு லட்சுமி மன்னிப்புக் கேட்டாள்.

இரவு போய்க் காலைப் பொழுது, கோழி கூவியதும் முத்தையனை, நாராயணன் பின் தொடர கோபால வாரியார் அழைத்துக் கொண்டு மலைப் பாங்கான பாதை வழியாக போய்க் கொண்டிருந்தார். உயிரைப் பிரிவது போல உணர்ந்தாள் லட்சுமி. எரிகின்ற திப்பந்தத்தின் பிடியை உயரப் பிடித்தபடியே நாராயணன் முன்னே வழிகாட்டியபடியே போய்க்கொண்டிருந்தார். மலையிலே வழி காண திப்பந்தம் தவிர வேறு உபகரணம் கிடையாது. தியின் ஒளி மறையும் வரை கண் கொட்டாது பார்த்தவள், குடிசைக்குள்ளே வந்து 'கோ'வெனக் கதறினாள். கொடி போலத் துவண்ட மகள் அருகாக வந்து அன்பாக அவள் தலையைத் தடவி ஆறுதல் சொல்ல ஆரம்பித்தாள், தாய்.

"அம்மா, அந்தச் செண்பகம் அவரைப் பறித்துக் கொண்டு போகவிடமாட்டேன். நான் பொல்லாதவள் என்பதைக் காட்டுவேன்" என்று வர்மம் கூறிக் கொண்டாள்; லட்சுமியின் வாக்குப் பலிக்குமா?

(தொடரும்)

MACHADO BROTHERS

GENERAL MERCHANTS, SHIPPING AGENTS & CLEARING AGENTS.

"CAPTAIN MACHADO BUILDING",
Beach Road, Tuticorin.

Telegrams : "MACHADO"   Phone : 1 and 333.

Agents in Tuticorin Port of following Shipping Lines:

EASTERN STAR LINES LTD, COLOMBO :
Tri-weekly service to Colombo.

MEARSK LINE, COPENHAGEN :
Bi-monthly service to : U.S., Atlantic & Canadian Ports.

EVEREST STEAMSHIP CORPORATION S/A :
Monthly service to : Far East, Japan & Pacific Ports.

ELLERMAN BUCKNALL & ASSOCIATED LINES :
Regular Service to : U.S., East-African & South American Ports.

INDIA STEAMSHIP COMPANY LTD :
U.K. and Continental Ports.

சினிமா விமர்சனம்:

கலைப்பகுதி

எம். ஏ. வி. பிக்சர்ஸ்

சம்பூர்ண இராமாயணம்

‘இராமன் தெய்வீகப் பிறவி; ஆண்டவனின் அவதாரம்; போற்றப் படவேண்டிய புண்ணியன்’ —இது அடியார்கள் கட்சி.

‘இராமன், விஷமத்தனமான ஓர் கற்பனைப் பாத்திரம்; தூற்றப்பட வேண்டிய தூர்த்தன்’-இப்படி ஓர் கூட்டம். இப்படி இரண்டு கட்சிகள் நாட்டிலே இருந்தாலும், இராமனையும், இராமாயணத்தையும் போற்றுபவர்களும் சரி, தூற்றுபவர்களும் சரி, சம்பூர்ண இராமாயணத்தை ஓர் முறையாவது பார்க்காமல் விடமாட்டார்கள் என்பது என்னவோ நிச்சயம்!

இந்த அசைக்க முடியாத உண்மையில் நம்பிக்கை அளவில்லாமல் வைத்துத்தான், லட்சக்கணக்கிலே பணத்தை வாரியிறைத்து, சம்பூர்ண ராமாயணத்தைப் படமாக்கியிருக்கிறார், அதிபர் திரு. எம். ஏ. வேணு. அவரை ‘நால்வர்’ நாட்டிற்கு அறிமுகப்படுத்தியது; ‘முதலாளி’ புகழேணியின் உச்சியில் அமர்த்தியது; இந்த ‘சம்பூர்ண ராமாயணமோ’ அந்த இடத்தில் அவரை நிரந்தரமாக்கி விட்டது. 1958-ம் வருடத்தில் வெளியிட இக்கதையைத் துணிச்சலுடன் எடுத்த அவருக்கு நமது பாராட்டுக்கள்.

கதை:— உலகம்-அறிந்தது. அந்தக் கதையைக் கவர்ச்சி குன்றாமல், கலைஞர் நாகராசன், திரைக்கு மாற்றியுள்ளார். கவிச் சக்கரவர்த்தி கம்பனின் காவியத்தை ஒட்டியே நடை போடுகிறது, வசனம். காவியத்தை ரசித்தவர்கள், இந்தத் திரை ஓவியத்தையும் பாராட்டவே செய்வார்கள், உதாரணமாக ‘‘நின்னொடும் ஐவரானோம்’’ என்று குகனிடம் இராமன் சொல்லுவதும், ‘‘கொள்ளார் தேயம் கொடுத்த கொற்றமாக’’ விபீடணனுக்கு, இலங்கையை இராமன் வழங்குவதும், விபீடணன் இராவணனை இடித்துப் பேசுவதும், கம்பநாடனின் செய்யுள் கருத்துக்களை ஒட்டியே அமைக்கப் பட்டிருப்பது சிறப்புற அமைந்துள்ளது.

ஆனால்—கம்பநாடனின், பாடல்களிலேயே ஒன்றிரண்டை இசையமைக்காது விட்ட குறையையும் உணரவே செய்கிறோம்.

இசையமைப்பில் பொதுவாகவே இன்னும் அதிக கவனம் செலுத்தி

'ஏனடி ! ஜானகி ! இன்னுமா உன் எண்ணம் மாறவில்லே?'
(சம்பூர்ண ராமாயணம்)

யிருக்கவேண்டும். பாமரரைக் கவரும் பாட்டெதுவும் படத்திலே இல்லே.

"நடிப்பிலே முதல் இடம் பரதனுகத் தோன்றும் சிவாஜிகணேசனுக்கே !" நாடே கூறிவிட்ட இந்தத் தீர்ப்பை நாமும் ஊர்ஜிதம் செய்கிறோம்.

கம்பீரமாக உலவிவரும் இராமன் இராமராவ். சோகக் கட்டங்களில் சோபிக்கவில்லே.

சீதை பத்மினிக்கு நடிப்புத் திறன் காட்ட சந்தர்ப்பங்களும் குறைவு; கிடைத்த இடங்களும் பூரணமாகப் பத்மினியால் பயன்படுத்தப்படவில்லே.

இலக்குவனுக வரும் நரசிம்ம பாரதி, சூர்ப்பனகை எம். என். ராஜம், தசரதன் நாகையா,— நன்ருகவே செய்திருக்கின்றனர்.

கைகேயியாக ஜி. வரலட்சுமியைத் தேர்ந்தெடுத்தது மிகவும் பொருத்தமே! மண்டோதரியாக, சந்தியா நன்கு நடித்திருக்கிருர்.

இராவணன்—சிக்கல் நிறைந்த ஓர் பாத்திரம்; குணசித்திர நடிகர்

பகவதி 100% அந்தப் பாத்திரத்தைப் படம் பிடிப்பதில் வெற்றி பெற்று விட்டார்.

கைகேயின் மனப் போராட்டத்தைச் சித்தரிக்கும் ஆரம்ப கட்டமும், இராவணனது இசைப் பயிற்சியை விளக்கும் இடமும், தோல்வியை முதன் முறையாகச் சுவைத்தபின் சிவபிரான் அடியில் அவன் சிந்தை செலுத்தும் காட்சியும், பரதன் தோன்றும் எல்லா இடங்களும்—படத்தில் சிறந்து விளங்குகின்றன.

எளிதில் தீர்த்திருக்கக் கூடிய குறைகள் பலவற்றை, கவனியாது விட்டுவிட்டார்கள்.

சோளியும், சூடெக்ஸும் அணி செய்ய நிற்கும் சீதையைப் பார்த்ததும், 'ஏம்மா...சீதே! டயம் என்ன?' என்று கேட்கும் 'நாமிருவர் வசனம் நினைவுக்கு வருகிறது! அதுமட்டுமா அந்தோ பரிதாபம்!' அநுசுயை 'மேக்கப்'! அசோகவன 'அட்டை' மரங்கள் ளைகளை உறுத்துகின்றன. இலட்சக்கணக்கான பணம் செலவழித்தாலும் 'யதார்த்தமாக'த் தோன்றும்படி செலவழிக்க கற்றுக்கொள்ள வேண்டாமா?

'கிரீஸின் புகழ் வாய்ந்த இலக்கியங்களான 'இலியட்டையும்' 'ஒடெஸ்ஸியையும்', இந்தியாவின் இராமாயணத்தோடும், மகாபாரதத்தோடும் ஒப்பிட முற்படுவது, கிரீஸின் பகுதியான தெஸ்ஸலே நாட்டு மலை ஓடைகளை இந்தியாவின் மகத்தான கங்கை, சிந்து நதிகளுடன் ஒப்பிடுவது போல முட்டாள் தனமானது' என்று ஓர் ஐரோப்பிய அறிஞர் கூறினர்.

அத்தகைய உலக மகாகாவியமாகிய இராமாயணம், அதுவும் சம்பூர்ணமாக எடுக்கப்பட்டது—சம்பூர்ண வெற்றி பெறப்போவது நிச்சயமே!

—ரசிகன்.

ஜெமினியின்

வஞ்சிக்கோட்டை வாலிபன்

ஜெமினியிலிருந்து வெளிவரும் எந்தப்படத்தையும் ஆவலுடன் எதிர்பார்ப்பது நமது ரஸிகர்களுக்கு வழக்கம்தான். அவர்கள் ஆவலைப் பூர்த்தி செய்து திருப்தி தரும்படியாகவேதான், குழலூதும் இரட்டையர்களும் நல்ல படங்களுக்கே 'முதல் ஒலி' முழங்குவதும் வழக்கமாக இருந்து வருகிறது. வஞ்சிக்கோட்டை வாலிபனும் அந்த ரகத்தைச் சேர்ந்த சிறந்த பொழுது போக்குப் படமே.

கதை கலப்படமானது; 'மான்டி கிரிஸ்டோ'விலிருந்து 'மார்க் ஆப் ஸாரோ' வரை எல்லா 'ரொமான்ஸ்' கதைகளில் வரும் திருப்பங்களும் தாராளமாக இடம் பெற்றுள்ளன, இக்கதையில்; ரசிகர்களுக்கு அலுப்புத் தட்டக் கூடாது' இந்த ஒரே நோக்கத்துடன் எல்லா இலாகாக்களையும் செயல்பட வைத்திருக்கிருர், திரு. வாசன். கதை இலாகாவும், இதில் அடக்கம் தானே!

வசனம் கொத்தமங்கலம் சுப்புவின் பொறுப்பிலே விடப்பட்டுள்ளது. 'தென் மலைப் பாக்கு வெட்டி' என்று படம் தொடங்கும் பொழுதே சுப்புவின் கைவண்ணம் மணக்கத் தொடங்கி விடுகிறது. கச்சிதமாக, கட்டங்களுக்குத் தக்கபடி எழுதி இருக்கிருர்.

நட்சத்திர நடிகைகள் பத்மினியும், வைஜயந்தியும் சக்கைப் போடு போட்டிருக்கிருர்கள்; போட்டி

நடனக் காட்சி ஒன்றுக்கே, எல்லோரும் 'வஞ்சிக் கோட்டை வாலிபனை'ச் சந்ததாக வேண்டும். தமிழ் நாட்டில், வைஜயந்திக்கு, 'வாழ்க்கை'க்குப் பிறகு இது தான் வெற்றிப் படம். அவரது உடல் கட்டிலிருந்து, உணர்ச்சி நடிப்பு வரை எல்லாம் பயன்படுத்தப் பட்டுள்ளன!

பத்மினியும் பாத்திரத்தை உணர்ந்து நன்கு நடித்திருக்கிறார். ஆனால் வைஜயந்தியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பத்மினி தனது முழுத் திறனையும் காட்டாத குறை 'பளிச்' எனத் தெரிகிறது! கதாநாயகனாக வரும் ஜெமினி கணேசன், பல வேடங்களில் தோன்றி பொருத்தமாகச் செய்து இருக்கிறார். நாவலராக நடிக்கும் டி. கே. ஷண்முகத்தின் வீர முழக்கம் மன எழுச்சியூட்டுவதாக அமைந்து விட்டது.

தங்கவேலு, முத்துலெட்சுமி, சுப்பையா, சுந்தரிபாய் ஜோடிகளும், வில்லன் வீரப்பாவும், துணை வில்லன் டி. கே. ராமச்சந்திரனும் முக்கிய நடிகர்கள் சோபிக்க நன்கு வகை செய்கிறார்கள்.

சிறிது நேரமே தோன்றி மறைந்தாலும், விஜயகுமாரியின், 'கணீர்' என்ற பேச்சும், கச்சிதமான நடிப்பும், உள்ளத்தை அள்ளுகின்றன. சோகச் சித்திரமாக வரும் கண்ணாம்பா, பெண் மனம் கொண்டவர்களை நிச்சயம் ஒரு சொட்டுக் கண்ணீராவது சிந்தச் செய்து விடுகிறார்.

பாடல்களில் 'அன்னை வருவாளோ' என்ற பாட்டும், 'ராஜா மகள்' என்ற பாடலும் ரசிகர்கள் நன்மதிப்பை நிச்சயம் பெறும்.

காட்சி அமைப்புகளும், மற்ற கலை நுணுக்க அம்சங்களும் நன்கு அமைந்துள்ளன. ஜெமினி என்றால் கேட்கவா வேண்டும்?

மொத்தத்தில், 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' புதுமை எதுவுமில்லாத ஓர் பொழுது போக்குப்படம். பல அம்சங்களில் 'சந்திரலேகாவின்' சகோதரன்!

—'ரசிகன்'

தோகை விரித்த கலாபம் போல் துவண்டாடும் பத்மினி!
(வஞ்சிக்கோட்டை வாலிபன்)

"ஓடி விளையாடு பாப்பா"

மகாகவி பாரதியின் நாடறிந்த சொற்றொடரைத் தலைப்பாகக் கொண்டுள்ள இப்படம், ஜெகத் ஜோதி பிலிம்ஸாரால், பிலிம்சென்டர் ஸ்டுடியோவில் சுடப்பட்டு வருகிறது. புரட்சிக் கருத்துக்கொண்ட புதுமை எழுத்தாளனாக எஸ். எஸ். ராஜேந்திரனும், அவரது மனைவியாக ஜி. சகுந்தலாவும் நடிக்கிறார்கள். 'முதலாளி' புகழ் திரு வி. ஸ்ரீனிவாசனின் டைரக்ஷனில், இப்படம் வளர்ந்து வருகிறது. பி. சரோஜாதேவி, ஈ. ஆர். சகாதேவன், டி.கே.பாலச்சந்திரன், கே. மோகன், சிவசூரியன், கன்னையன், கே. எஸ். அங்கமுத்து ஆகியோரும் இப்படத்தில் தோன்றுவார்கள்.

"கடன் வாங்கிக் கல்யாணம்"

விஜயாவின் 'கடன் வாங்கிக் கல்யாணம்' கூடிய விரைவில் வெளியிடப்படுமெனத் தெரிகிறது. பல வெற்றிகரமான படங்களைத் தயாரித்து நாட்டிற்கு அளித்துள்ள நாகிரெட்டி சக்கரபாணியின் இந்தத் தயாரிப்பு, ரசிகப் பெருமக்களுக்கு ஓர் நல்விருந்தாக அமையும் எனக் கூறப்படுகிறது. ஜெமினி கணேசனும், சாவித்திரியும் கதாநாயகன், நாயகியாக நடிக்கிறார்கள். குணசித்திர நடிகர்கள் ரங்கா ராவ், பாலையாவும் இப்படத்தில் பங்கு கொண்டுள்ளனர். 'அலக்கிரஞ்சன்!' என்று கோஷம் போட்டு, ரசிகர்களை குலுங்கச் குலுங்கச் சிரிக்க வைக்கப் போகிறார் தங்கவேலு. டி. ஆர். ராமச்சந்திரன் ஜமுனா, ஏ. கருணாநிதி, முத்துலெட்சுமி, சாரங்கபாணி, ஏழுமலை, வாதிராஜ் ஆகியோரும் தோன்றும் இந்த முழு நீள ஹாஸ்யப் படம், பிரபல பிரசாத்தால் டைரெக்ட் செய்யப்படுகிறது.

"நாட்டுக்கொரு நல்லவள்"

மெஜஸ்டிக் பிக்சர்ஸாரின் 'நாட்டுக்கொரு நல்லவள்', 'நாட்டுக்கொரு நல்ல நாளா'கிய ஆகஸ்டு 15ந் தேதி திரைக்கு வருவாள் என்று தெரிகிறது. 8000'க்கு மேல் அவள் வளர்ந்து விட்டாளாம்! இலட்சிய நடிகர் இராஜேந்திரன், குணசித்திர நடிகர்கள் பாலையா, சகஸ்ரநாமம், பண்டரிபாய் ஆகியோரும், முன்னணிக்கு விரைவில் வந்துவிட்ட விஜய குமாரியும் இப்படத்தை அணிசெய்யும் நட்சத்திரங்கள். பிரசித்தி பெற்ற ஆச்சார்ய ஆத்ரேயாவின் கதைக்கு பி. எக்ஸ். ரெங்கசாமி வசனம் எழுதியுள்ளார். ஸிட்டாடல் ஸ்டுடியோவில், தசரத ராமையாவின் டைரக்ஷனில் இப்படம் வளர்ந்து வருகித்து.

"பிள்ளைக்கனியமுது"

பி. எஸ். வி. பிக்சர்ஸாரின் 'பிள்ளைக்கனியமுது,' எம். ஏ. திருமுகத்தின் டைரக்ஷனில், பாரமவுண்டில் வளர்ந்து வருகிறது. இனிக்கும் தலைப்பைப் பெற்றுள்ள இப்படத்தில், ஈ. வி. சரோஜா, ராஜேந்திரன் முக்கிய பாத்திரங்கள். பி. எஸ். வீரப்பா, எம். என். ராஜம் ஆகியோரும் நடிக்கிறார்கள். தலைப்பைப் போலவே படமும் மிகவும் ரசமாக இருக்கும் என்று தெரிகிறது.

"சுவீகாரம்"

உத்திரா பிலிம்ஸாரின் 'சுவீகாரம்' வாஹினி ஸ்டுடியோவில், வி. எஸ். நாராயணன் டைரக்ஷனில் பிடிக்கப்பட்டு வருகிறது. பாலையா, சிவாஜி கணேசன், எம். கே. ராதா, தங்கவேலு, மோகன், ஸ்ரீரஞ்சனி, கண்ணாம்பா, ராஜசுலோசனா, சந்திரகாந்தா ஆகிய நட்சத்திர திலகங்கள் நடித்துவரும் இப்படத்திற்கான கதை வசனத்தை பாலையாவும், பி. எக்ஸ். ரெங்கசாமியும் கூட்டாக எழுதியுள்ளார்கள்.

"தாய்க்குலம்:"

அண்ணா பிலிம்ஸாரின், 'தாய்க்குலம்,' கோல்டன் ஸ்டுடியோவில் வேகமாக வளர்ந்து வருகிறது. தாய்க்குலத்தின் பெருமைகளை விளக்கும் இச்சித்திரத்தில், எஸ். எஸ். இராஜேந்திரன். டி. கே. பாலசந்திரன், அசோகன், பண்டரிபாய், சந்திரகாந்தா முதலியோர் நடித்து வருகிறார்கள். டி. பி. சுந்தரம் டைரக்டராகவும், ஏ. எஸ். முத்து கதை, வசனகர்த்தாவாகவும், பணியாற்றி வருகிறார்கள்.

"திருடர்கள் ஜாக்கிரதை!"

ஆச்சார்ய ஆத்ரேயாவின் சிறந்த இக்கதையை, பி. என். ஆர். டைரக்ஷனில் பிரதீபா பிச்சர்ஸார் உருவாக்கி, விரைவில் வெளியிடப் போகிறார்கள் என்று தெரிகிறது. வெளியீடு உரிமைகள் பூரணமாக சீதா பிலிம்ஸாருடையவை. எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், டி. எஸ். பாலையா, காகா ராதாகிருஷ்ணன், வி. கே. ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், சாயிராம், ஜி. வரலெட்சுமி, ஜி. சகுந்தலா, கிரிஜா ஆகியோர் நடித்துள்ள இப்படத்தின் வசனத்தை பி. எக்ஸ். ரெங்கசாமி எழுதியுள்ளார்.

பாண்டியன் லாட்ஜ்

பெஸ்ட் பிரியாணி சாப்பாடு ஹோட்டல்

8, வெங்கலக்கடை தெரு,

மதுரை.

N. B: கோழிப் பிரியாணி, கோழிச் சாப்ஸ்,

புரூச் சாப்ஸ்

தினசரி கிடைக்கும்.

திங்கள், சனிக்கிழமைகளில் வான்கோழிப் பிரியாணி, வான் கோழிச் சாப்ஸ் கிடைக்கும்

Prop - P.K.S.S.

TRADE MARK
Regd. No. 161859

மதுரை நாடார் கடை

M. N. P.

லிங்க மார்க்

சுருட்டுகள்

M. N. P. லிங்க மார்க் பட்டணம் பொடி, துண்டு, நைஸ், சிவபுரிபாளை தயாரிப்புகளை உபயோகித்து இன்புறுங்கள்.

M.N.P.N. & M.N.P.T.

மதுரை.

இத்தகைய ஓர் சீடன் கிடைத்தால், கணேசன் ஏன் தவம் செய்ய மாட்டார்?
விஜயாவின் 'சடன் வாங்கிக் கல்யாண'த்தில்

கண்ணோடு கண் பொருத்தி களி கொள்ளும் ஈ வி. சரோஜாவும் பாலாஜியும். (இராஜேஸ்வரி பிலிம்ஸ் சுமங்கலி'யில் ஒரு காட்சி)

பண்டரிபாயும், விஜயகுமாரியும் 'நாட்டுக்கொரு நல்லவளி'ல்

'கடன் வாங்குவதும் ஓர் கலை' என்கிருரோ பாலையா, தங்கவேலுவிடம்!'
(விஜயாவின் 'கடன் வாங்கிக் கல்யாண'த்தில்)

ஜெகஜோதி பிலிம்ஸ் 'ஓடி விளையாடு பாப்பா'வில்
மோகன்—ஜி. சகுந்தலா.



'சற்றே என்னைப் பாராய்!'
(ஸ்ரீராம்—சந்திரகாந்தா சதர்ன் மூவீஸ் 'மாய மனிதனி'ல்)

நாடக மேடையிலே!

சென்ற மார்ச் மாதம் 22ந் தேதி யன்று, மயிலாப்பூர் ஸ்ரீ சாயி கலா மண்டபத்தில், சாரதி சகோதரர்கள் 'முல்லை நாட்டு மலையமான்' என்ற சரித்திரக் கற்பனை நாடகத்தை அரங்கேற்றினர்கள். மலையமானுகத் தோன்றிய திரு. ஏழுமலையும், மல்லிகாவாக நடித்த குமாரி ராஜேஸ்வரியும் திறம்பட நடித்தார்கள். புவனகிரி பேபி ஸி. எஸ். பிரபாவின் நடனமும் நன்கு அமைந்திருந்தது.

*　　*　　*

பொறையார் சக்தி விலாஸ் திறந்த வெளி அரங்கில், பொறையார் ஆபீசர் கிளப்பின் ஆண்டு விழாவை முன்னிட்டு, தரங்கை போதனு முறைப் பள்ளி மாணவர்களால், 'ஸி. ஐ. டி. கண்ணப்பா' என்ற நாடகம் நடிக்கப் பெற்றது. அநுபவம் பெற்ற நடிகர்கள் போல மாணவர்கள் சிறப்புற நடித்தார்கள். செல்விகள் வனஜா, புனிதா, விஜய சீலி ஆகியோரின் நடனங்கள் நன்கு அமைந்திருந்தன.

வேலாயுதம், அதிருஷ்டம்' பிச்சைப் பிள்ளை, ஹசனுதீன் செயராமன், செல்லமுத்து, தியோடர், கனகசபை, இராசசேகரன்; ஆகியோர் நடித்தார்கள். டைரக்டர் டி. எஸ். தேவதாஸ், தனது முழுத் திறமையும் வெளிப்பட பணியாற்றி யிருந்தார்.



('ஸி. ஐ. டி. கண்ணப்பா' வசனகர்த்தா : பா. சு. தருமராசு, ஆர்ட் டைரக்டர் ; ஆர். டி. செல்லப்பா, டைரக்டர் : டி. எஸ். தேவதாஸ் ஆகியோர்.)

நாடெங்கிலும் வெற்றிக் கொடி நாட்டியுள்ள, செல்வா தியேட்டர் ஸாரின், 'குறத்தி' நாடகத்தின் பொன் விழா 5-4-'58ல் மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது. கதாநாயகன் ஞானமணியாகத் தோன்றிய வி. என். சம்பந்தம், எழுத்துக் கலையுடன், நடிப்பும் தனக்குச் சொந்தமே என்று விளக்குவது போல் சிறப்பாகச் செய்தார். துள்ளித் துள்ளிக் குறத்தியாக ஓடிய திருமதி பி. கே சரஸ்வதி, 'அந்தமான் கைதி'யையும், முனிவராக வந்த பொழுது, 'சுந்தரகோஷை'யும் நினைவுபடுத்தினர், இந்த நடிப்பைப் பூரணமாக தமிழ் சினிமா உலகம் பயன் படுத்தவில்லையே!என்று பார்த்தவர்கள் வருந்தும்படி, சிறந்திருந்தது அவரது அன்றைய நடிப்பு. காந்தரூபனாகத் தோன்றிய, திரு. பாலகிருஷ்ணன், ரசிகர்களைக் குலுங் கக் குலுங்கச் சிரிக்கச் செய்தார்.

ஸி. ஐ. டி. கண்ணப்பாவில்
நடன விருந்து நல்கிய பேபி வனஜா.

காட்சி அமைப்புகளில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். வளர்க, 'செல்வா தியேட்டர்ஸா'ரின் கலைப்பணி !

* * *

சென்னை, தியாகராய நகர் வாணி மஹாலில், தமிழ் வருடப் பிறப்பைக் கொண்டாட, 'வாணி அமெச்சூர்ஸ்' நடிகர்கள், 'சங்கீத ஆசிரியை' என்ற சமூகக் கதையை அரங்கேற்றினர்கள். திரு. ஏ. ஸி. ஸ்ரீனிவாசன் கதை வசனத்தை அமைத்திருந்தார். வசனங்கள் பழகு தமிழ் நடையில் இனிமையாக ஒலித்தன. கனகசபையாகத் தோன்றிய கிருஷ்ணமூர்த்தி ராவ் ஓர் சிறந்த குணசித்திர நடிகர். முரளியாக வந்த திரு. வெங்கட்ராமன், ஹேமாவாக நடித்த விஜயலெட்சுமி ஆகியோரும் திறம்பட நடித்தனர். பெண் வேடத்தைத் தாங்கிய திரு. சௌந்தரராஜனுக்கு குரல் பொருத்தமிருந்ததே தவிர, மிக முக்கியமான முக வெட்டு இல்லாதது பெரும் குறையாகப் பட்டது. ஒரே வாரப் பயிற்சியில் இந்த அளவிற்கு நாடகத்தைத் தயார் செய்த டைரக்டர் ஸி. ரெகுநாதன் அவர்களுக்கு நமது மனமார்ந்த பாராட்டுக்கள் !

பொருளாதார வருவாய் கருதாது, கலைப்பணி ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, சிறந்த முறையிலே பணியாற்றிவரும் இந்த நாடக மன்றத்தார், இன்னும் பல சிறந்த நாடகங்களை நாட்டிற்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES

DRAWING FRAMES

FLY FRAMES

RING SPINNING FRAMES

REELING MACHINES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

ENQUIRIES SOLICITED

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone: 409 & 1409

Telegrams: "TEXTOOLCO"

நாட்டியம்

ரஞ்சன், பி.ஏ., எம். லிட்.

நிருத்தியம்:—நடனுடைய அங்க அசைவுகளும் முகத்தோற்றமும் ஏதேனும் கருத்தை வெளியிட்டுச் சுவையும் நுகர வைப்பதாக அமையுமானல், அந்நிலே பொருந்திய நடனத்தை நிருத்தியம் என்றழைக்க வேண்டும். மூவகை நடனத்துள், இதுவே தலைசிறந்ததும், முக்கியத்துவம் உள்ளதும் ஆகும்.

'தாண்டவம்' 'லாஸ்யம்' என நிருத்தியம் இருவகைப் படும்.

ஆண்மை நிறைந்த கருத்துக்களை வெளியிடும் சுவையுடைய நிருத்தியத்தைத் 'தாண்டவம்' என்று அழைக்கிறோம்.

'பெண்மைக்' கருத்துக்களை வெளியிட அமைந்த நிருத்திய வகையை 'லாஸ்யம்' என்றழைக்கிறோம்.

சிவ பெருமான் முதன் முதலாகத் தண்டு முனிவருக்கு அருள, அவர் மூலம் பரவிய நிருத்திய வகையாதலால் 'தாண்டவம்' எனக் காரணப் பெயர் கொண்டது இவ்வகை.

உமையவள், உள்ளமுருகும்படி, ஒளியுள்ளதாக, இன்பப் பெருக்காகப் பெண்மை கலந்துவெளியிட்ட நிருத்தியவகை 'லாஸ்யம்' எனக் காரணப் பெயர் கொண்டது. 'லஸ்' என்ற வினைப்பகுதிக்கு ஒளியுடைத்தலால் என்பது பொருள்.

நிருத்தம்:—கருத்தை வெளியிடும் முறையில் அமையப் பெருத நடனம் 'நிருத்தம்' எனப்படும். இதற்கு லயம் முக்கியமானது. நடனத்தில் தக்க சூழ்நிலே உண்டாக்குவது இதன் நோக்கமாகும். மனஒருமைக்கு வேண்டிய வசதியைத் தாளக்கட்டுடன் அமைந்த நிருத்தம் அமைத்துத் தருகிறது. கருத்துக்களை ஒன்ருேடு ஒன்று கலந்து குழப்பிவிடாமல், இடையே வழி செய்து அதன்மூலம் "அடுத்தபடியாக வரும் கருத்தை ஆர்வத்துடனும் தாகத்துடனும் எதிர் நோக்கியிருக்கும்படி" சபையோர்களுக்கு வழி செய்வதாகும் இந்த நிருத்தம்.

அபிநயம்:—அபிநயம் என்பது ஒருவடமொழிச் சொல். 'அபி' என்ருல் முன் என்று பொருள். 'நயம்' என்ற பதத்தின் வினைப்பகுதியான "நீ" என்பதற்கு "அடைவித்தல்" என்பது பொருள்.

ஆதலால் 'அபிநயம்' என்ருல் பார்ப்பவர்கள் முன் ஒரு கதாவஸ்துவைக் கொண்டு வருதல்—அல்லது விளங்க வைத்தல். நாடக பாத்திரங்களின் சரீர ஆன்மீக நிலேகளை பாவரூபத்தில் கண்முன் கொண்டுவருதல் என்று பொருள் கொள்ளலாம். நவரஸங்களுக்குரிய கருத்துக்களை அங்க அசைவுகளாலும், முக பாவத்தாலும் வெளியிடுதல் என்றும் சொல்லலாம். படித்து ரசிக்க முடியாத மனேகரமான அம்சங்களைத் தெளிவுபடச் செய்வது தான் அபிநயம். ஆகவே, பாத்திரங்களுடைய பலவித மனேநிலேகளையும் பிரதிபலிப்பதே அபிநயமாம்.

பண்டைக்காலத்து நாட்டிய நாடகங்கள் மிகவும் உன்னத நிலேயில் இருந்தன என்பதை இவ்வபிநயத்தின் நுணுக்கங்களைத் தெளிவாக அறிந்து கொள்வதன் மூலமாகவே உணருதல் கூடும்.

அபிநயமானது, ஆங்கிகம், வாசிகம், ஆகார்யம், சாத்விகம் என நான்காகப் பிரியும்.

ஆங்கிக அபிநயம்: — அங்கங்களைப் பற்றியது ஆங்கிகம். "ஒரு குறிப்பிட்ட பாத்திரம் எப்படி அங்கங்களை அசைக்கவேண்டும்" என்று இப்பகுதி விளக்குகிறது. குறிப்பிட்ட அபிப்பிராயத்தை விளக்க குறிப்பிட்ட ஜாடைகளை ஆங்கிகத்தில் திட்டம் செய்திருக்கிறபடியால், ஒரு நடன் சொந்தமாக கற்பனை செய்ய வேண்டிய தேவையில்லை. ரசிகர்கள் அவனிடம் அபிநய சாஸ்த்திரத்தில் குறிப்பிட்டுள்ள முறைகளை எதிர்பார்க்கிறார்களே யல்லாமல், சொந்த கற்பனைகளையல்ல. கரைகண்ட ஆசாரியர்களால், குற்றம் குறையில்லாமல் வகுக்கப்பட்டிருக்கும் திட்டங்களை மாற்ற அதிகாரம் இல்லை, ஒரு நடனுக்கு. ஆயினும் அந்தத் திட்டங்களின் எல்லைக்குள்ளாகவே, லாவகமாகவும், அழகியதோற்றங்களுடனும், அங்க அசைவுகளைப் பலவிதமாகக் காண்பிக்கக் கூடிய வகைகள் அடங்கி இருக்கின்றன;

ஆங்கிக அபிநயத்தில் அங்கம், ப்ரத்யங்கம், உபாங்கம் என்ற சிறப்பான மூன்று அங்க உறுப்புகள் உபயோகப்படுகின்றன. தலை, கைகள், மார்பு, பக்கங்கள், இடுப்பு, பாதங்கள் அங்கம் என அழைக்கப்படும். ஒருசாரார் அங்கத்தில் கழுத்தையும் சேர்த்துக் கூறுகின்றனர். புஜங்கள், முன்கைகள், முதுகு வயிறு, துடைகள், முதலியன ப்ரத்யங்கங்களாம். முழங்கைகள், முழங்கால்கள், கழுத்து இவைகளையும் ப்ரத்யங்கங்களில் சேர்ப்பாருமுண்டு. கண், புருவம், விழி, கன்னம், மூக்கு, தாடை, பல், நாக்கு முகவாய்க் கட்டை இவைகள் உபாங்கங்களாம்.

ஓர் அங்கம் அபிநயத்தில் உபயோகப்படும் போது ப்ரத்யங்கங்களும், உபாங்கங்களும் உடனுகவே உபயோகத்தில் வரும். எல்லா உறுப்புக்களையும் சமயத்திற்குத் தகுந்தாற்போல் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டியது அபிநயம் செய்பவரின் கடமை.

197693

தென்னாட்டின் தலைசிறந்த அச்சகம்

நேஷனல் லித்தோ பிரஸ்

ரயில்வே பீடர் ரோடு, :-: சிவகாசி.

தபால் பெட்டி நெ. 30

போன்: **58 & 75** தந்தி: **"லித்தோகிராப்"**

அழகான முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு எங்களது அச்சகத்தில் **தீப்பெட்டி, பீடி, மில், சோப், பயர் ஒர்க்ஸ்,** ஜவுளி, காபி, டீ, மிட்டாய், சோடா முதலியவைகளுக்குரிய லேபிள்கள், வால் போஸ்டர்கள் மற்றும் கார்டூன்களும், லித்தோவிலும், ஆப்செட்டிலும் பிரிண்டு செய்து கொடுக்கக்கூடும். காலண்டர்கள், பலவர்ணப் படங்கள், போட்டோ ஆப்செட்டில் தயார் செய்து கொடுக்கிறோம். கவர்ச்சிகரமான பல வர்ணங்கள் கொண்ட பூ பார்டர்கள் உள்ள கலியாண பத்திரிகைகள் ரெடிமேடாக ஸ்டாக் வைத்திருக்கிறோம்.

கிரீஸென் பிரிண்டிங் இங்க் பேக்டரி

'கிரிஸென்' லித்தோ & ஆப்ஸெட் இங்க் தயாரிப்பாளர்கள்,

"இங்கோகிராப்" :: **சிவகாசி**

Phone Nos. Madurai 356 Periakulam 22
Kodaikanal 56 Ammayanaickanoor,
(Kodairoad) P.C.O. Extension 1

Avail your immediate opportunity to visit

KODAIKANAL

FAMOUS HEALTH RESORT IN SOUTH INDIA
AT 7000 FEET.

OUR BUSES & LORRIES PLY TO KODAIKANAL

FROM:

MADURAI — PERIAKULAM — DINDIGUL & KODAIKANAL ROAD,

Our buses provide comfortable journey over the distance of fifty miles (20 miles on plains & 30 miles on picturesque ghat section full of Natural Sceneries). The buses are plying at convenient timings, start at the correct time and reach the destination in time.

Note. Tickets are issued direct to the hill station Kodaikanal from all stations in India and Ceylon. Return tickets are issued by the railway during season period at a concession rate for visiting Kodaikanal.

We are plying regular lorry service to other important stations besides our many bus-routes connecting important places in Madurai and Ramnad Districts.

Kodaikanal,
1st May 1958.

J. PERIYANAYAGAM,
Managing Director,
Kodaikanal Motor Union (Private) Ltd.

பீடி சக்கரவர்த்தி
தூ.பி.சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
RAMSAIT
BEEDI
ராம்சேட்
பீடி
INDIA No.5901
CEYLON No.5929
BY
RAJAN & Co. SVKS.

ஸ்ரீ பாலராமவர்மா

டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,384

மேற்கொண்டு நிர்மாணிக்கும்
கதிர்கள்: 3,472

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி
உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான
துணியையும் பொறுத்திருக்கிறது.
எங்கள் ஆலை மிக நேர்த்தியான
உயர்ரக நூல்களை
விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் &

ரங்கசாமிநாயுடு ஸன்ஸ் கம்பெனி

தந்தி : 'ஜுவல்லர்ஸ்' போன் : 49



பவுன், தங்கம், வெள்ளி,

வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

கிளைகள் : சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.